# கனவில் வந்த தேவதை!



ஜெய்சக்தி

# கனவில் வந்த தேவதை!



## 1

"நல்லா யோசிச்சுக்கங்கம்மா..!" என்றார் ஏட்டு சிங்காரம்.

பிரபாவதி சலனமில்லாமல் நின்றார். சிங்காரம் மறுபடியும் சொன்னார்.

"அம்மா..! சப் இன்ஸ்பெக்டர் கொஞ்சம் வேலையாப் போயிருக்காரு! இப்ப வந்துருவாரு! அதுக்குள்ள இது தேவையான்னு யோசிச்சுக்கங்க" என்றார்.

"அவரு வர வரை நான் நின்னுகிட்டேதான் இருக்கணுமா?" என்றார் பிரபாவதி. அருகில் நின்ற இனியனைப் பரிதாபமாகப் பார்த்தார் சிங்காரம்.

இனியன் அழுத்தமாகப் புன்னகைத்தான்.

"நல்லா யோசிச்சுட்டுத்தான் அம்மா வந்திருக்காங்க" என்றான் இனியன்.

"சரி உட்காருங்க!" என்றார் ஏட்டு. அவர்கள் அமர்ந்திருந்த அந்தக் கால இடைவெளியில் ஏட்டு ஓரக் கண்ணால் பார்த்தார்.

பிரபாவதி அழுத்தமாக அமர்ந்திருந்தார். கழுத்தில் வழக்கமில்லாத வழக்கமாக தாலிக் கொடிக்கு பதிலாக மஞ்சள் கயிறு தொங்கியது. கூட ஒன்றிரண்டு செயின்கள் இருந்தன. ஆனால் மஞ்சள் கயிறு பளிச்சென்று தெரிந்தது.

பிரபாவதி அம்மாவின் தோற்றத்திலேயே ஒரு கம்பீரம். முகத்தில் இந்தப் பிரச்சினையின் போது கூட ஒரு சாந்தம் தெரிந்தது. தோற்றத்தில் கம்பீரம் இருந்ததைப் போலவே கண்களிலும் -

'பாவம்! இந்த அம்மாவுக்கு இப்படியொரு நிலைமை' என்று பெருமூச்செறிந்து கொண்டான் சிங்காரம்.

அருகில் அமர்ந்திருந்த இனியனையும் பார்வையில் அளவெடுத்தார். வேட்டி சட்டையில் இருந்தான். அரும்பு மீசை! அவனுக்கும் கம்பீரத்திற்கு ஒரு குறைவும் இல்லை. நிறம் கொஞ்சம் மாநிறம்தான். ஆனால் அம்மாவிடம் இருந்த அதே அழுத்தமும் கம்பீரமும் மகனிடமும் இருந்தது.



பிரபாவதியின் சகோதரர் ஆளவந்தான் ஊரில் அறியப் பட்ட புள்ளி. அதனால் சிங்காரம் கொஞ்சம் தள்ளி மரியாதையாகவே நின்றார்.

இன்ஸ்பெக்டர் கண்ணன் உள்ளே வந்தார். ஏட்டு எதிர் கொண்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"ஐயா! ஆளவந்தான் அய்யாவோட சிஸ்டர் ஏதோ கம்ப்ளெயின்ட் குடுக்க வந்திருக்காங்க" என்றார்.

"அப்படியா?" என்று சேரில் அமரவும் பிரபாவதியும் இனியனும் வணக்கம் தெரிவித்தனர்.

இனியன் பேசுவதற்கு முன்பாகவே பிரபாவதியே வாய் திறந்தார்.

"சார்! நான் ஒரு கம்ப்ளெயின்ட் குடுக்கணும். இது என் மகன் இனியன். துணைக்கு வந்திருக்கான். நான் ஆளவந்தாரோட சிஸ்டர்" என்றார்.

"நல்லதுங்கம்மா! சொல்லுங்க!" என்றார் இன்ஸ்பெக்டர் கண்ணன். நடுத்தர வயதில் இருந்தார். யாரை எப்படி நடத்த வேண்டும் என்ற பக்குவம் அவருக்குள்ளே இருந்தது.

"என்னோட மாங்கலியக் கொடி திருட்டு போயிருச்சு" என்றார் பிரபாவதி.

"எவ்வளவு பவுன்? எங்க வச்சு திருட்டுப் போச்சு?" என்று விசாரணையில் இறங்கினார் இன்ஸ்பெக்டர்.

"வீட்ல வச்சுத்தான். பத்து பவுன் கொடி" என்றார் பிரபாவதி.

"ஓ! உங்களுக்கு யார் மேலாவது சந்தேகமா?" என்றார்.

"ஆமா."

"யார் மேலே?"

"எங்க வீட்டுக்காரர் அம்மையப்பன் மேலே" என்றார் பிரபாவதி அலட்டிக் கொள்ளாமல்.

இன்ஸ்பெக்டர் கண்ணன் ஒரு கணம் திகைத்துப் போனார்.

"அம்மா..!" என்று தயங்கினார். பிரபாவதி அசராமல் பார்த்தார்.

"அம்மா..! இது வீட்டு விவகாரம் ஹஸ்பென்ட் எடுத்துட்டாருன்னு புகார்.. கொடுத்தா.." என்று இழுக்க,

"மன்னிக்கணும் இது வீட்டு விவகாரம் இல்லே.. ஏன்னா... அவரு இப்ப எங்கூட இல்லே.." என்றார்.

இனியன் உதவிக்கு வரக் கூடுமா என்பது போல இன்ஸ்பெக்டர் இனியனைப் பார்க்க அவன் இதற்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை என்பது போல் அமர்ந் திருந்தான்.

"புரியலம்மா..!" என்றார்.

பிரபாவதி விளக்கமாகச் சொன்னார்.

* * *

"என்ன பெரிய சமையல்.. அம்மிணி அவனும் ஊர்ல இல்ல... உப்புமா பண்ணு போதும்" என்றார் பிரபாவதி.

"சரிங்கம்மா!" என்றாள் அம்மிணி.

அம்மிணி செய்த உப்புமாவைச் சாப்பிட்டு விட்டு விச்ராந்தியாக சற்று நேரம் ஹாலில் அமர்ந்திருந்தார். தோட்டக்காரன் குடும்பத்தோடு பங்களாவின் பின்புறம்



குடியிருந்தான். வாட்ச்மேனும் இருந்தான். அதனால் பாதுகாப்புக்குக் குறைவில்லை. இருந்தாலும் மகன் இனியன் இல்லாதது மிகவும் போரடித்தது.

பெரும்பாலும் இந்த நேரங்களில் மகன் உடன் அமர்ந்து எதையாவது பேசிக் கொண்டிருப்பார். பக்கத்து ஊரில் உள்ள ஒரு கல்லூரியில் பேராசிரியராகப் பணி யாற்றிக் கொண்டிருந்தான்.

நண்பனின் திருமணம் என்று ஊருக்குப் போயிருந் தான். பெரும்பாலும் இந்த நேரங்களில் அமர்ந்து வெளி உலக விவகாரங்களைப் பற்றிப் பேசுவான். கல்லூரி கலாட்டாக்களைப் பற்றிப் பேசுவான். கொஞ்ச நேரம் சிரித்துப் பேசிவிட்டுப் பிறகு உறங்கச் செல்வார்கள்.

சில காலமாகவே மகனே உலகம் என்று வாழ்ந்து விட்டார் பிரபாவதி. பிறந்த வீட்டுச் சொத்தாக வந் திருந்த இருபது ஏக்கர் நிலத்தைப் பெரிய பண்ணையாக மாற்றி அதன் நடுவேதான் குடியிருந்தார். அதனால் வாழ்க்கையில் குறைகள் இருந்தாலும் அவர் பணத் துக்குப் பெரியதாகக் கவலைப்பட்டதில்லை.

"இப்படியே வாழ்க்கை ஓட்டினால் போதும்" என்று தான் இருந்தார். ஆனால் அன்றைக்கென்று விதி வேறு ஒரு பிரச்சினையை வைத்துக் கொண்டிருந்ததை அவர் அறியவில்லை.

உறங்கப் போய் விட்டார். இரவு பனிரெண்டு மணி யிருக்கும்.

ஏதோ சலசலப்புக் கேட்டது!

சட்டென்று விழித்து எழுந்து பார்த்தார் பிரபாவதி.

கேட்டுக்கு முன்னால் காவலாளியிடம் இரண்டு மூன்று பேர் நின்று வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இனியன் அய்யாவும் இல்லே. உள்ளே விட மாட்டேன்" என்றான் வாட்ச்மேன்.

பிரபாவதி போர்ட்டிகோ 'லைட்'டைப் போட்டார்.

வாட்ச்மேன் வந்து நின்று கொண்டிருந்தான். "அம்மா.." என்றார் தயக்கத்துடன்.

"என்ன.. வாட்ச்மேன்.." என்றார் பிரபாவதி.

"அம்மா.. ஐயா.." என்று மென்று விழுங்கினார் வாட்ச்மேன் கண்ணுசாமி.

"ஐயா..வா..! யாரு இனியனா?" என்று வாட்ச்மேனைத் தாண்டித் தன் பார்வையை ஓட விட்டார் பிரபாவதி.

கொஞ்சம் அதிர்ந்து போனார்.

அம்மையப்பன்! நல்ல குடி போதையில் இருந்தார் போலும். இரண்டு மூன்று பேர் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்... காரு.. கார்!" என்று உளறிக் கொண்டிருந்தார்.

காம்பவுண்டுக்கு வெளியே கார் ஒரு மரத்தின் மேல் மோதாத குறையாக நின்றிருந்தது.

"பிரபாவதியின் முகம் கடுகடுத்தது.

"என்ன..?" என்றார் கோபமாக.

அம்மையப்பன் கூட நின்றவர்கள் "அம்மா.. இன்னைக்கு ஒரு ராத்திரி இங்க தங்கட்டும். ஆளும்



சரியில்லை. காரும் சரியில்லை..! இப்ப எங்களால கொண்டு போய் விட்டுட்டு வர முடியாது" என்று தயங்கினார்கள்.

"அதுக்கு?" என்றார் பிரபாவதி மேலும் கடுப்புடன்.

"அம்மா..! தயவு பண்ணுங்க..! என்ன இருந்தாலும் இப்படியே விட்டுட்டுப் போக மனசு வர்லை" என்னார்கள்.

பிரபாவதிக்கு எரிச்சல்தான். ஆனால் சட்டென மறுக்க விடாமல் கௌரவம் தடுத்தது.

"சரி உள்ள கூட்டிட்டு வாங்க!" என்றார்.

"அம்மிணி..." என்று உள்ளே குரல் கேட்டு அம்மிணி ஓடி வந்தாள். மற்ற வேலைக்காரர்களும் ஓடி வந்தார்கள்.

"முனியா! உள்ளேயிருந்து ஒரு கட்டில் மெத்தை கொண்டா" என்றார். அவர்களும் ஏற்பாடு செய்தார்கள்.

"சரி.. போங்க!" என்றார் உடன் நின்றவர்களிடம்.

"டிரைவர்... காரை லாக் பண்ணி சாவியை எடுத்துட்டு வா" என்று ஆணையிட டிரைவரும் அப்படியே செய்தார்.

வேலையாட்களின் உதவியுடன் ஒரு ஹாலிலே அம்மையப்பனுக்குப் படுக்கை தயார் செய்தவர் தானும் சோபாவை எடுத்துப் போடச் சொல்லி அதிலே படுத்துக் கொண்டார். அம்மிணி சற்றுத் தள்ளி சமையலறை ஹாலில் படுத்துக் கொண்டாள்.

அம்மையப்பன் என்ற அந்த மனுஷன் கட்டில் முழுக்கக் கால் பரப்பி அலங்கோலமாகப் படுத்திருந்தார்.

வேலையாட்கள் எல்லாரும் உறங்கி விட்டார்கள். பிரபாவதி சற்றுக் கழித்துத் திரும்பிப் படுத்தவள் இரவு விளக்குகள் வெளிச்சத்தில் அம்மையப்பனின் முகத்தைப் பார்த்தாள்.

நெஞ்சில் சொல்லவொண்ணா வேதனை பொங்கியது.

உரிமையாக உள்ளே வர வேண்டிய கணவர் உள்ளே வருவதற்கு வாட்ச்மேன் முதற் கொண்டு மற்றவர்கள் சிபாரிசு செய்ய வேண்டி உள்ளது.

அம்மையப்பன் வேறு யாருமல்ல கணவரேதான். ஆனால் இப்போது பிரபாவதி அவரோடு இல்லை. அது நடந்து வெகு நாட்களாகி விட்டது.

பத்து வருடங்கள் ஓடியிருக்குமா? இருக்கும்! பனிரெண்டு வருடத்திற்குப் பிறகு ஒரே அறையில் இவ்வளவு கிட்டத்தில் இந்த மனிதரை அதுவும் இப்படிப் பார்க்க வேண்டியிருந்தது என்று எண்ணிக் கொண்டு பெருமூச்சு விட்டார்.

இனியனுக்கு அப்போது பதிமூன்று வயது அல்லது பதினான்கு வயது இருக்கும். இப்போதும் கூட என்ன நடக்கிறதென்று புரியாமலே அவன் விழித்துக் கொண்டு நின்றது நினைவுக்கு வந்தது.

இப்படித்தான் அன்றைக்கும் நள்ளிரவில் வந்து சேர்ந்தார் அம்மையப்பன்.

"எங்கே.. போயிட்டு வந்தீங்க?" என்றார் பிரபாவதி கடுப்புடன்.



அம்மையப்பன் வக்கிரமாகச் சிரித்து விட்டு "ஏன்.. நான் எங்கே போனா என்ன? வீட்டில சோறு போடலேன்னா.. மனுஷன் எங்க கிடைக்குதோ அங்க சாப்பிடத்தானே செய்வான்."

"வேண்டாம் என் வாயைக் கிளறாதீங்க!" என்றார் பிரபாவதி.

"சொல்லு.. என்ன வேண்ணா.. சொல்லு!"

"வீட்ல வளர்ற நாய் கூட நல்லதா இருந்தா.. வெளிய சாப்பிடாது.. தெரியுமா?" என்றார்.

"இப்ப என்னத்தைப் பேசறது? காலையில பேசலாம்" என்றார் அம்மையப்பன் குழறலாக. சமீப காலமாக அவரிடத்திலே ஒரு தெனாவெட்டு தெரிந்தது. கட்டிலில் 'தொப்' என்று விழுந்தார். வேலைக்காரர்கள் வந்து உடை திருத்தி அவரைப் படுக்க வைத்தார்கள்.

நல்ல வேளையாக இனியனுக்கு என்று தனியறை கொடுத்து விட்டார் பிரபாவதி. உயர்நிலைப் பள்ளி அளவுக்கு வந்து விட்டதால் படிப்பதற்கு வசதியாக இருக்க வேண்டும் என்று அவனுக்கு ஒரு அறை கொடுத்திருந்தார். முடிந்தவரை தன் கணவனிடம் பேசுகிற விஷயங்கள் விஷயம் பேசுவதென்ன, சண்டைகளை மகன் இல்லாதபோதுதான் வைத்துக் கொள்வார். ஆனால் கதை மறுநாள் வேறு விதமாகியது.

காலை ஏழு மணிக்கே அம்மையப்பன் ஆரம்பித்து விட்டார்.

"என்ன பிரபாவதி... பேச்சையே காணோம்" என்று வம்பிழுத்தார்.

''என்ன பேசணும்? இன்னும் இனியன் ஸ்கூலுக்கு போகலே. போகட்டும் அப்புறம் பேசலாம்'' என்றார் பிரபாவதி அமர்த்தலான குரலில்.

''ஏன்.. அவனும் வயசுப் பையன்தானே! ஆம்பளை யாகப் போறான். அவனும் நம்ம வண்டவாளத்தை கொஞ்சம் தெரிஞ்சுக்கட்டுமே'' என்றார்.

''தெரியறதைப் பத்தி எனக்கொண்ணும் இல்லே! ஆனா.. உங்க மேலே மரியாதை போயிடும்'' என்றார்.

''ஏன் போகுது! நான் பண்ற எல்லாமே பெரிய மனுஷங்க செய்யறதுதான்.. நான் ஆம்பளை..'' என்றார் மறுபடியும்.

''சும்மா.. ஆம்பளை.. ஆம்பளைன்னு வாய்க்கு வாய் சொல்லாதீங்க. என்னமோ.. உங்களுக்கே அது பற்றி சந்தேகம் இருக்கா.. மாதிரித் தெரியுது'' என்றார் பிரபாவதி அதே அழுத்தத்துடன்.

''எதுக்கு சந்தேகம் வருது? உலகத்தில் நீ மட்டும்தான் பொம்பளையா? எனக்குன்னு வேற ஒருத்தி கிடைக்க மாட்டாளா?''

பிரபாவதி வெறித்துப் பார்த்தார். மெல்ல விஷயங்கள் புரிந்தது.

வேலைக்காரர்கள், டிரைவர் எல்லாருமே ஜாடை மாடையாத் தன்னிடம் சொல்ல வந்தது இதுதானா? அப்படி ஏதோ நடக்கவும்தான் கணவர் தன்னிடம் சமீப காலமாக ஒரு மிதப்பாகப் பேசுகிறாரோ என்று தோன்றியது.

கோபம் கொப்பளித்தது. ஆனால் இனியன் இருக்கிறான். ரசாபாசம் நிகழ்ந்தால் அவனைப் பெரிதும்



பாதிக்கும் என்று தயங்கினார் பிரபாவதி. ஆனால் அம்மையப்பன் முடிவாக இருந்தார் போலும். தன் பெருமையை நிலைநாட்டிக் கொண்டே ஆக வேண்டும் என்று தோன்றியது போலும்.

மீசையை முறுக்கிக் கொண்டார். அம்மையப்பன் பல்லைக் கடித்துக் கொண்டு உறுமினார்.

''இருடி இரு! உனக்கு பாடம் சொல்லிக் குடுக்க லேன்னா...'' என்று அவர் முடிக்கு முன்பே பிரபாவதி எரிச்சலுடன் குறுக்கிட்டார்.

''நீங்க ஆம்பளையில்லையாக்கும்? இத பாருங்க! நாலு பேத்துக்கு முன்னாடி உங்க மானம் மரியாதை கெடக்கூடாதேன்னுதான் நான் பேசாம இருக்கேன் நீங்களும் இந்த வீட்ல இருக்க முடியுது'' என்றார்.

''இல்லேன்னா.. வெளிய அனுப்பிடுவியா நீ என்னடி அனுப்பறது.. நானே போறேன்'' என்றார்.

கணவர் ஏதோ துணிவுடன்தான் பேசுகிறார் என்று எண்ணிக் கொண்டிருந்த பிரபாவதிக்கு இது இப்போது உறுதிப்பட்டது.

அம்மையப்பன் ஹாலுக்கு வந்தார். வேண்டுமென்றே குரலெடுத்துக் கத்தினார்.

''சும்மா போக மாட்டேன்டி..! போய்க் கேஸ் போடு வேன்'' என்று உறுமினார்.

''உங்களுக்கு இப்ப என்ன இருக்கு இங்கே? எல் லாத்தையும் அழிச்சாச்சு! கேஸ் போடறாராம் கேஸ்'' என்று பிரபாவதியும் கோபமானார்.

''ஏன்.. என் மகன் இருக்கானே.. என் சொத்து..'' என்று சத்தம் கேட்டு வெளியே வந்த இனியனை இழுத்தார்.

''வாடா.. போலாம்!'' என்று இழுத்தார்.

"அப்பா.. கையை விடுப்பா! உங்ககூட வந்துட்டு ராத்திரியெல்லாம் ரோடு ரோடா உன்னைத் தேடவே நேரம் போயிடும்" என்றான் இனியன். அப்போதைய வயதில் அவனுக்குத் தெரிந்தது அந்த மட்டும்தான். தந்தையின் குணக்கேடுகள் ஓரளவுக்குப் புரிந்திருந்தது. தாயிடம்தான் ஒட்டுதல்.

"இத பாருங்க! நீங்க பேசறதைப் பார்த்தா ஏதோ ஒரு விஷயம் இருக்கும்போல இருக்கு. என்னன்னு தெரிஞ்சுகிட்டு அப்புறம் பேசறேன்" என்றார் பிரபாவதி.

"நீ என்னத்தைத் தோண்டித் துருவித் தெரிஞ்சுக்கறது. நானே சொல்றேன். நான் ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். முடிஞ்சா தடுத்துப் பாரு!" என்று உறுமினார்.

பிரபாவதி உண்மையில் இதற்குத் தயாராக இருக்கவில்லை. வெறித்துப் பார்த்தார்.

வேலையாட்கள் அங்கங்கே மறைவாக நின்று வேடிக்கை பார்ப்பது தெரிந்தது.

அவமான உணர்வில் புழுங்கிப் போனார்.

அவரையும் மீறி வார்த்தைகள் வெளியே வந்தன.

"அப்படீன்னா... நீங்க வெளியே போகலாம். சட்டப்படி நான் நடவடிக்கை எடுக்கறேன்" என்றார்.

"எடுத்துக் கிழிச்சே!" என்று ஆரம்பித்தவர் தாறுமாறாகப் பேசிக் கொண்டே வெளியே போனார்.

"வாட்ச்மேன் அந்த ஆள் மறுபடியும் வந்தா உள்ளே விடாதீங்க!" என்றார் கண்ணுசாமியிடம் கறாராக.

அப்போதும் இதே வாட்ச்மேன்தான்! எவ்வளவு நேரம் யோசித்தாரோ அப்படியே உறங்கி விட்டார் பிரபாவதி.



எழுந்திருக்கும்போதே விடிந்து விட்டது. தன்னை எழுப்பவும் பயந்து கொண்டு கையைப் பிசைந்து கொண்டு வேலையாட்கள் தயங்கி நிற்பதைப் பார்த்தார்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு திரும்பி ஹாலில் இருந்த கட்டிலைப் பார்த்தார். அம்மையப்பனைக் காணவில்லை.

"அம்மா...! ஐயா எப்பப் போனாரோ தெரியலை.." என்று அம்மிணி மென்று விழுங்கினாள்.

"தொலையட்டும் விடு.." என்றார். சுற்றிக் கண்களை ஓட்டினார். நல்ல வேளையாக முக்கியமான அறைகளையெல்லாம் இரவே பூட்டி வைத்திருந்தார்.

"சரி.. காபியைக் குடு" என்று தன் அறைக்கதவை திறந்து பாத்ரூமுக்குள் நுழைந்து முகம் கழுவி நிமிர்ந்தார். ஏதோ ஒரு வித்தியாசம் ஒன்று அவருக்குள் தோன்றிக் கொண்டேயிருந்தது. சட்டென்று புரிந்தது.

கழுத்தில் இருந்த பத்துப் பவுன் மாங்கலியக் கொடியைக் காணவில்லை. கழுத்தைத் தடவிக் கொண்டே திகைப்பும், வேதனையுமாக நின்றார்.

## 2



இன்ஸ்பெக்டர் கண்ணன் ஏதோ ஃபைலை புரட்டிக் கொண்டிருந்தார்.

சற்றுத் தள்ளி ஒரு சில மரச்சேரில் அம்மையப்பன் அமர்ந்திருந்தார். சற்று முன்தான் அவரிடம் பேசினான் கண்ணன்.

"ஐயா! பிரபாவதியம்மா அவங்க நகையை நீங்க எடுத்துட்டதா புகார் குடுத்திருக்காரு" என்றான்.

மிகக் கவனமாக "எடுத்துட்டதா" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் கண்ணன்.

அம்மையப்பன் ஒன்றும் பெரிதாக அரண்டு விடவில்லை. மாறாக திண்ணக்கமான பார்வையும் தெனாவெட்டான பேச்சுமாகத்தான் இருந்தார்.

"இன்ஸ்பெக்டர்! பிரபாவதி யாருன்னு தெரியுமா? என் வைஃப். இது ஹஸ்பெண்ட் வைஃப் விவகாரம். நீங்க அட்வைஸ் பண்ணியிருக்க வேண்டாம்? எப்படி புகாரை வாங்கினீங்க?" என்றார்.

இன்ஸ்பெக்டருக்கு சரியான கோபம் வந்தது. இப்படிப்பட்ட ஆட்களால்தான் ஆண் வர்க்கத்தின் பேரே கெடுகிறது என்று எண்ணிக் கொண்டார். நேரடியாகச் சொல்லவும் முடியவில்லை.

"இத பாருங்கய்யா! அது உங்க குடும்ப விவகாரமா என்னன்னு எனக்குத் தெரியாது. ஆனா இப்ப நீங்க அவங்களோட இல்லைன்னும், நகையை அவங்க தூங்கிட்டிருக்கும்போது நீங்க கழட்டிட்டு வந்ததா புகார் குடுத்திருக்காங்க" என்றான்.

"ஓஹோ!" என்று கொஞ்சம் இறங்கினார் அம்மையப்பன்.

"அய்யா! வேண்ணா ஒண்ணு செய்யறேன். இப்போதைக்கு லாக்-அப்ல போடலை. முன்னாடியே சொல்ல



இருங்க! பிரபாவதி அம்மாகிட்டே பேசி உங்களுக் குள்ளேயே பேசி.. புகாரை வாபஸ் வாங்கச் சொல்லுங்க" என்றான்.

"அவகிட்டே மனுஷன் பேசுவானா? நான் வேற வழி பண்றேன்?" என்றார் அம்மையப்பன் தனது அழுத்தம் சிறிதும் குறையாமல்.

போனை எடுத்துப் பேச ஆரம்பிக்கு முன்னே ஸ்டேஷன் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி இறங்கினாள். அவரோடு கூட சுடிதார் அணிந்து ஒரு இளம் பெண்ணும் இறங்கினாள்.

அம்மையப்பன் முகத்தில் பெருமையும் பெருமிதமும் போட்டி போட்டது.

உள்ளே வந்த பெண்மணி "இன்ஸ்பெக்டர் சார். நான் இவரை ஜாமீன்ல எடுக்க வந்திருக்கேன்" என்றாள்.

"நீங்க யாரு?" என்றார் கண்ணன். அவர் இந்த ஊருக்கு வந்து இரண்டு, மூன்று மாதங்கள் தான் ஆகியிருந்தது. அதனால் அவருக்கு ஊர் நிலவரம் தெரியவில்லை.

"நான் இவரோட வைஃப். பேரு மனோரஞ்சிதம்" என்றார் அந்தப் பெண்மணி. கண்ணன் ஒரு நிமிடம் திகைத்தார்.

"அப்ப.. பிரபாவதி.. மேடம்?" என்று இழுத்தார்.

"சார்! அவங்க ஃபர்ஸ்ட் வைஃப். நான் செகண்ட் வைஃப்" என்றாள்.

"ஓ..!"

"இப்போதைக்கு ஜாமீன்ல எடுக்கறேன். அப்புறம் புகாரை வாபஸ் வாங்கறதுக்கு நடவடிக்கை எடுக்கறேன்" என்றாள்.

ஏதோ விஷயமாக வெளியே போயிருந்த எட்டு உள்ளே வரவும் மனோரஞ்சிதத்தைக் கண்டவுடன் பதறிப் போய்,

"அம்மா..! உட்காருங்க!" என்றார்.

இன்ஸ்பெக்டரிடம் திரும்பி "இன்ஸ்பெக்டர் ஐயா! அம்மா கதிர்காமன் அய்யாவோட சிஸ்டர்" என்றார்.

"ஓஹோ!" என்றார் இன்ஸ்பெக்டர். "உட்காருங்கம்மா" என்றார்.

மனோரஞ்சிதத்தோடு கூட இந்த பெண் குறுக் கிடைப்போடும்?... குறும்பு மின்னும் கண்களோடும் நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளும் மனோரஞ்சிதத்தின் அருகில் அமர்ந்தாள்.

நடைமுறைகள் முடிந்ததும் அம்மையப்பனை அழைத்துக் கொண்டு மனோரஞ்சிதம் புறப்பட்டார். அலட்டிக் கொள்ளாமல் எழுந்த அம்மையப்பன் வேட்டியை ஒரு முறை இடுப்பில் திருத்தி இறுக்கிக் கொண்டு,

"என்ன.. போலாமா?" என்றார் மனோரஞ்சிதத்தை நோக்கி.

அந்த நேரம் மட்டும் மனோரஞ்சிதத்தின் கண்ணில் ஒரு வேதனை மின்னி மறைந்தது.

அந்த இளம் பெண் ரகசியமாக ஒரு தடவை அம்மையப்பனை முறைத்துப் பார்த்தது.



போய் விட்டார்கள்!

இன்ஸ்பெக்டர் திரும்பி எட்டு சிங்காரத்தைப் பார்த்தார்.

"என்னப்பா... இது?" என்றார்.

"இதுதாங்க உலகம்! நல்ல மனுஷங்களுக்கு ஒரு பொண்டாட்டி கிடைக்குறதே கஷ்டமா இருக்கு! ஆனா.. இந்த ஆளுக்கு ரெண்டு பொண்டாட்டிங்க. ரெண்டு பொம்பளைங்களும் ஊருக்குள்ள பெரிய மனுஷங்களா இருக்கற ரெண்டு குடும்பத்தைச் சேர்ந்தவங்க" என்றார்.

இன்ஸ்பெக்டர் தோளை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

* * *

"எதுக்கும்மா... அவரை உள்ளே விட்டே?" என்றான் இனியன்.

"நடு ராத்திரிடா.. தம்பி! ஆளு வேற சரியில்ல. காரு நின்ன தோரணையைப் பார்த்தா... கிட்டத்தட்ட ஆக்ஸிடென்ட் மாதிரி இருந்தது. நீயும் வேற இல்லே! புண்ணியத்துக்கு உழுகற மாட்டை பல்லைப் பிடிச்சுப் பதம் பார்த்த கதையா... இல்லே.. ஆயிருச்சு..! இத்தனைக்கும் எச்சரிக்கையா.. எல்லா ரூம் கதவையும் சாத்தியிருந்தேன். ஆளு இத்தனை நாள் ஆகியும் மாறாமலேயே இருப்பாருன்னு நான் கண்டேனா?" என்றார் பிரபாவதி.

அதே நேரம்! போன் ஒலித்தது. இனியன் எடுத்தான்.

அந்தப்புறம் ஒரு பெண்மணியின் குரல் "நான் மனோரஞ்சிதம் பேசறேன்" என்றது. இனியன் ஒரு

நிமிடம் மௌனம் சாதித்தான். பேச்செழவில்லை. ரி
வரை வைத்து விடலாமா என்று யோசித்தான்.

''ப்ளீஸ்! போனை வச்சுராத.. தம்பி'' என்று அந்த
புறம் கெஞ்சவும்.

''சொல்லுங்க'' என்றான்.

''அம்மா..கிட்டே பேசணும்'' என்றாள்.

''வேண்டாம்! என்கிட்டயே பேசுங்க..! அம்மா பே
மாட்டாங்க'' என்றான்.

பிரபாவதி அவனைக் குறிப்பாகப் பார்க்க 'அப்புறம்
சொல்றேன்' என்பது போலத் தலையை அசைத்தான்.

''தம்பி... ப்ளீஸ்! போனைக் குடுங்க!'' என்றாள்.

இனியன் தயங்கி விட்டு ''அவங்க.. மனோரஞ்சி
தம்மா.. பேசறாங்க'' என்றான்.

பிரபாவதி போனைக் கையில் வாங்கினார். இனியன்
தன் கோபத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு ஜன்னல்
ஓரமாகப் போய் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்
கொண்டு நின்றான். கை முஷ்டிகள் இறுகியிருந்தன.

பதின்மூன்று, பதினான்கு வருடங்களாகத் தாயின்
வேதனையைப் பார்த்துக் கொண்டிருந்தவனல்லவா?
இது வரைக்கும் அவனுக்குத் தெரிந்து மனோரஞ்சிதமும்,
அம்மாவும் பேசிக் கொண்டதில்லை தான் ஒரு நாள்
இல்லாமல் போனதால் வந்த வம்பு இது. தான் இருந்திருந்
தால் அந்தக் காரிலேயே கொண்டு போய் அவர்கள்
வீட்டில் தள்ளி விட்டு வந்திருப்பான்.

அதே சமயம் பிரபாவதி போனைக் கையில் வாங்கி
னார்.



''சொல்லுங்க!'' என்றார்.

''நான்.. நான்.. மனோரஞ்சிதம் பேசறேன்'' என்றாள்
மனோரஞ்சிதம்.

''தெரியுது.. சொல்லுங்க..!'' என்றார் பிரபாவதி.

''நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேன்.
முன் ஜாமீன் வாங்கியிருக்கேன். விசாரிச்சேன். அட
மானக் கடையில் அடமானம் வச்சிருக்காராம். நானே
மீட்டுத் தர்றேன். தயவு செய்து கேஸை வாபஸ்
வாங்கிக்குங்க'' என்றாள்.

''.... ...!''

''ப்ளீஸ்! இப்பவே ஊருக்குள்ள பேச்சுக் கிளம்பி
ருச்சு...! என்ன பண்றது! தலையெழுத்து...! ரெண்டு
பேரும் வாழ்க்கையை இழந்தோம்'' என்று குரல் தழு
தழுக்க ஏதோ சொல்ல வந்தவள் சற்று நிறுத்திக் கொண்
டாள். பிறகு தேறிக் கொண்டு,

''அவருக்கு நன்மை செய்யறதுக்காக இல்லே! நம்ம
கௌரவத்தைக் காப்பாத்திக்கிறதுக்காக'' என்றாள்.

''சரி.. பார்க்கறேன்..'' என்ற பிரபாவதி மேற்கொண்டு
பேச்சை வளர்த்தாமல்,

''நான் வைக்கட்டுமா?'' என்றார்.

''ம்..!'' என்றாள் மனோரஞ்சிதம்.

பரஸ்பர நல விசாரிப்புக்களோ நல்ல வார்த்தைகளோ
இல்லாத அந்தப் பேச்சு முடிவுற்றது.

பிரபாவதி கனமான ஒரு மௌனத்துடன் போன்
ரிசீவரை வைத்து விட்டு வந்தார். இனியன் முகத்தைப்
பார்த்தான். ஒரு கணம் அவருக்கே பயமாகியது

எங்கேயாவது தந்தையைப் பார்த்தால் சட்டென்று சட்டையைப் பிடித்து அடித்து விடுவான் போல இருந்த...

பிரபாவதி மௌனமாக நிற்பதைப் பார்த்துத் திரு...

"என்னவாம்?" என்றான்.

"அடகுக் கடையில நகையை வச்சிருக்காராம். மீட்டுத் தர்றாங்களாம். கேஸை வாபஸ் வாங்கறதாம்" என்றா...

"ம்..!" என்று இழுத்தான். சற்று நேர மௌனத்திற்கு பிறகு.

"என்ன செய்யறதா.. உத்தேசம்?" என்றான்.

"வாபஸ் வாங்க வேண்டியதுதான்."

"அப்புறம்.. எதுக்கு.. கம்ப்ளெயின்ட் குடுக்கணும்?"

"அடுத்த முறை இப்படி ஒரு செயலை செய்யாம இருக்கறதுக்குத்தான்?"

"ஓஹோ..! இன்னொரு தடவை உள்ளே விடறது உத்தேசம் இருக்கோ?"

"உத்தேசம் எல்லாம் இல்லை! ஆனா எதிர்பாராம உள்ளே நுழைஞ்சாக்கூட ஒரு பாடம் இருக்கும் இல்லே?" என்றான்.

"திருந்தற ஜன்மங்களா இருந்தா.. எப்பவோ திருந்தியிருப்பாங்க.." என்றான், பிரபாவதி ஒன்றும் பேசவில்லை. இன்றைக்கு தெரியவில்லை இனியன் கல்லூரிக்கு லீவ் போட்டிருந்தான்.

"சரிப்பா! நம்ம தலையெழுத்து..! அதை விடு. அந்தப் பொண்ணும் என்னமோ இரண்டு பேருமே வாழ்க்கையைத் தொலைச்சுட்டோம்ங்குது. அதுவும் சந்



தோஷமா இல்லை போல இருக்கு?" என்றவர் அவனிடமிருந்து எந்தப் பிரதிபலிப்பும் வராமல் போகவே.

"சரிப்பா..! நீ போய் ரெஸ்ட் எடு!" என்றார்.

சரியென்று தன் அறைக்குப் போனான். தனது புத்தக அலமாரியிலிருந்து ஏதோ புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

உறக்கம் அவனை ஆட்கொண்டது. பொதுவாகப் பகல் நேரத்தில் உறங்க மாட்டான். ஆனால் நண்பனின் கல்யாணத்தில் கல்லூரி நண்பர்களையெல்லாம் பார்த்திருந்தான். இரவெல்லாம் அரட்டை சீட்டுக் கச்சேரி.. என்று பொழுதைக் கழித்திருந்தார்கள்.

ஊரிலிருந்து வந்ததற்குப் பிறகு போலீஸ் ஸ்டேஷன் அங்கே இங்கே என்று அலைந்ததோடு உணர்ச்சிப் போராட்டங்கள் வேறு. அதனால் சற்றே கண்ணயர்ந்தான்.

நான்கு மணி வாக்கில் எழுந்தவன் ஹாலுக்கு வந்தான். அம்மிணி காபியும் சிற்றுண்டியும் கொடுக்க உண்டு முடித்தான்.

காலையில் உடற்பயிற்சி செய்யவில்லையே என்று யோசித்தவன். தோட்டவேலை செய்யலாம் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

வருத்தம் மேலோங்கியிருக்கும் தருணங்களில் அவன் உடலுழைப்பில் ஈடுபட்டு விடுவான். அதில் கொஞ்சம் தெளிவு கிடைக்கும் என்று நினைப்பான்.

இப்போதும் அப்படித்தான்.

தோட்டக்காரன் ஓடி வந்தான். "இருக்கட்டும்.. இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு செடிகளை

வெட்டி மண்ணைக் கொத்தி என்று திருத்த ஆரம்பித்தான்.

வீட்டுக்கு முன்னாலே ஒரு பெரிய தோட்டம் இருந்தது. பார்த்தால் தெரியாத வகையில் சுவரோரமாக செடிகள் பல வகைகள் செம்பருத்திச் செடிகள் மல்லிகை, முல்லை, ஜாதிமல்லி, சம்பங்கி என்று பார்க்க அழகான செடிகள் மற்றொரு புறத்தில் வரிசையாக ரோஸ் செடிகள். வீட்டுக்கு முன்னாலே இருந்த இடத்தில் சிமெண்ட் தளம்.

பெரும்பாலான மாலை நேரங்களில் அவனும், அவன் தாயும் முன்னாலே கூடை சேரைப் போட்டுக் கொண்டு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த நேரங்களை தன் தாய் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். அதனால் எத்தனை வேலை இருந்த போதும் தாயிடம் சற்று நேரமாவது அமர்ந்து பேசுவான்.

கடந்த நான்கைந்து நாட்களாக அம்மாவிடம் அமர்ந்து பேச நேரம் கிடைக்கவில்லை. அதை நினைத்துக் கொண்டே செடிகளை ட்ரிம் செய்து கொண்டிருந்தான்.

முண்டா பனியன் அணிந்து கொண்டு முகத்தில் லேசான வேர்வை துளிர்க்க வேலை செய்து கொண்டிருந்தான்.

கையில் வெட்டுக் கத்தியை வைத்துக் கொண்டே திரும்பியவன் கொஞ்சம் ஆச்சரியமும் திகைப்புமாக நின்றான். எதிரே ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரில் இருந்து ஒரு இளம் பெண் இறங்கி வந்தாள்.



சுடிதார் அணிந்து கொண்டிருந்தாள். அளவான நீளத்தில் இரட்டைப் பின்னல்கள் அவை லேசாக அசைய நடந்து வந்தாள்.

''ஹலோ! தோட்டக்காரரே...! இந்த வீட்டம்மா... இருக்காங்களா?'' என்றாள்.

அவன் முகத்தில் குறும்பு மின்னியது.

''எஜமானியம்மாவா... உள்ளே இருக்காங்களே'' என்றான்.

அவள் முகத்தில் ஒரு நிமிடம் சந்தேகம் தோன்றியது போலும்.

'ஆளைப் பார்த்தா.. தோட்டக்காரர் மாதிரித் தெரியலியே' என்று எண்ணிக் கொண்டாள். உடனே 'அதைப் பற்றி நமக்கென்ன?' என்று எண்ணிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

''நீங்க யாருங்க?'' என்றான் அவன்.

''அதை.. நான் அவங்ககிட்டே சொல்லிக்கறேன்'' என்று திரும்பிப் பார்க்காமல் போனாள்.

அவனும் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து விட்டுப் பின்னாலேயே போனான். ஹாலுக்கு அந்தப் பெண் போனவுடன் அவன் பின்னால் வழியாகப் போய்த் தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

''யாரது?'' என்று அம்மிணி வர.

''நான் பிரபாவதி அம்மாவைப் பாக்கணும்?'' என்றாள்.

பிரபாவதி அம்மா வெளியே வந்து ''வாம்மா!'' என்று மரியாதைக்காக வரவேற்று விட்டு ''உட்காரும்மா..?'' என்றார்.

''இல்லல்லே! நான் அவசரமாப் போகணும்'' என்றாள் அந்தப் பெண்.

''சொல்லம்மா...! என்ன விஷயம்?'' என் பிரபாவதி கனிவான குரலில்.

''நான் சாருலதா..! மனோரஞ்சிதம்மா வீட்ல இரு வர்றேன்..'' என்றாள்.

உடனே பிரபாவதி திரும்பி ''இனியா!'' என் அழைக்கவும் இனியன் ஃப்ரெஷ்ஷாக சட்டை அணிந் கொண்டு வெளியே வந்தான்.

ஒரு நிமிடம் அந்தப் பெண் திகைத்தாள். மறு நிமி ''சாரி!'' என்றாள்.

அவன் ''பரவால்லே..!'' என்றவன் ''சொல்லுங் என்ன விஷயம்?'' என்றான்.

அவள் ஒரு சின்னப் பொட்டலத்தை நீட்டினாள் ''என்னது?'' என்றார் பிரபாவதி.

''அத்தை.. கொடுத்துட்டு வரச் சொன்னாங்க! தாலி கொடி'' என்றாள்.

பிரபாவதி மௌனமாகக் கை நீட்டி வாங்கிக் கொண் டார்.

''நல்லதும்மா! உட்காரு.. காபி சாப்பிடு'' என்றா பிரபாவதி.

''பரவால்லை..! நான் கிளம்பணும்?'' என்று கிளம்பி னாள்.

இனியன் வழியனுப்புவது போல கூட வந்தான் அவள் திரும்பி.



''சாரி..! நான் தப்பா நினைச்சுட்டு..'' என்று இழுக் கவும்.

''பரவால்லே! அது ஒண்ணும்.. பெரிய தப்பில்லே..!'' என்று இழுத்தான். அது ஒண்ணும் என்று அவன் சொன்ன கணத்தில் அவன் வேற எதையோ குறிப்பிடு கிறான் என்று புரிய அவள் முறைத்தாள்.

''இத பாருங்க.. மிஸ்டர் இனியன்! நாங்க எந்தத் தப்பும் செய்யலே! தப்புன்னு.. யாராவது செஞ்சிருந்தா.. அது அந்த ஆள் தான்..!'' என்றாள்.

''எந்த ஆளு..?'' என்றான் இனியன்.

''அதான்..! அந்த அம்மையப்பன்!'' என்றாள்.

அவன் ஏதும் பேசு முன்பாக நகர்ந்து விட்டாள். அவன் மோவாயைத் தடவிக் கொண்டு அந்தக் கார் நகர்வதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

## 3



சாருலதா போன வழியைப் பார்த்துக் கொண்டே தலையைத் திருப்பியபடி வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் இனியன்.

வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான். ''யாரும்மா.. அந்தப் பொண்ணு!'' என்று கேட்டுக் கொண்டே அம்மாவிடம் திரும்பினான்.

அம்மா தாலிக் கொடியைக் கையில் வைத்துக் கொண்டு அதை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்.

கட்டிய கணவன் வாழ்க்கையைப் பறித்ததுமல்லாமல் இப்படி தாலிக் கொடியையும் பறித்துக் கொண்டு போவானா.. என்ன? இந்தச் சமுதாயம் இன்னமும் ஆணாதிக்கச் சமுதாயமாகத்தான் இருக்கிறதா? இரண்டாவது மனைவியை வேறு வெகு எளிதாகப் பிடித்து விட்டான். அதிலும் எந்தக் குடும்பத்தில்?

எந்தக் குடும்பத்திற்கும் தங்கள் பிறந்த வீட்டிற்கும் இடையே பங்காளிச் சண்டை இரண்டு தலை முறைகளாக இருக்கிறதோ அந்தக் குடும்பத்தில்!

ஊருக்கே தெரியும்! ஆளவந்தார் குடும்பம் ஒரு அணியில் நின்றால் அந்த அணி சொல்லும் கருத்து சரியாக இருந்தால் கூட வேண்டும் என்றே எதிரணியில் நிற்பார் கதிர்காமன். அப்படி வீட்டில் ஒரு பெண் எப்படி தன் கணவருக்குக் கிடைத்தாள் என்பது இன்னமும் அவருக்குப் புரியாத விஷயம்தான். ஆனால் சற்று முன் பேசிய மனோரஞ்சிதமும் புழுங்கிப் போய்த்தானே பேசினாற் போலத் தெரிகிறது. அப்படியொன்றும் அம்மையப்பனோடு அந்தப் பெண் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கிறாற் போலத் தெரியவில்லையே! யார் மகிழ்ச்சியாக இருந்தாலென்ன? தன் வாழ்க்கை சூனியமாகப் போனது போனதுதானே!

எத்தனை பேர் இளைஞர்களுக்கு இன்னமும் பெண் கிடைக்காத சூழ்நிலை உள்ளது? ஆனால் இவருக்கு மட்டும் எப்படி அப்படி ஒரு குடும்பத்தில் பெண் கிடைத்தது?



மனோரஞ்சிதத்தைக் கோயிலில் வைத்துக் கல்யாணம் செய்து கொண்டார் என்று தெரிந்தவுடனே விவாகரத்து வாங்கி விடலாம் என்றுதான் நினைத்தார் பிரபாவதி.

ஆளவந்தார் தான் அதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார்.

"வேண்டாம்... பிரபாவதி அந்த ஆள் பண்ணியிருக்கறது.. திருட்டுக் கல்யாணம். சட்டப்படியான வைஃப் நீதான்! நீ விவாகரத்துக் குடுத்தே அவன் அந்தக் கல்யாணத்தை ரெஜிஸ்டர் பண்ணுவான். இந்த ஒரு விஷயம் நம்ம கையில இருக்கட்டும்! அதுதான் நம்ம ........ அம்மையப்பன் இருக்கானே அவனுக்கும் அந்த கதிர்காமன் குடும்பத்துக்கும் எதிரா நம்மகிட்டே இருக்கற துருப்புச் சீட்டு... புரியுதா?" என்று பிரபாவதியின் வாயை அடக்கி விட்டார்.

பிரபாவதிக்கு இந்தத் துருப்புச் சீட்டை வைத்துக் கொள்வதில் ஒன்றும் பெரிய பெருமையில்லை. ஆனால் என்றைக்குமே அண்ணனின் சப்போர்ட் தேவையிருக்கும் என்பதால் அந்த அறிவுரையைத் தட்டாமல் கேட்டுக் கொண்டார்.

கையில் மாங்கலியக் கொடியை வைத்துக் கொண்டு நிற்கிற தாயைப் பார்த்தவுடன் இனியனின் மனம் கனிந்து போனது.

"அம்மா..!" என்றான் இறங்கிய குரலில்.

"உரிமைக்காரனே திருடற கேவலம் எங்காவது உண்டா?" என்றார் வேதனையுடன்.

இனியன் தனது வேதனையை மறைத்துக் கொண்டு கேலியில் இறங்கினான்.

"யாரு! அம்மையப்பரா? உன்னை மாதிரி தேவதையை உடைமையாக்கொள்றதுக்கும் ஒரு தகுதி வேணு மில்லே? இப்படி ஜாமீன்ல எடுக்கறதுக்கும், மீட்டு கொடுக்கறதுக்கும் ஆள் இருந்தா அந்த ஆள் என்ன வேண்ணா பண்ணுவாப்ல" என்றான்.

பிரபாவதி ஒன்றும் பேசவில்லை.

"விடும்மா.. கழுதையை!" என்றான்.

"அந்தப் பொண்ணு பாத்தியாம்மா..! ஏகப்பட்ட லொள்ளு பேசிட்டுப் போகுது?" என்றான்.

"என்னவாம்?" என்றார். அவன் தங்கள் பேச்சை குறிப்பிட்டுச் சொன்னவுடன்.

"அது பேசறதைப் பார்த்தா.. அவருக்கு அங்கயும் ஒண்ணும் பெரிய மரியாதையில்லை போலிருக்கு" என்றார் பிரபாவதி.

"பின்னே? இப்படி ஊர் உலகத்துல போய் திருடிட்டு வந்தா... மரியாதையாவா வச்சுக்குவாங்க. சரி.. நாம ஆகற வேலையைப் பார்க்கலாம். நிம்மதியாத் தோட்ட வேலை செஞ்சுகிட்டிருந்தேன். கோட்டான் மாதிரி ஒரு பொண்ணு வந்து என் வேலையைக் கெடுத் ததுமல்லாம போகும்போது நக்கலா வேற பேசிட்டுப் போறாப்ல" என்றான் இனியன்.

ஒரு மணி நேரத்தில் வீட்டு போன் ஒலித்தது. இனி யன் வேண்டா வெறுப்பாக எடுத்தான்.

அந்தப் புறம் அந்தப் பெண்ணின் குரல் கேட்டது.

"யாரு பேசறது?" என்றான் இனியன் வேண்டு மென்றே குரல் தெரியாதது போல.



"நான்தான் சாருலதா.. பேசறேன்" என்றாள் அந்தப் பெண்.

"சொல்லுங்க.. என்ன விஷயம்?" என்றான் இனியன் கடுப்புக் குறையாமல்.

"அத்தை.. உங்க அம்மாகிட்டே பேசணுமாம்!" என்றாள் அந்தப் பெண்.

"இதபாருங்க.." சாருலதாவா.. சாருமதியா.. ஐ டோன்ட் கேர்! இனிமேல் பேசறதுக்கு என்ன இருக்கு? நீங்க வந்த வேலை முடிஞ்சுது. தட்ஸ் ஆல்..! போனை வைக்கறீங்களா" என்றான் இனியன் கடுப்புடன்.

"யாருப்பா.. போன்ல" என்று கேட்க வந்த பிரபாவதி அவன் பேசுகிற தோரணையைப் பார்த்துத் திகைத்து நின்றார்.

சாருலதா அந்தப் பக்கம் சிலுத்துக் கொண்டாள். "அதெப்படி.. மேட்டர் முடியும்? நாங்க நகையைத் திருப் பிக் குடுத்தாச்சு.. நீங்க கேஸை வாபஸ் வாங்கணு மில்லே" என்றவள் திரும்பி அத்தையிடம் "அத்தை! எல்லாம் உன்னால வந்த வம்பு" என்று பல்லைக் கடிப்பது அவனுக்கும் கேட்டது.

"உங்களை யாரு.. எங்களைக் கேட்காம முன் ஜாமீன் வாங்கச் சொன்னது?"

"ஆமா.. இப்ப என்னைக் கேள்வி கேளுங்க. உங்க அம்மாவால தாலி கட்டினவரையும் வீட்டோட காப் பாத்த முடியல..! அந்தாளு கட்டின தாலியையும் காப்பாத்திக்க முடியல. அப்புறம்" என்று அவள் மேலே தொடருமுன் இனியனின் கண்கள் சிவந்தன.

"யூ டாக் டு மச்.. யு அன்டர்ஸ்டாண்ட்? நீங்க அ... அம்மையப்பனை ரொம்பப் பாதுகாப்பா வச்சிரு... லட்சணம்தான் தெரியுதே. அவரு கையில காரை கொ... குடுத்து.. நடுராத்திரியில கண்ணு மண்ணு தெரி... ஓட்ற வரைக்கும் விட்டுட்டு நீங்க என்ன அங்கே க... குத்திகிட்டிருக்கீங்க?'' என்றான்.

''நவ் யூ ஆர் டாக்கிங் டு மச்! அந்தாள் எங்கே... போனா உங்களுக்கென்ன?''

''எங்கோ போகலை பொண்ணே! எங்க வீட்டு வாசப்படியில வந்து விழுந்திருக்காப்பல! யாரோ நாலு பேரு பாத்துக் கொண்டு வந்து சேத்திருக்காங்க! எங்க மதர் ஒண்ணும் வெத்தலை பாக்கு வச்சு அழைக்கலை.. யூ அன்டர்ஸ்டாண்ட்'' என்றான்.

''இப்ப என்ன சொல்றீங்க? வாபஸ் வாங்கறீங்களா இல்லையா?'' என்றாள் சாருலதா.

''வாங்கறதாயில்லை! அது மட்டுமில்லை. இப்படி இன்னொரு தரம் போன் பண்ணினா போன் பண்ணி மிரட்டறாங்கன்னு அதுக்கொரு கேஸ் குடுத்துருவோம்'' என்றான்.

கடுப்பாக போன் ரிசீவரை 'டொக்'கென்று வைத்தாள்.

''தம்பி.. என்ன.. இது?'' என்று பிரபாவதி தவிக்க.

''அந்தப் பொண்ணு சாருலதா ரொம்ப ஓவராப் பேசறா..! இவங்க மிரட்டினா.. நாம பயந்துடுவமா.. என்ன..'' என்றான்.

பிறகு அம்மாவை நேராகப் பார்த்துக் கேட்டான்.

''ஏம்மா..! என்ன இழவுதாம்மா.. நடந்துச்சு?'' என்று கேட்டான்.



பிரபாவதி உதடுகள் துடிக்க சோபாவில் சாய்ந்து அமர்ந்தார். ஆனால் இளியன் மசியவில்லை. அதே ஆழமான பார்வையுடன் அம்மாவைப் பார்த்தான்.

அதே சமயத்தில்..!

சாருலதாவும் மனோரஞ்சிதத்தை அதே போலத்தான முறைத்துக் கொண்டிருந்தாள்.

மனோரஞ்சிதமும் அதே போன்ற ஒரு தவிப்புடன் தான் அமர்ந்திருந்தார்.

* * *

நல்ல ஆகிருதியான உடல்வாகு வெட்டிட்டு வான்னா... கட்டிட்டு வர்றது என்பாங்களே அந்த மாதிரி சொல்வதற்கு முன்னாலே புரிந்து கொள்கிற அறிவு!

ஆளவந்தாருக்கு அந்த இளைஞனை மிகவும் பிடித்தது. தூரத்து உறவு வேறு!

''ஏம்ப்பா! அம்மையப்பா!'' என்று எங்கே சென்றாலும் அழைத்துக் கொள்வார்.

குடும்பத்துக்கென்று ஒரு கரும்பாலை இருந்தது. நிலபுலங்கள் இருந்தன.

ஆளவந்தாருக்கு வலது கை போலானான் அம்மையப்பன்.

ஏதாவது அவசரத் தேவை என்றால் உடனே வீட்டுக்கு அவரைத்தான் அனுப்புவார். பிரபாவதி அப்போதே நல்ல உயரமும் ஆகிருதியுமாக இருப்பாள்.

பெரும்பாலும் அம்மையப்பன் வருகிற நேரத்தில் பிரபாவதியின் அண்ணி கோவிலுக்குப் போயிருப்பார். பெற்றோர்கள் கிராமத்தில் இருந்தார்கள்.

"அந்த ஃபைல் கேட்டார். இந்த ஃபைல் கேட்டார்" என்று வந்து கேட்டான்.

பிரபாவதிதான் தேடிக் கொடுப்பாள்.

"ஒரு நாள் ஆளவந்தான் கரும்பாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய பணத்தை வீட்டில் மறந்து வைத்து விட்டுப் போய் விட்டார். எதற்காகவோ பட்டுவாடா செய்ய வேண்டிய பணம். பெரிய தொகை.

அம்மையப்பன் தான் வந்தான். நல்ல வேளையாக அண்ணி அப்போது வீட்டில் இருந்தார்.

"அண்ணி அண்ணன் இவருகிட்ட பெட்டியைக் கொடுத்தனுப்பச் சொல்லியிருக்காரு" என்றாள் பிரபாவதி.

அண்ணி எதுவும் பேசவில்லை. பெட்டியை எடுத்துக் கொடுத்து விட்டார். ஆனால் கிளம்பு முன்பு,

"இருங்க சார்! எதுக்கும் போன் பண்ணிக் கேட்டுக்கறேன்" என்றார். கணவனுக்கு போன் செய்தார்.

"ஏங்க! அம்மையப்பன்னு ஒருத்தர் வந்திருக்காரு. அவருகிட்டே பெட்டியைக் குடுத்தனுப்பச் சொல்லியிருக்கீங்க..! அனுப்பறதா?" என்று கேட்டார்.

"ஆமாமா! நான்தான் அனுப்பியிருக்கேன் குடுத்தனுப்பு" என்றார் ஆளவந்தார்.

பெட்டியைக் கொடுத்தனுப்பினார்கள் அதற்குப் பிறகுதான் அண்ணி நாகரத்தினத்திடம்,

"அண்ணி அண்ணன் எதுக்கு இப்படியெல்லாம் செய்யறாங்க. இவ்வளவு பணத்தையும் வேலை செய்



யற ஆளை நம்பிக் குடுத்தனுப்பச் சொல்றாங்க" என்றாள் பிரபாவதி.

"ஆமா.. பாரு! எனக்கும் பயம்மாத்தான் இருக்கு! ஆனா உங்கண்ணன் அலட்டிக்காம நான்தான் அனுப்பியிருக்கேன்.. குடுத்தனுப்புன்னாரே.. என்ன செய்ய?" என்றாள்.

இரண்டு பெண்களும் விஷயத்தை அதோடு விடவில்லை. இரவு அண்ணன் வந்தவுடன் பிரபாவதி கேட்டார்.

"அண்ணா..! அந்த அம்மையப்பன் மேலே நம்பிக்கை இருக்குங்கறது ஓ.கே.தான்! ஆனா.. அதுக்காக இவ்வளவு பணம் லேக்ஸ் கணக்கில.. பணம்.. அதை இப்படி ஆள்காரங்ககிட்டே குடுத்தனுப்பச் சொல்றீங்களே.." என்றார்.

"நல்ல பையன்தாம்மா! பொறுப்பாக் கொண்டு வந்து சேத்துட்டான் இல்ல..!" என்றார்.

பிரபாவதி அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. ஆனால் மனைவி நாகரத்தினம் அதே கேள்வியைத் தன்னிடம் தனியாகக் கேட்டபோது வேறு விதமாகச் சொன்னார்.

பையன் நமக்கு தூரத்து உறவு நாகு! கெட்டிக்காரனா வேற இருக்கான். நம்ம பிரபாவதிக்கு ஏத்தவனா இருப்பான்னு தோணுது" என்றார்.

"ஏங்க.. நம்ம வசதிக்கு ஏத்த மாதிரி" என்று இழுக்க ஆளவந்தார் குறுக்கிட்டார்.

"நாகு! நம்ம அம்மா அப்பாவுக்கு அவ்வளவு விவரம் பத்தாது. நமக்கிருக்கற சொத்தே தலைமுறைக்குக்

காணும். இதுல போற இடத்துல சொத்து பாக்கா என்ன? இப்படியொரு பையன் கைக்கு அடக்கமா கிடைச்சா... பக்கத்துலயே ஒரு பங்களா கட்டிக் குடுத்து வச்சுக்கலாம்னு பாக்கறேன்'' என்றார்.

ஆளவந்தாருக்கு தங்கையின் மேல் எவ்வளவு பாசம் என்று நாகரத்தினத்துக்குத் தெரியும். அது மட்டுமல்லாமல் நாகரத்தினம்தான் பிரபாவதியைக் கிட்டதட்ட வளர்த்தார் என்று சொல்ல வேண்டும். அதனால் அவருக்கும் பிரபாவதியின் மேல் பாசம் உண்டு. எனவே கணவன் முடிவு நல்ல முடிவுதான் என்று அவரும் நினைத்தார்.

"நாகு! ஒரு வேலை செய்! பிரபாவதிக்கு அந்தப் பையனைப் பிடிச்சிருக்கான்னு மட்டும் பல்ஸ் பாத்துச் சொல்லு..'' என்றான்.

"அது வேண்ணாக் கேட்கறேன். பிரபா என்ன சொல்லுவா? அண்ணன் என்ன சொல்றாங்களோ அப்படிம்பா! இருந்தாலும் மனசுக்கும் பிடிக்கணும் இல்லே! ஆள் பாக்க நல்லாத்தான் இருக்காப்ல! எதுவும் ஒரு தடவைக்கு நாலு தடவை விசாரிச்சுக்குங்க..'' என்றாள்.

"ஆமா! விசாரிச்ச வரைக்கும் இப்ப வரைக்கும் ஆள் நல்ல ஆள் தான். எந்தத் தப்புத் தண்டாவுக்கும் போகாதவன் தான்!'' என்றார் ஆளவந்தார்.

பிரபாவதியும் பெரிதாக மறுக்கவில்லை. அண்ணன் தங்கையைத் தன்னருகிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார் என்பதிலேயே மனம் நெகிழ்ந்து போயிருந்தாள்.



நாகரத்தினம் வேறு இன்னொன்று சொன்னாள் "பிரபா...! உங்கண்ணன் பலவிதத்திலயும் டெஸ்ட் பண்ணினாராம் எல்லாத்திலயும் அவரு தேறிட்டாராம்'' என்றாள்.

பிரபாவதி ஒரே ஒரு வார்த்தை சொன்னார். "அண்ணி.. அண்ணன் பார்த்து எது செஞ்சாலும் சரி'' என்று.

அண்ணனும் ஏமாந்து விட்டார் என்று திருமணம் ஆகி ஓரிரு வருடத்தில் தெரிய ஆரம்பித்தது. ஆளவந்தார் ஒரு விஷயத்தில் மிகவும் உறுதியாக இருந்தார். அது என்னவென்றால் சொத்துக்கள் எல்லாம் பிரபாவதியின் பேரில்தான் இருக்கும். அம்மையப்பனுக்குத் தேவையான பணத்தைப் பிரபாவதியிடம் தான் அவர் கேட்டுப் பெற வேண்டும்'' என்பதுதான்.

தங்கள் ஆலையில் இருந்து கொடுக்கப்படுகிற சம்பளத்தைக் கூட அவர் வீட்டில் கொடுத்து தான் செலவுக்கு வாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்த்தார்.

திருமணம் ஆன புதிதில் இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்றிருந்த அம்மையப்பன் மெதுவாகத் தான் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்தார்.

என்றைக்காவது ஒரு நாள் சொல்லிக் கொண்டு மது அருந்திவிட்டு வர ஆரம்பித்தான். சகோதரனிடம் சொன்ன போது,

"இருக்கறதுதாம்மா..! பெரிசு பண்ணாதே!'' என்றார் சகோதரன்.

அந்தக் காலத்தில் எல்லாம் இல்லாதது ம... பழக்கம்! இப்போது போல இரவு விட்டிலும் சரி! நல்ல விசேஷங்களிலும் சரி மது அருந்துவது என்பதெல்லா... இல்லையே! ஆனால் அம்மையப்பனின் அட்டகா... நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது.

பிரபாவதியும் குடும்ப கௌரவத்தைக் கருதி அ... யெல்லாம் பொறுத்துக் கொண்டார். இதற்கிடையி... இனியனும் பிறந்து வளர்ந்தான்.

பிரபாவதி கேள்வி கேட்டால் ''நான் இந்த வீட்ட... யாரு! கூலிக்காரன்தானே...! எனக்குன்னு சொத்து பத்... இருக்கா.. என்ன?'' என்று ஆரம்பித்து விடுவார்.

சொத்துக்கள் எதுவும் எழுதி வைப்பதில்லை என்பதில் மட்டும் ஆளவந்தார் உறுதியாக இருந்தார். நாளாக ஆக அம்மையப்பன் நடந்து கொள்கிற விதத்... பார்த்து பிரபாவதியும் அந்த முடிவிலேதான் இருந்தார்.

வெளிப்படையாக ஆட்டம் போட்டால் ஆளவந்தார் பின்னியெடுத்து விடுவார் என்ற பயம்தான். எல்லாக் கோபத்தையும் பிரபாவதியிடம் காட்டினான். ''உங் கண்ணன் கிட்டே எதையாவது சொல்லி அவரு வந்து கேட்டா நல்லா இருக்காது. புருஷன், பெண்டாட்டி விவகாரம் வெளியே போங்கன்னு சொல்லுவேன்'' என்பான்.

பிரபாவதியும் அண்ணனுக்கு அவமரியாதை வந்து விடக்கூடாது என்றே நினைத்தார். ஆனால் வீட்டில் இருந்து பணம், பொருள் என்று திருடு போக ஆரம்பித்தவுடன் சகோதரனிடம் சொன்னாள். ஆளவந்தாரும் மிரட்டி வைத்தார்.



அதற்குப் பிறகு அம்மையப்பன் கொஞ்ச நாள் அமைதியாக இருந்தான். 'ஆஹா கணவன் திருந்தி வருகிறார்' என்று தான் பிரபாவதியும் நினைத்தார். ஆனால் எதைச் செய்தால் ஆளவந்தாருக்கும் பிரபாவதிக்கும் தீராத அவமானம் நேருமோ அதைச் செய்வதற்காக அமைதியாகத் திட்டம் போட்டு வேலை செய்து கொண்டிருந்தான் அம்மையப்பன் என்று பிரபாவதிக்குப் புரியவில்லை.

புரிந்தபோது விஷயம் எல்லை மீறி இருந்தது.

## 4



''நான்தான்.. தாயம்மா.. பேசறேன்'' என்றார் தாயம்மா. கதிர்காமனின் மனைவி.

பெயர்தான் தாயம்மா என்று கொஞ்சம் பழமையாக இருந்ததே தவிர ஆள் நன்றாகவே இருந்தாள். கழுத்தில் பெரிய தேர் வடம் போல ஒரு செயின், காதில் மாட்டல், கழுத்தில் அட்டிகை என்று நகை ஸ்டாண்டு போல நடமாடிக் கொண்டிருந்தார்.

கதிர்காமன் எவ்வளவுக்கெவ்வளவு மனோரஞ்சிதத்தின் மேல் பாசம் வைத்திருந்தாரோ அந்த அளவுக்கு தாயம்மா கொழுந்தியின் மேல் குரோதம் வைத்திருந்தார். ஆனால் வெளியே காட்டிக் கொள்ளமாட்டார். அவ

ருடைய பொறாமைக்குத் தீனி போடுறாற் போன்ற விஷயம் முந்தின நாள் நடந்து இருந்தது.

மனோரஞ்சிதத்துக்கு அந்தக் குறிப்பிட்ட நாட்களா... கொஞ்சம் வயிற்று வலி இருக்கும் கடந்த ஒன்றிரண்டு நாட்களாகவும் அப்படித்தான் இருந்தது. அம்மா அப்பா வேறு இல்லை. என்பதால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிற பொறுப்பு தாயம்மாவுடையதாக இருந்தது. வீட்டில் வேலைக்கு இருக்கிற பெண்க... இரண்டு பேரை அழைத்துக் கொண்டு மருத்துவமனை... போயிருந்தார்கள்.

பெண் மருத்துவர் கௌசல்யா மனோரஞ்சிதத்... டெஸ்ட் செய்து பார்த்து விட்டு ''எதற்கும் ஸ்கே... செய்து விடலாம்'' என்றார். செய்தார்கள்.

''ஸ்கேன் ரிப்போர்ட்டைக் கொண்டு வந்து கொடுக்கும் வரை இருங்கள்'' என்று வேறு சொல்லி விட்டார். தாயம்மாவும், மனோரஞ்சிதமும் மற்றவர்களுமாக போய் ஆஸ்பத்திரியின் உள்ளே இருந்த கேண்டீனில் சாப்பிட்டு விட்டு வந்தார்கள். டாக்டர் மற்றவர்களை வெளியே இருக்கச் சொல்லி விட்டுத் தாயம்மாவிடம் மட்டும் தனியாகப் பேசினார்.

''தாயம்மா.. மேடம்! நான் சொல்லப் போற விஷயத்தை நல்லா மனசுல வாங்கிக்குங்க..! உங்க கொழுந்திக்கு யூட்டிரஸ் வீக்கா இருக்கு..'' என்றார்.

''அப்படீன்னா..!'' என்பது போல் விழித்த தாயம்மாவிடம் டாக்டர் மறுபடியும் விளக்கினார்.

''அதாவதும்மா..! கர்ப்பப்பை கொஞ்சம் வீக்கா இருக்கு!'' என்றார்.



தாயம்மா உடனே ''அப்பக் கல்யாணம்'' என்று இழுக்க.

''கல்யாணமெல்லாம் பண்ணலாம்! பிரசவத்தப்ப மட்டும் கொஞ்சம் கேர்ஃபுல்லா இருக்கணும்'' என்றார்.

தாயம்மாவுக்கு உள்ளூர சந்தோஷம் கிளம்பியது. சொத்தில் சரி பாதி இந்தப் பெண்ணுக்குப் போகிறதே என்ற ஆதங்கம் அவருக்குள் இருந்து கொண்டேதான் இருந்தது.

''கல்யாணமே பண்ண முடியாது'' என்று தன் கணவனிடம் சொல்லி விடலாமா என்று கூட நினைத்தார். ஆனால் கதிர்காமன் பொல்லாதவர். நேராக டாக்டரிடம் வந்து கலந்தாலோசித்து விடுவார். 'சரி.. எப்போதும் போல நடிக்க வேண்டியதுதான்' என்று முடிவு கட்டிக் கொண்டார்.

''மனோ! பாத்து வா.. சாமி!'' என்று அண்ணி எதற்காக தன்னை இப்படித் திடீரென்று தாங்குகிறார் என்று மனோரஞ்சிதத்துக்கும் புரியவில்லை. மனோரஞ்சிதம் இயல்பிலேயே புத்திசாலியானவள். அண்ணி தன்னிடம் உண்மையான அன்பைச் செலுத்தவில்லை. தனக்கும் சொத்தில் பங்கிருப்பது குறித்து அவருக்கு ஆற்றாமை இருக்கிறது என்று புரிந்து கொண்டிருந்தாள். அண்ணனைப் போலவே அழுத்தம். அதனால் எதையும் காட்டிக் கொள்ள மாட்டாள். தன்னால் அண்ணன் குடும்பத்துக்குள்ளே குழப்பம் வரக்கூடாது என்று அவள் ஆத்மார்த்தமாக விரும்பினாள். ஏதாவது பிரச்சினைகளைக் கிளப்பினால் இருக்கிற அண்ணன் ஒருவருடைய

பாசமும் தனக்கு இல்லாமல் போய் விடுமோ என்று எண்ணிக் கொண்டாள்.

அண்ணி என்ன வேலை சொன்னாலும் செய்து விடுவாள். வீட்டில் வேலையாட்கள் நிறைய இருந்ததால் அண்ணியால் நேரடியாக அவளை எதுவும் செய்யவும் முடியவில்லை. அதிலும் ஒன்றிரண்டு பேர் வயதான வேலைக்காரப் பெண்மணிகள் வெகு நாட்களாக அந்த வீட்டில் இருந்து வருபவர்கள். தூரத்து உறவு வேறு! நேரடியாக கதிர்காமனிடம் உரிமையாகப் பேசக் கூடிய சலுகையும் பெற்றிருந்தார்கள். அதனால் கொழுந்தியை ஏடாகூடமாக நடத்தினால் அது கணவன் காதுக்கு உடனே போய்விடும் என்ற பயம் இருந்தது.

தாயம்மா வீட்டில் பெரிய வசதி ஒன்றும் இல்லை. அதிலும் அந்தக் காலத்தில் வாழாவெட்டியாக ஒரு பெண் பிறந்த வீட்டுக்குச் செல்வது ஒன்றும் அவ்வளவு உசிதமான காரியமும் இல்லை. அதையெல்லாம் உத்தேசித்துத்தான் அவள் சூழ்நிலைக்கேற்ப நடித்துக் கொண்டாள்.

கதிர்காமனிடமும் தன் மனைவி விஷயத்தில் அவ நம்பிக்கை இருந்தது. வசதியில்லாத வீட்டுப் பெண்ணாக எடுத்தால் அடங்கியிருப்பாள் என்று நினைத்தது போக அவள் குணத்தில் குறைவு பட்டவளாக இருப்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார். அதனால் தங்கை விஷயத்தில் அவள் எதுவும் விளையாடி விடக்கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். அதைத் தாயம்மாவும் புரிந்து கொண்டிருந்தாள். ஆனால் இப் போது மனோரஞ்சிதத்தின் இந்தப் பிரச்சினை அவளுக்கு லட்டு போல வாய்த்தது.



அன்றிரவே கணவரிடம் சோகம் போல் சொல்லி அழுது வைத்தாள். கதிர்காமனுக்குத் திக்கென்றது. "விடுபுள்ளே! கல்யாணம் என்ன நாளைக்கேவா... பண்ணப் போறோம். அது கெடக்குது இன்னும் எத்தனையோ வருஷம். அப்பப் பாத்துக்கலாம்" என்று அடக்கிவிட்டார். ஆனால் அவருக்கும் திகிலாகத்தான் இருந்தது.

தங்கையைத் தேடி அறைக்குப் போனார். "என்னடா.. எப்படி இருக்கே?" என்றார்.

"நல்லாத்தான் இருக்கேன்" என்று விழித்தாள் மனோரஞ்சிதம். அவளுக்கு இன்னமும் விஷயம் முழுமையாகச் சொல்லப்படவில்லை. அண்ணனின் கரிசனமும், அனுதாபமும் அவளுக்கு ஏனோ ஆச்சரியமாக இருந்தது.

'சட்'டென்று சுதாரித்துக் கொண்ட கதிர்காமரும் சரிம்மா.. நல்லதும்மா.." என்று கிளம்பி விட்டார்.

அடுத்த நாள் காலை!

கணவன் நிலபுலம் பார்க்கக் கிளம்பிச் சென்ற உடனே தாயம்மா டெலிபோனைக் கையிலெடுத்தாள்.

"அண்ணி..! என்ன குழம்பு வைக்கறது.. சமையல் காரம்மா.. கேக்கறாப்ல.." என்று வந்தாள் மனோரஞ் சிதம்.

ரொம்பவும் பரிவாகப் புன்னகைத்த தாயம்மா "உனக்குப் பிடிச்ச குழம்பாத்தான் வைக்கச் சொல்லேன்" என்றார்.

அவள் அவசரம் அவளுக்கு!

ஹாலை விட்டுத் தாண்டிச் சென்ற மனோரஞ்சிதம் மறுபடியும் ஏதோ கேட்க வந்தபோதுதான் அது நிகழ்ந்தது.

மறுபடியும் மனோரஞ்சிதம் வந்ததை அறியாத தாயம்மா ஆனந்தமாக விஷயத்தை தன் சகோதரியிடம் விவரித்துக் கொண்டிருந்தார்.

"நல்ல நாள்லயே தில்லைநாயகம். இப்ப வேற கேட்கணுமா? சும்மா சொத்து இருந்தாப் போதுமா? வர்றவன் சொத்தை வச்சுகிட்டு என்ன பண்ணுவான்? கல்யாணம்ன்னா எதுக்கு? நமக்குன்னு ஒரு வாரிசு உண்டாகி குடும்பம் தழைக்கத்தானே..! அதுக்கே வழியில்லேன்னா.. எவன் கல்யாணம் பண்ணுவான்!" என்று மிகவும் சுவாரசியமாக விளக்கிக் கொண்டிருந்தார்.

மனோரஞ்சிதம் ஒரு நிமிடம் நின்றாள். "யாரைப் பத்திச் சொல்லிக் கொண்டிருந்தார் அண்ணி ஒரு வேளை தன்னைப் பற்றியோ?"

சந்தேகம் தோன்றவே சற்றே மறைந்து நின்று கவனிக்க ஆரம்பித்தாள். இதுநாள் வரை மனோரஞ்சிதம் அப்படியெல்லாம் செய்தவள் அல்ல! ஆனால் ஏனோ தெரியவில்லை. அவளுடைய உள்ளுணர்வு சொன்னது தன்னைப் பற்றி ஏதோ ஒரு விஷயத்தைத்தான் அண்ணி சுவாரசியமாகப் பகிர்ந்து கொண்டிருந்தாள். அது தன் வாழ்க்கையை பாதிக்கக்கூடிய விஷயம் என்று தோன்றியது. கூடவே அண்ணன் கூடத் தன்னைத் தேடி தன் அறைக்கு வந்ததையும் கண்களில் அன்பும், அனு தாபமும் நிறையத் தன்னைப் பார்த்ததையும் எண்ணிப் பார்த்தாள்.



"ஏதோ இருக்கிறது" என்று தோன்றவே மறைந்து நின்று கவனித்தாள். அதே நேரம் பழைய காலத்துப் படங்களில் வருகிற வில்லியைப் போல சுற்று முற்றும் பார்த்து விட்டு அண்ணி விரிவாக விளக்கினார்.

"ஆமா..! பின்னே இந்நேரமா என்ன சொல்லிகிட்டு இருக்கேன்னு நினைக்கறே! நேத்து ஆஸ்பத்திரிக்குப் போனமில்லே! அப்ப டாக்டரம்மா என்னைக் கூப்பிட்டு தனியாக பேசுச்சு. அப்ப என்ன சொல்லுச்சு. தெரியுமா குழந்தை பெத்துக்கறதுல பிரச்சினையாம்."

அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ தெரிய வில்லை. தாயம்மா மறுபடியும் தொடர்ந்தாள்.

"அடக் கிறுக்கே..! நான் சொல்றதை நல்லாப் புரிஞ் சுக்கோ..! கல்யாணம் பண்ணலாம். ஆனா பிரசவம் கோர்ஃபுல்லாப் பாக்கணுமாம். எவன் ஒத்துக்குவான்? இந்தக் காலத்துல நல்ல விதமா இருக்கறதுகளையே ஆயிரம் நொட்டை சொல்றாங்க" என்று அண்ணி மேலும் விளக்க மனோரஞ்சிதத்துக்கு நன்றாகப் புரிந்து போனது.

பேச்சு தன்னைப் பற்றியதுதான். நின்று கேட்டாள் முழுவதும் கேட்டாள். பிறகு தன்னறைக்கு வந்தாள். எப்படி வந்தாள் என்றே தெரியாது. இத்தனைக்கு நடுவிலும் சமையல் காரியிடம் போய் "எது செஞ்சாலும் சரின்னு அண்ணி சொல்லச் சொன்னாங்க" என்று சொல்லி விட்டுத் தன்னறைக்குப் போய் முடங்கிக் கொண்டாள்.

மனோரஞ்சிதத்துக்குத் தெரியும். அண்ணிக்குத் தன் மேல் ஏதோ ஒரு விதத்தில் குரோதம் இருக்கிறது என்று

இத்தனைக்கும் அவள் அண்ணியை எதிர்த்து எது செய்ய மாட்டாள். அண்ணன் என்ன சொன்னா என்ன மதிப்புக் கொடுப்பாளோ அதே போல அண்ணி என்ன சொன்னாலும் மதிப்புக் கொடுப்பாள். ஆனா இத்தனை வன்மம் தன் மனதிலே வைத்துக் கொண் அளவிற்கு அவள் என்ன செய்தாள் என்று புரியவில்லை.

தாயின் நினைவு வந்தது. அன்பும் பாசமும் பரிவும நடமாடும் அந்த அன்பு தெய்வம் இருந்திருந்த இப்படியெல்லாம் நடந்திருக்குமா? தனக்கு ஒரு துன் என்றால் அம்மா ஆறுதலாவது கொடுத்திருப்பாளே என்று இந்த இளம் உள்ளம் ஏங்கிப் போனது.

தன்னைப் பற்றிய செய்தியைப் பரிமாறிக் கொண்ட நேரத்தில் அண்ணியின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி. ஆர்வம்? பெண்ணுக்குப் பெண் இப்படி இரு பார்களா.. என்ன?

மாலை வரை தனது அறையிலேயே முடங்கி கிடந்தாள் என்னமோ தெரியவில்லை. தன்னைத்தா பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது அவள் மனதில் அசாதாரணமான ஒரு தெளிவு ஏற்பட்டிருந்தது.

அசத்தியமான அளவிலே மெச்சூரிட்டி ஒரு பக்குவம் கூட ஏற்பட்டிருந்தது அண்ணியின் மேல் வருத்தப்பட்டு என்ன பயன்? படிக்காத பெண்! வசதியில்லாத வீட்டில் இருந்து வந்த பெண்! சொத்துக்களின் மேல் ஆசை.. ஏன் வெறியே உடைய பெண்! அவரிடத்தில் இதற்கு மேல் பக்குவம் எதிர்பார்க்க முடியாது என்று தோன்றியது.

மனதைத் தேற்றிக் கொண்டாள் எனனதான் சொத்து இருந்தாலும் படிப்புத்தான் தனக்கு உறுதுணையாக இருக்கும் என்று முடிவு செய்து கொண்டாள்.



மாலை வரை தனது அறையிலே முடங்கி இருக்கிறாள் கொழுந்தி என்றவுடனே தாயம்மாளுக்குக் கொஞ்சம் 'கருக்'கென்றிருந்தது. தான் பேசினதைக் கேட்டிருப்பாளோ என்று தோன்றியது. கொஞ்சம் பயந்து போனாள். தானே அவளது அறைக்குப் போனாள்.

"மனோ... மனோ..! என்னடா ஆச்சு! ஏன்.. இப்படி ரூமுக்குள்ளேயே கிடக்கே!" என்று அன்பொழுகப் பேசிக் கொண்டே வந்தாள்.

மனோரஞ்சிதம் பரபரவென்று முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"ஒண்ணும் இல்லே.. அண்ணி! கொஞ்சம் டயர்டா இருந்துச்சு... அவ்வளவுதான்..!" என்றாள்.

"அதானே.. பார்த்தேன்..! என்னமோ.. ஏதோன்னு பயந்து போனேன்.. சாப்பிட்டியா?" என்றாள்.

"இல்லண்ணி.. பசிக்கலை..!" என்றாள்.

"பசிக்கலையா? பேசாம எழுந்திருச்சு வா..! வா.. நீ?" என்று இழுத்துப் போனாள்.

சமையற்காரம்மாவிடம் போய் "ஏன்த்தை புள்ளை சாப்பிடாமலேயே இருந்திருக்கா.. என்ன ஏதுன்னு கேக்காம.." என்று சத்தம் போட்டாள்.

"இல்லம்மா. நான் போய்க் கூப்பிட்டேன். அப்புறம் வரேன். வயிறு எப்படியோ இருக்குன்னு சொல்லிடுச்சு" என்றாள்.

"அப்ப என்கிட்டே சொல்லியிருக்கணுமில்லே!" என்றவர் "சரி.. சரி.. குழம்பு ரசமெல்லாம் சுட வைங்க..! புள்ளை சாப்பிடட்டும்" என்று அருகிலேயே இருந்து பரிமாறினாள்.

சரியாக அந்த நேரத்துக்குக் கதிர்காமனும் வந்து சேர்ந்தார்.

''ஏன்.. மனோ.. இப்ப சாப்பிடறா பகல்ல சாப்பிடலையோ?'' என்றார் கொஞ்சம் கோபமாக.

''ஆமாங்க! நான் கொஞ்சம் ஏமாந்துட்டேன் கண்ணசந்துட்டேன். இந்தப் புள்ளை சாப்பிடாமலே இருந்துச்சு... நான்தான் போய் வற்புறுத்திக் கூட்டிட்டு வந்தேன்'' என்றாள் தாயம்மா.

''அண்ணா! நானும்தாண்ணா.. கொஞ்சம் தூங்கிட்டேன். இதைப் பெரிய இஷ்யூ பண்ணாதீங்க! இப்பத்தான் சாப்பிடறேனே'' என்று சிரித்துச் சமாளித்தாள் மனோரஞ்சிதம்.

அண்ணனும் அருகிலே அமர்ந்து சாப்பிடச் செய்தார். தங்கையைப் பார்த்தும் பாராமலும் கவனித்த அண்ணனுக்கு நெஞ்சமெலாம் உருகியது. இவளுக்கு இப்படி ஒரு பிரச்சினை வர வேண்டுமா.. தாய் தகப்பனில்லாத இந்தப் பெண்ணுக்கு நல்லபடி மாப்பிள்ளை பாக்கறது கரை சேர்க்க வேண்டுமே என்ற கவலை அவர் மனதை அழுத்தியது.

தாயம்மா மேல் அவருக்கு முழு நம்பிக்கை இருக்கவில்லை. ஏதோ ஒரு விதத்தில் தன் தங்கையின் மேல் ஒரு பொறாமை இருக்கிறது என்று தெரியும்.

வசதியில்லாத இடத்திலே இருந்து வந்தவள் அதனால் அப்படி ஒரு குணம் என்று தேற்றிக் கொண்டார். அதனால் முதல் வேலையாக ஒன்று செய்தார்.



தங்களோடு கூட இருந்த தூரத்து உறவு முறையிலான ஒன்று விட்ட அத்தை பவழத்தம்மா அங்கே இருந்தார் அல்லவா? அவரை அழைத்தார்.

''அத்தை! தாயம்மா அங்கயும் இங்கயும் போயிடுவாப்ல! அது மட்டுமில்ல.. ஏதோ யோசனையா வேற இருப்பாப்ல! அதனால இனிமே மனோவுக்கு என்ன வேணும், ஏது வேணும்கறதை கவனிக்கற பொறுப்பு உன்னோடது. சரியா அத்தை!'' என்றார்.

பவழத்தம்மா மிகவும் மகிழ்ச்சியாக அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவருக்கும் உள்ளூர தாயம்மாவின் குணம் புரிந்துதான் இருந்தது. ஆனால் தானே வயிற்றுப் பிழைப்புக்காக ஒண்டி இருக்கிறோம் அப்படியிருக்கையில் தாயம்மாவை எதுவும் கேட்கப் போய் அதனால் தனது பிழைப்புக்கே பங்கம் வந்து விடக் கூடாதே என்ற பயம் இருந்தது. ஆனாலும் மனம் பொறுக்காமல் ஒன்றிரண்டு முறை கதிர்காமனிடம் ஜாடை மாடையாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதை நினைவில் வைத்துக் கொண்டுதான் பவழத்தம்மாவிடம் அப்படியொரு பொறுப்பை கொடுத்தார் கதிர்காமன்.

தாயம்மாவுக்குக் கொஞ்சம் அதிர்ச்சிதான். ஆனால் வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை தாயம்மாவுக்குக் கதிர்காமனிடம் அளவு கடந்த பயம் இருந்தது. அதனால் கதிர்காமனை எதிர்த்துப் பேச மாட்டாள்.

''என்ன தாயம்மா..'' என்று தன்னிடம் கேட்ட கணவனிடம்,

''ஹி.. ஹி.. நீங்க எப்படி செஞ்சாலும் சரி'' என்றாள்.

அந்த ஏற்பாட்டுக்குப் பிறகு மனோரஞ்சிதம்
கொஞ்சம் நிம்மதியாக இருந்தாள். இளம் வயதில் தாயை
இழந்த தாயன்பு அத்தனையும் பவழத்தம்மாவிடம்
அவளுக்குக் கிடைத்தது.

கல்லூரிக்குப் படிக்கப் போனாள். பட்டப் படிப்பு.
அண்ணன் கவனமாக அவளைப் பெண்கள் கல்லூரியில்
சேர்த்திருந்தார்.

ஏழெட்டு ஆண்டுகள் தன் எதிர்கால வாழ்க்கையைப்
பற்றிய கவலையே இல்லாமல் தான் வாழ்க்கையை
ஓட்டினாள். மனோரஞ்சிதம். ஆனால் இருபத்தேழு
இருபத்தெட்டு வயதைத் தாண்டியபோது ஏக்கத்தின்
விதை அவளுக்குள்ளே விழுந்தது.

வரன்கள் வந்தன. அப்படி வருகின்றவர்களிடம் கதிர்
காமன் நேரடியாகவே மனோரஞ்சிதத்தின் பிரச்
சினையைச் சொன்னார். எப்போர்ப்பட்டவர்களுக்கும்
ஏற்படக்கூடிய பயம் அவர்களுக்கும் ஏற்பட்டது.

மனோரஞ்சிதத்தின் திருமணம் தள்ளிக் கொண்டே
போனது அப்போதுதான் அந்த விபத்து மனோரஞ்
சிதத்தின் வாழ்க்கையில் நிகழ்ந்தது.

5



ஒரு பெருமூச்சுடன் அந்தக் கல்யாணப் பத்திரி
கையை மூடி வைத்தாள் மனோரஞ்சிதம்.



கல்லூரியில் பட்டப்படிப்பு படித்த பெண்களில்
அனைவருக்கும் அனேகமாகக் கல்யாணம் ஆகி
விட்டது. இவளுக்கும் இன்னொரு பெண்ணான
கீதாவுக்கும்தான் திருமணம் ஆகாமல் இருந்தது.
இப்போது தபாலில் வந்திருந்தது கீதாவின் திருமணப்
பத்திரிகை. கல்லூரியில் படிக்கும்போதே தனக்குத்
திருமணத்தில் ஆர்வம் இல்லை. நான் சமூக சேவகியாக
இருக்கப் போகிறேன் என்பது போலத்தான் சொல்வாள்
மனோ. இருந்தாலும் எப்படியாவது தாயம்மாவின்
உறவுக்காரர்கள் யாராவது மூலமாக அவளுடைய
பிரச்சினைகள் சக மாணவிகளுக்குத் தெரிந்து விடும்.
பார்த்தும், பாராததுமாக அவள் நடித்தாலும் அவர்கள்
அவளது முதுகுக்குப் பின்னால் அனுதாபப் பார்வை
களை வீசுகிறார்கள் என்று அவளுக்குத் தெரியும்.
அவளுக்குத் தெரிந்தாலும் தெரியாதது போல இருந்து
கொள்வாள்.

கல்லூரியில் என்.சி.சி. என்.எஸ்.எஸ். என்று எத்தனை
சமுதாய சேவை அமைப்புக்கள் இருந்தனவோ அத்தனை
யிலும் அவள் சேர்ந்து கொண்டாள். மனோ தைரியத்தை
வளர்த்துக் கொண்டாள் என்றாலும் உள்ளத்தின் ஓரத்
திலே ஒரு ஏக்கம் இருந்தது.

இதற்கிடையே ஒன்றிரண்டு வரன்கள் வந்தார்கள்.
ஆனால் அவர்களின் நோக்கமே பணம்தான் என்பது
தெளிவாகத் தெரியவே அவள் சகோதரனே அந்த
சம்பந்தங்களைத் தட்டிக் கழித்து விட்டார். அந்தக்
கல்யாணப் பத்திரிகையை டேபிள் டிராயரில் போட்டு
விட்டு கொஞ்சம் நேரம் அமர்ந்திருந்தாள் மனோ. பிறகு

திடீரென்று முடிவெடுத்தவள் போலே கோயிலுக்குக் கிளம்பினாள்.

கோயில் பிரகாரத்தில் நடந்து கொண்டிருந்த போதுதான் அந்தக் கவிதை அவளுக்கு நினைவுக்கு வந்தது. சத்தியவாணி என்ற ஆசிரியர் எழுதிய கவிதை நட்பின் அவசியத்தைச் சொன்னது.

விடியல் தரும் குளிர்ச்சியை
மாலை தரும் தென்றலை
இரவு தரும் கனவுகளை
வெளிச்சம் தரும் இலக்குகளை
உணர்த்திக் கொண்டு
இருக்கும் உயிர் - நண்பன் உயிர்

உறங்கும் போதும்
விழித்திருக்கும் போதும்
அன்பாய் உன் தலை
வருடும். நட்பின் கரங்கள்
நீ இல்லாத போதும்
உன் இருப்பை உணர்த்தும் ஜீவன்

உயரும்போது
படிக்கட்டாகும்!
தாழும் போது
ஊன்றுகோலாகும்



தேடும் போது
வெளிச்சப் புள்ளியாகி
சாயும் போது
மடியைத் தலையணையாக்கும்
நட்பின் வலிமை!

எல்லோருக்குமே தோள் சாய்ந்து கொள்ள ஒரு நட்பு வேண்டும். அந்த நட்பு கணவனிடத்திலேயே கிடைக்கப் பெற்ற பெண்கள் பாக்கியசாலிகள். அது தந்தையாக இருக்கலாம். தாயாக இருக்கலாம். தோழியாக இருக்கலாம். சகோதரியாகவோ சகோதரனாகவோ இருக்கலாம்.

துரதிர்ஷ்டவசமாக அவளுக்கு அது வாய்க்கவில்லை. அண்ணன் தந்தையின் ஸ்தானத்திலேயே நடமாடிக் கொண்டிருந்தார். தன் மேல் அன்பைக் கொட்டினாலும் அவரிடத்திலே எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. அண்ணி ஒரு சக பெண்ணைப் போலவே நடந்து கொள்ளவில்லை. இந்த இடை வெளியில் ஒரு ஆண் ஒரு பெண் என்று இரண்டு குழந்தைகள் அண்ணிக்கு உருவாகியிருந்தார்கள். இருந்தாலும் கூட இன்னும் அவளிடத்தில் முழுமை யான தாய்மை உணர்வு மலரவில்லை.

தன் மீது இப்பொழுதெல்லாம் கொஞ்சம் பரிதாபம் வேண்டுமானால் இருக்கும் போல இருந்தது. அதிலும் இரண்டு குழந்தைகளையும் வளர்ப்பதில் கொழுந்தி கொடுத்த ஒத்துழைப்பில் விளைவாக ஏற்பட்டதாக இருக்கலாம்.

பழத்தம்மா அன்பைக் கொட்டினாள். ஆனா
அவரிடத்திலும் அவளால் எதையும் முழுமையாக
கொட்டி விட முடியவில்லை. அவள் மனதில் ஒ
அழுத்தமும், புழுக்கமும் இருந்து கொண்டே இருந்த

கீதாவின் கல்யாணப் பத்திரிகை இன்றைக்கு அதை
கொஞ்சம் விசிறி விட்டு விட்டது. கண்டிப்பா
வெளியே போயே ஆக வேண்டுமென்று தோன்றவே
கிளம்பினாள்.

''கொடுமை, கொடுமையென்று கோயிலுக்கு
போனா அங்கே ரெண்டு கொடுமை ஆடிக்கிட்டிருந்
தாம்'' என்பார்களே அதுபோல கோயிலுக்குப் போனா
பள்ளித் தோழி ஒருத்தி இடுப்புக் குழந்தையோடு
வந்திருந்தாள்.

''டீ..! மனோ..!'' என்று ஆசையாக அழைத்தவ
''ம்..! நீயெல்லாம் காலேஜுப் படிப்பெல்லாம் மு
சிருக்கே..! உன்னைப் போய் வாடி போடின்னு பேசி
நல்லாவா இருக்கும்?'' என்றாள் கமலா.

''சேச்சே..! நான் என்னைக்கும் ஒரே மாதிரித்தா
வழக்கம் போலவே பேசு..!'' என்றவள் அவள் கு
தையைப் பார்த்தாள்.

சுருண்ட முடியுடன், துருதுருவென்ற பார்வையுட
அந்தக் குழந்தை அவளைப் பார்த்துக் கலகலவென்று
சிரித்தது.

மனோரஞ்சிதம் ஆசையுடன் கையை நீட்டினாள்
குழந்தை தொற்றிக் கொண்டது. மெத்தென்ற அத
ஸ்பரிசம் அவளுக்குள் ஒரு பரவசத்தைத் தோற்று
வித்தது.



திருமண வாழ்க்கையில் ஆர்வமில்லாத எத்
தனையோ தோழிகள் குழந்தை பிறந்ததற்குப் பிறகு
மாறியதை அவள் அறிவாள். தனக்குத்தான் அந்த பாக்
கியத்தை கடவுள் கொடுக்கவில்லையே என்ற எண்
ணமும் தோன்றியது.

நல்ல வேளையாக தன் வீட்டில் அண்ணனின்
குழந்தைகளை வளர்க்கிற வாய்ப்பாவது கிடைத்ததே
என்று எண்ணிக் கொண்டாள்.

''ஹாய்..! ஜிஜ்லி குட்டி..'' என்று கொஞ்சினாள் தன்
தோழியின் முகம் பார்த்து. ''என்னடி.. பேர் வச்சிருக்கே!''
என்றாள்.

''ரஞ்சித்..!'' என்றாள் தோழி தாய்மைக்கே உரிய
பெருமையுடன்.

எத்தனை தம்பதிகளைப் பார்த்திருக்கிறாள்? தங்கள்
குழந்தைகள் பேசுவதையும் நடப்பதையும் ஓடுவதையும்
காரியங்கள் செய்வதையும் பார்க்கும்போது எவ்வளவு
பெருமை பொங்கும் என்று எண்ணிக் கொண்டாள்.

''ஹையா! ரொம்பக் க்யூட்டா.. இருக்கான்..
இல்லே..!'' என்று கொஞ்சிக் கொண்டாள். சட்டென்று
தன் பர்ஸில் இருந்து ஒரு ஐம்பது ரூபாயை எடுத்துக்
குழந்தையின் கையில் திணித்தாள்.

''டீ.. எதுக்குடி.. இதெல்லாம்..?'' என்று தடுத்தாள்
கமலா.

''இருக்கட்டும்டி. குழந்தையை முதன் முதலாய்
பார்க்கும் போது வெறும் கையோட பார்க்கக் கூடாதுடி..''
என்றாள்.

"நீ வீட்டுக்கு வரலாம் இல்லையடி..!" என்றாள்.

"உன் வீடு எங்கே இருக்கு?" என்று விவரம் கே... டாள்.

கமலா விவரம் சொன்னாள். "சரிடி.. கண்டிப்பா ஒ... நாளைக்கு வரேன்..?" என்றாள் மனோரஞ்சிதம்.

"அது சரி.. நீ எப்பக் கல்யாணம் பண்ணிக்க... போறே?" என்றாள் கமலா ஆதூரத்துடன்.

உச்சுக் கொட்டினாள். "எனக்கும் கல்யாணத்து... ஆர்வம் இல்லைடி?" என்றாள்.

கமலா அனுதாபத்துடன் அவளைப் பார்த்தாள்.

"டீ..! மனோ..! நான் கேக்கறேன்னு கோபிச்சுக்... காதே..!" என்று பீடிகை போட்டாள் கமலா.

வரப்போவதை எதிர்பார்த்த மனோரஞ்சிதம் "சொல்லுடி..." என்றாள்.

"இல்லடி..! உங்கண்ணியோட ரிலேடிவ் ஒருத்தங்க எங்களுக்கும் தெரிஞ்சவங்க! அவங்ககிட்டே உங்க அண்ணி சொன்னாங்களாம். உனக்குக் கல்யாணம் பண்ண முடியாதாம் பண்ணினா.. குழந்தை பிறக்காதுன்னு.." என்றாள்.

மனோரஞ்சிதத்தின் மனம் இதைக் கேட்டு மரத்துப் போயிருந்தது. என்றாலும் ஒவ்வொரு முறையும் சுளீர் என்றிருக்குமே அதைப் போல இன்றைக்கும் 'சுளீர்' என்று உறைத்தது.

அவள் மேலே பேசுவதற்குள் கமலா குறுக்கிட்டாள்.

"டீ.. மனோ! உங்கண்ணி குணத்துக்கெல்லாம் அவங்ககிட்டேயெல்லாம் ஆயுசுக்கும் இருக்க முடி



யாதுடி. யாராவது ஒரு நல்லவரைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ! உனக்குன்னு ஒரு துணை இருக்கும்" என்றாள்.

கடகட பதில் சொல்ல வேண்டும் என்றுதான் தோன்றியது. ஆனால் பள்ளித் தோழியின் முகத்தில் தோன்றிய உண்மையான அக்கறை அவளை மேலே பேச விடாமல் செய்தது.

"தாங்க்ஸ்டி.. பார்க்கலாம்!" என்று மேலும் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசி விட்டு நகர்ந்தாள்.

அதே நேரம்!

அந்த ஆணின் உருவம் ஒரு குறுஞ்சிரிப்புடன் நகர்ந்ததை அவள் கவனிக்கவில்லை! அது மட்டுமல்ல! கொஞ்ச நாளாகவே அந்த உருவம் தன்னைத் தொடர்ந்து கண்காணித்து வருவதையும் அவள் அறியவில்லை.

* * *

காரை நிறுத்திவிட்டு சுற்று முற்றும் பார்த்தாள் மனோரஞ்சிதம்.

அது கொஞ்சம் குறுகலான ரோடு அங்கே காரை உள்ளே செலுத்த முடியாது. அதனால் தெரு முனையிலேயே காரை நிறுத்திவிட வேண்டியிருந்தது.

அது ஒரு புறநகர் ஏரியா. தெருவில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் வீடுகள் இருந்தது. அங்கே அவளுக்கு ஒருவரைப் பார்க்க வேண்டியிருந்தது.

அண்ணன் சொல்லியனுப்பிய வேலை! இப்படி ஏதாவது ஒரு தகவல் சொல்கிற வேலைகளோ முக்கிய

ஃபைல்களைக் கொண்டு செல்கிற வேலையையே கதிர்காமன் அவளுக்குக் கொடுப்பார். வேண்டுமென்றே தான் அப்படிச் செய்வார்.

சகோதரிக்குக் கொஞ்சம் வேலை கொடுத்த மாதிரியும் இருக்கும். “சென்ஸ் ஆஃப் பிலாங்கிங் னெஸ்” என்பார்களே அது மாதிரி ஒரு உணர்வு த... கைக்கு இருக்க வேண்டும் என்று விரும்பினா... அதோடு கூட கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் மொத்த மாக வீட்டிலேயே அடைந்து கிடக்காமல் வெளியே போய் விட்டு வந்த மாதிரியும் இருக்கும் என்றும் அப்ப... ஒரு வேலை செய்தார்.

காரை நிறுத்தி விட்டுத்தான் சந்திக்க வேண்டிய வரைப் போய் சந்தித்து விட்டு வந்தாள். வந்த போதுதா... கவனித்தாள். காரின் வலது புறம் பின் டயர் பஞ்சரா... இருந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் சற்றுத் திகை... தாள். மீண்டும் தான் சந்திக்க வந்தவரின் வீட்டுக்கே போய் உதவி கேட்கலாம் என்று நினைத்தாள்.

அந்த சமயம்!

அந்த பைக் தனக்கேயுரிய இரைச்சலுடன் அவள் அருகில் வந்து நின்றது. அதில் அமர்ந்திருந்த அந்த இளைஞன் அவளிடம் “மேடம்..! எனி பிராப்ளம்? கேன் ஐ ஹெல்ப் யூ?” என்றான்.

அவரை முன்னே பின்னே பார்த்தாற் போல அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் வந்த உதவியை விட்டு விடக்கூடாது என்ற எண்ணத்துடன்,



“ஆமா... சார்! கார் டயர் பஞ்சராகிருச்சு. பக்கத்துல எங்காவது மெக்கானிக் இருந்தா..?” என்று இழுக்க அவன் அதைக் காதில் வாங்காதவன் போல,

“ஸ்டெப்னி இருக்கா?” என்றான்.

“ம்..!” என்றாள்.

“ஓ.கே.! கவலைப்படாதீங்க! நான் ஹெல்ப் பண்றேன்” என்று சொல்லி விட்டுத் தன் பைக்கைத் தள்ளிக் கொண்டு போய் ஓரமாக நிறுத்தினான். பைக்கின் பக்கவாட்டில் இருந்த பெட்டியைத் திறந்து ஏதேதோ சாமான்கள் எடுத்துக் கொண்டு வந்தான்.

தானே காரின் பின் பக்கத்தில் இருந்த ஸ்டெப்னி டயரை எடுத்து மாட்டிக் கொடுத்தான். இத்தனை செய்யும் பொழுதும் அவள் முகத்தைக் கூர்ந்து பார்க்கவில்லை. ஒரு விகல்பமான பார்வை இருக்கவில்லை.

பத்து பதினைந்து நிமிடங்களுக்குள்ளாக வேலையை முடித்தவன் நிமிர்ந்து கைகளை உதறிக் கொண்டான்.

“வாஷ் பண்ணணுமே!” என்று உள்ளங்கைகளையும் தேய்த்துக் கொண்டு சொல்ல அவள் சட்டென்று “என் கார்ல இருக்கு?” என்று ஒரு பாட்டிலை நீட்ட அவன் கைகளைக் கழுவிக் கொண்டான்.

அவள் விடுதலையுணர்வுடன் “ரொம்ப தேங்க்ஸ் சார்!” என்றாள்.

“பரவால்லே.. மேடம்!” என்றான்.

“நீங்களே.. எதுக்கு சிரமப்பட்டுகிட்டு? மெக்கானிக்கு போன் பண்ணினா?” என்று அவள் இழுக்க.

''கண்டிப்பா வருவாரு? ஆனா வேலை முடிய எப்படியும் ஒரு மணி நேரமாவது ஆகும். அதுவரைக்கும் போற வர்றவன் எல்லாம் உங்களை வேடிக்கைப் பொருள் மாதிரி பார்ப்பான். வொய் சச் டிரபிள்? அதான் நானே ஹெல்ப் பண்ணினேன்'' என்றான்.

அவரைக் காணும்போது பார்வையில் வயதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்டிப்பாக இருபதுகளில் இல்லை! முப்பதுகளில் இருக்க வேண்டும்?

ஆண்களுக்கு மட்டும் ஒரு வசதி பெரும்பாலும் நாற்பது.. நாற்பத்தைந்து வரை பெரிய அளவில் அவர்கள் தோற்றத்தில் மாற்றம் இருப்பதில்லை.

''சார்..! நான்?'' என்று அவள் தன்னை அறிமுகம் செய்து கொள்ள ஆரம்பிக்கும்போதே அவன் குறுக்கிட்டான்.

''தெரியும்..! மிஸ். மனோரஞ்சிதம்! பி.ஏ.. பட்டதாரி..'' என்றான்.

''ஓ..! உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள்.

''தெரியும்.''

''நீங்க!'' என்று அவள் கேட்க ஆரம்பிக்க.. ''மேடம்! நான் யாருன்னு நீங்க தெரிஞ்சுக்காம இருக்கறதே நல்லது!'' என்றான்.

மேற்கொண்டு அவளைப் பேச விடாதவன் போல் பைக்கைத் தள்ளிக் கொண்டு ''வரட்டுமா?'' என்பது போலத் தலையை ஆட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டான்.



''எப்போதுமே ஒரு விஷயம் பாதியில் விடப்படும் போது அதன் மேல் ஆர்வம் அதிகமாகும் என்ற சைக்காலஜியைப் புரிந்து கொண்டு தான் அவன் காய் நகர்த்துகிறான் என்றும் காரின் டயர் பஞ்சர் ஆனதற்கே காரணம் அவன்தான் என்றும் அப்போது அவளுக்குப் புரியவில்லை.

மேல் தட்டு வர்க்கத்தினருக்கான உடைகள்தான் அணிந்திருந்தான். ஆள் பார்ப்பதற்கும் நன்றாகத்தான் இருந்தான். படிப்பிருக்கிற மாதிரியும் தோன்றியது.

பெரும்பாலும் ஆண்களிடமிருந்து விலகியே இருந்த மனோரஞ்சிதத்துக்கு அந்த இளைஞனிடம் ஒரு ஈர்ப்புத் தோன்றியது. அது அவளை அறியாமலே நிகழ்ந்திருந்தது.

அன்றைக்கும் படுக்கைக்குப் போகும்போதுகூட....... சிரிப்புமாய் மின்னல் போல வந்து உதவி செய்து விட்டுப் போன விதம்தான் அவளுக்குள்ளே மின்னி மின்னி மறைந்து கொண்டிருந்தது.

ஏதாவது கொழுகொம்பு கிடைக்காதா என்று உள்ளூர ஊறிப் போயிருந்த ஏக்கம் இவன் தன் கதாநாயகனாக இருக்கக் கூடாதா என்ற எண்ணத்தை அவளுக்குள்ளே தோற்றுவித்து விட்டது. அதற்கேற்ப வாய்ப்புக்களும் உருவாக்கப்படுகின்றன என்பது அந்தப் பேதை மனத்துக்கு அப்போது புரியவில்லை.

மீண்டும் ஒரு முறை சந்திக்க நேர்ந்தபோது அவளுக்கு இனம் புரியாத மகிழ்ச்சி.

அது ஒரு புத்தகக் கடை! நகரின் பிரதானமான மையப் பகுதியில் உள்ள புத்தகக் கடை அது?

மூன்று மாடிகளாக இருந்த கடை அது!

அவள் முதல் மாடியில் இருந்தாள்! அந்தப் பகுதியில், கொஞ்சம் ஆழமாக எழுதுகிற எழுத்தர்களின் படைப்புக்கள்தான் இருக்கும்!

அவள் அந்தக் கதாசிரியரின் சிறுகதைத் தொகுப்பு தேடிக் கொண்டிருந்தாள். நாவல்களை கனரஞ்சகமாக எழுதுகிறவர் சிறுகதைகளை 'நச்'சென்று எழுதுவார். அதனால் அவருடைய சிறுகதைகளைத் தேடிப் படிப்பாள். புதியதாக ஒரு தொகுப்பு வந்திருக்கிறது என்றார்கள்.

தேடிக் கொண்டிருந்தாள்! அது ஒரு பிற்பகல் நேரம் என்பதால் பணியாட்கள் அவ்வளவாக இருக்கவில்லை.

ஒரு வழியாகப் புத்தகத்தைக் கண்டு பிடித்து விட்டாள். எடுத்து அங்கே இருக்கிற பணியாட்களிடம் கொடுத்து கவுண்டரில் ''பே பண்ணிட்டு வாங்கிக்கறேன்'' என்றாள். படிகளில் கால் வைத்து இறங்கலாம் என்று காலெடுக்கிற போது அவன் அந்த இளைஞன் மேலே வந்தான்.

அவள் முகம் மலர்ந்தது!

''சார்!'' என்றாள் ஆச்சரியமாக!

''என்னங்க.. நீங்க! எங்கே போனாலும் துரத்தித் தொல்லை குடுக்கறீங்க'' என்று சிரித்தான். அந்தச் சிரிப்பின் கவர்ச்சி அவளை ஈர்த்தது.

இரண்டு மூன்று நிமிடங்கள் நின்று பேசினார்கள்.

''சார்! உங்க மிஸஸ்?'' என்று அவள் இழுக்க அவன் முகம் வாடியது.



''அவங்க வர்லே! உங்க மிஸ்டர்?'' இழுக்க.

''அப்படி ஒருத்தர் என் வாழ்க்கையிலயே வர்லே?'' என்று அவள் நகைச்சுவையாக்கிச் சிரித்தாள்.

அவன் முகத்தில் சோகம் பரவிட ''அப்படி இருந்தும் கூட சில வேளையில நல்லதுங்க!'' என்றான்.

அவள் திகைப்பைப் பாராதவன் போல ''ஓ.கே...! நீங்க கிளம்புங்க..! நானும் புக்ஸ் எடுக்கணும்'' என்று வெட்டிக் கொண்டாற் போல நகர்ந்தான்.

## 6



மனோரஞ்சிதத்துக்கு அன்றைக்கு உறக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

எப்போதுமே நம்மைப் போலவே இன்னொருவர் சோகத்தில் இருக்கிறார் என்றாலே அவர்களிடம் ஒரு இணக்கம் ஏற்படும் அல்லவா? அந்த மாதிரி ஒரு இரக்கமும் இணக்கமும் மனோரஞ்சிதத்துக்கு அந்த இளைஞன் பால் ஏற்பட்டது.

சில தோழிகள் கூட அவளிடம் அந்த மாதிரியாகச் சொல்வது உண்டு.

''ஆமாடி..! மனோ..! கல்யாணம் பண்ணின எல்லாம் என்னத்தைக் கண்டாங்க! ஆரம்பத்து மாமியாருக்கு பதில் சொல்வதும் அப்புறம் புருஷனு பதில் சொல்வதும் பிற்காலத்துல மகளுக் மகளுக்கோ பதில் சொல்வதும்தான் வாழ்க்கை ஆயிடு கல்யாணம் இல்லைன்னா அந்த ஒரு கவலையே போச்சு. பண்ணிகிட்டா பல கவலைடி..!'' என்று.

அப்போதெல்லாம் அவர்கள் தன்னைச் சமாதான படுத்தவே அப்படிச் சொல்கிறார்கள் என்று எண்ணி கொள்வாள். ஆனால் இன்றைக்கோ அந்த இளைஞ சொன்ன விதம் அவளுக்குள்ளே ஒரு ஆழமா தாக்கத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது.

இந்த இளைஞன் தன் வாழ்க்கையில் எதற்கா குறுக்கிடுகிறான் அதிலும் தன்னைப் போலவே அனுபவம் உள்ளவன் என்று எண்ணியபோது மேலு பழக வேண்டும் என்று தோன்றியது.

சிலபேருக்கு மணவாழ்க்கையே இல்லை என்றா சில பேருக்கு மணவாழ்க்கை இருந்தும் நிறைவில்லை என்று தோன்றியது.

எப்படியும் முப்பத்தைந்து வயதுக்கு மேல்தா இருக்க வேண்டும். அதற்குள்ளாக இப்படியொரு கசப்புணர்வு ஏற்பட வேண்டுமென்றால் பாவம் அவ என்று தோன்றியது.

மறுபடியும் ஒரிரு நாட்களில் எங்காவது சந்திக்க நேர்ந்தால் ஆற அமரப் பேசி விட வேண்டும். அது சரி..! ஆண் பிள்ளையிடம் எதற்காகப் பேச வேண்டும்? ஏன்



நல்ல நட்பாக இருக்கக் கூடாதா? ஏதேதோ எண்ணிக் கொண்டே உறங்குவதற்கு நேரமாகி விட்டது.

மறுநாள் காலை!

எட்டு மணியிருக்கும்!

அண்ணனே அவள் அறைக்கு வந்து விட்டார்!

''என்னம்மா..! உடம்புக்கு ஒண்ணுமில்லையே எப்பவும் இவ்வளவு நேரம் தூங்க மாட்டியே..'' என்று உள்ளே நுழையவும் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தாள்.

''இல்லண்ணா! ஒரு நல்ல புத்தகம்.. ராத்திரி ரொம்ப நேரம் படிச்சுட்டிருந்தேன். தூங்க நேரமாயிருச்சு அதான்'' என்றாள் அசடு வழிய.

''அதானே.. பார்த்தேன்..! என்னவோ ஏதோன்னு நினைச்சேன்'' என்றார்.

சற்று நேரம் அமர்ந்து அவளிடம் பேசிவிட்டு வெளியே போனார் அப்பொழுது அவளுக்குத் தோன்றியது இவ்வளவு அன்பு இருக்கும்போது தான் எதற்குக் கவலைப்பட வேண்டும்? என்று கூடத் தோன்றியது.

கூடவே பவழத்தம்மாவும் ஒரு சில நாட்களுக்கு முன் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. தானும் அருகில் அடுத்த அறையில் இருக்கிறோம் என்று தெரியாமல் வெகு நாட்களாக அந்த வீட்டில் வேலை செய்கிற கருணாத்தாவிடம் ''என்னமோ.. போ..! கருணாத்தா..! எனக்கு இந்தப் புள்ளையை நினைச்சா கவலையா இருக்கு..?'' என்றாள்.

"எந்தப் புள்ளைய?" என்றாள் கருணாத்தா.

"அதான்.. நம்ம மனோரஞ்சிதத்தை! என்... அவங்க அண்ணன் காலத்துக்கும் அவளுக்... பிரச்சினையில்லை. ஆனா அவரு காலத்துக்குப் பி... என்ன பண்ணுமோ.. அண்ணிகிட்ட எந்த ஆத... இருக்காது. அதை நினைச்சாத்தான் கவலை... இருக்கு?"

"அது சரி.. போ! அப்படியெல்லாம் கவலைப்பட்... வாழ்க்கை நடக்குமா? ஏதாவதொரு துணை அ... நேரத்துக்கு கிடைக்கும்! ஆண்டவன் மேல பாரத்தை... போடு!" என்றாள் கருணாத்தா.

அந்த உரையாடலும் இப்போது அவளுக்கு நினை...வுக்கு வந்தது. அது மட்டுமல்லாமல் பள்ளித்தோழி சீ... போட்டு விட்டுப் போன தூபம் வேறு அவளுக்... புயலைக் கிளப்பியது.

"ரெண்டாம் தாரமா இருந்தாலும் பரவால்லை... ஒத்துக்கோ...! ஒரு ஆதரவு வேணுமில்லே!" என்று... சொன்னது நினைவுக்கு வந்தது.

பலரும் அள்ளித் தெளித்து விட்டுப் போன... ஆலோசனைகளைவிட அவள் அண்ணியை நினை...க்கும்போதுதான் அவளுக்கு கவலை மேலோங்கியது... எந்த மோதலும் இல்லாமல் வாழ்க்கை நடத்து...தற்கே என்னென்னமோ செப்படி வித்தைகள் எல்லா... செய்ய வேண்டியிருந்தது. அதிலும் அண்ணனுக்கா... அண்ணனுக்காக என்று பொறுத்துப் போவது நிறை... இருந்தது.



இத்தனையும் எதற்காகத் தன் மனதில் தோன்றுகிறது என்று யோசித்துப் பார்த்தாள். இவையத்தனையுமே எங்காவது மீண்டும் அந்த இளைஞனைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசைக்கான ஆதாரங்கள்தான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அந்த எதிர்பார்ப்பும் நிறைவேறியது அது மட்டுமல்லாமல் அந்த சந்திப்பு பல திருப்பங்களையும் தன்னுள்ளே வைத்துக் கொண்டிருந்தது.

* * *

தங்கள் வீட்டுக்கும் கோவிலுக்கும் என்று அவள் ஒரு ஒத்தையடிப் பாதை வைத்துக் கொண்டிருந்தாள்.

கிராமம் என்பதாலும், அவள் நடந்து செல்கிற பாதை பெரும்பாலும் அவர்கள் நிலத்துக்குள்ளே என்பதாலும் பயப்படுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை. அவர்கள் நிலத்தை தாண்டியவுடனே ஒரு மாந்தோப்பு வரும். அதைத் தாண்டி கொஞ்ச தூரத்துக்கு மட்டும் கருவேல மரங்கள் நிறைந்த ஒரு பாதையில் செல்ல வேண்டும்.

பாதுகாப்பான பாதை!

அன்றைக்கும் அதிலே நடந்து கொண்டிருந்தாள். அப்போதுதான் அவன் அந்தக் கருவேல முள்காட்டுப் பகுதியில் எதிரே வந்தான்.

அவளைக் கண்டவுடன் ஒரு நிமிடம் நின்றான். திரும்பி நடக்கலாமா என்று யோசிக்கிறாற் போல இருந்தது. அதற்குள்ளே அவள் அவசரமாக.

"ஹல்லோ.. சார்!" என்றாள்.

அவன் தர்மசங்கடத்துடன் நின்றவன் பே... நின்றான். ஆனால் அவன் கண்கள் மட்டும் மட... ரஞ்சிதத்தின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியை ஆர்... உள்வாங்கிக் கொண்டதையும் அவன் மனக் கவ... களையும் அவன் அறியவில்லை.

"என்ன சார்! என்னைக் கண்டாலே பயமா இருக்... ஓடறீங்க?" என்றாள்.

அவன் அழுத்தமாக நின்றான்.

"மேடம்! பூவைப் போல மென்மையானவங்... நீங்க..! உங்களைக் கண்டு நான் எதுக்காக ஓடணும்?" என்றான்.

அவன் அருகில் வரும் வரை நின்றாள்.

"எங்கே இந்தப் பக்கம்?" என்றாள்.

"கோயிலுக்கு வந்தேன்.. மேடம்! இந்தக் குறுக்கு பாதையில போனா ஆத்தங்கரைக்குப் போலாம். அங்... எனக்குன்னு ஒரு இடம் வச்சிருக்கேன். அங்கே போய் கொஞ்ச நேரம் உட்காந்து மனசை ஆத்திக்கறது" என்றான்.

"அப்படியா? அந்த இடத்தை நான் பார்க்கலாமா?" என்றாள்.

"கொஞ்சம் மறைவான இடம் மேடம்! தனியா நீங்க என்னோடு.." என்று அவன் இழுக்க அவள் துணிவாக அவனைப் பார்த்தாள்.

"என்ன..!..... தூண்டுதல்" அந்தக் காலத்துல அகப் பொருள் இலக்கியங்கள்ல சொல்லுவங்களே அது மாதிரி ஆகிடுமா! பாக்கலாம் வாங்க..! உங்ககிட்டே பேசணும்.



மறைவிடம் வேற சொல்றீங்க! வசதியாப் போச்சு" என்றாள்.

அவன் குறுஞ்சிரிப்புடன் முன்னே நடப்பதை அறியாமல் அவன் பின்னே தொடர்ந்தாள்.

எப்படித்தான் அந்த இடத்தைக் கண்டு பிடித்தானோ? அவ்வளவு அருமையான இடம். அப்படியொரு மறைவான இடம்.

சுற்றிலும் மரங்கள் மறைந்திருக்க ஒரு படு கிடையான பாறை! ஒரு ஆள் கால் நீட்டிப் படுத்துக் கொள்கிற அளவுக்கு வசதியாக இருந்தது.

"எப்பவாவது இங்கே வந்து தண்ணி போடுவேன்" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் பார்த்தாள். அவன் சிரித்தான்.

"என் மேல ரொம்ப நல்ல ஒபீனியன் வச்சுக்காதீங்க! ஏமாந்துடுவீங்க..!" என்றான்.

அவள் மனம் அப்படிச் சொல்வதற்கே ஒரு தைரியம் வேண்டும் என்று மெச்சிக் கொண்டது.

இருவரும் அமர்ந்தார்கள்! அவள் அவன் முகத்தைப் பார்த்து நேராகக் கேட்டாள்.

"என்னவோ.. உங்க மனசுல சங்கடம் இருக்கற மாதிரித் தெரியுது?" என்றாள்.

அவன் உச்சுக் கொட்டினான்.

"சொல்லி என்னத்துக்கு ஆகுது? என்னமோ எத்தனையோ பேருக்கு.. திருமண வாழ்க்கை நல்லா இல்லாமப் போயிடுது இல்லையா? அப்படியொரு வாழ்க்கை என்னுது?"

''ஏன் சார்? குழந்தைங்க... இல்லையா?'' என்றா...

''ஏன் இல்லாமல்? பதிமூன்று வயசுல ஒரு பைய... இருக்கான்'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். அவன் ஒரு கசப்பு... புன்னகையுடன் தொடர்ந்தான்.

''அது ஒண்ணுதான் கண்ட பலன். ஆனா அ... னையும் என்கிட்டே அண்ட விடறதில்லே...'' எ... றான்.

அவள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இருபத்திமூணுலயே கல்யாணம் மேடம்! ஆனா வசதியில்லாதவங்க வசதியான இடத்துல கல்யாணம் பண்ணக் கூடாது. மேடம்! அது சுயத்தை இழக்கறது தன்னையே அடகு வைக்கிற மாதிரி'' என்றான்.

அவள் முகத்தில் ஆழ்ந்த அனுதாபம் தோன்றியது. ''அதனால்தான் சொல்றேன்.. நீங்க கல்யாணமே பண்ணிக்காதீங்க!'' என்றவன் சட்டென்று நினைவு வந்தவன் போல.

''மேடம்! எனக்கு நீங்க யாருன்னு தெரியும்! ஆனா உங்களுக்கு நான் யாருன்னு தெரியாது? உங்க வீட்டுக்கு இது தெரிஞ்சா இதுல பெரிய பிரச்சினைங்க வரும்?'' என்றான்.

அப்போதுதான் அவளுக்குத் தோன்றியது. ''உண்மை தான் நீங்கள் யாரென்று நாம இதுவரை கேட்கவே இல்லையே..'' என்று.

''நீங்க யாரு?'' என்றாள் குரலே எழும்பாத குரலில்.



''நான் யாருன்னு இப்பவாவது கேட்டீங்களே'' என்று கடகடவென்று சிரித்து விட்டுப் பிறகு சொன்னான்.

''நான் யாரு தெரியுங்களா ஆளவந்தார் தெரியுங் களா? அவரோட தங்கை வீட்டுக்காரர். இப்போதைக்கு அதுதான் என் அடையாளம். ஏன்னா.. அங்க தலையைக் குடுத்து என் அட்ரஸையே தொலைச்சவன் நான்'' என்றான்.

மனோரஞ்சிதம் உண்மையிலேயே அதிர்ந்து போனாள். திகைத்து அமர்ந்து விட்டாள். அவன் கிண்டலாகச் சிரித்தான்.

''பாத்தீங்களா? என்னை நீங்க சந்திச்சுப் பேசறதே.. பெரிய கிரிமினல் குற்றம் மாதிரி! உங்க அண்ணிக்கும் என் வைஃபுக்கும் அவல் கிடைச்ச மாதிரி! அவங் களுக்குக் கடுப்பேத்தணும்னா வேண்ணா நாம தொடர்ந்து சந்திக்கலாம். ஏன்.. கல்யாணமே கூட செஞ்சுக்கலாம்'' என்றான்.

சட்டென்று எழுந்தான். ''வேடிக்கைக்குச் சொன்னேன். மேடம்! என் வழியில நான் போறேன்.. உங்க வழியிலே நீங்க போங்க!'' என்று விறுவிறுவென்று நடந்தான்.

மனோரஞ்சிதமும் அவன் போன பாதையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அன்றிரவும் அவளுக்குத் தூக்கம் போனது. விளை யாட்டுப் போல் எதற்காக அப்படி ஒரு விஷயத்தைச் சொல்லி விட்டுப் போக வேண்டும் அம்மையப்பன்.. ம்.. அதுதானே அவன் பெயர். இன்றைய சந்திப்பிற்குப் பிறகு விசாரித்தாள். நேரடியாக அல்ல. ஜாடை மாடை

யாக.. பவழத்தம்மாளிடம் இருந்து தெரிந்து கொண் டாள்.

இது மட்டும் அல்லாமல் பவழத்தம்மாளிடம் இருந்து வேறு விஷயங்கள் கூடத் தெரிந்து கொண்டாள்.

இரண்டு குடும்பமும் பங்காளிக் குடும்பம். பெரிய பகை என்று இல்லையென்றாலும் கூட இரண்டு குடும்பங்களுக்கும் இடையே இரண்டு மூணு தலை முறைகளாகப் போட்டி உண்டு என்று அவளுக்கே ஓரளவுக்குத் தெரியும் என்றாலும் பவழத்தம்மாள் முந்தைய தலைமுறைக் கதைகளையெல்லாம் சொன் னாள்.

'பாவம்! ரொம்பவும் அவமானம் போலும்! அதுதான் விரக்தியாகப் பேசுகிறார்' என்று அவளுக்குள்ளே அனுதாபம் பொங்கியது.

பிரபாவதியைப் பார்த்திருக்கிறாள் எப்போதுமே கம்பீரமாகத்தான் நடமாடுவாள். ஆனால் அம்மையப்பன் சொல்வதைப் பார்த்தால் ஆணவம் போலத் தெரி கிறதே! வசதியான இடம் என்ற கர்வமோ! அதனால் தான் கணவனை மதிக்காமல் நடக்கிறதோ என்று தோன்றியது.

'அது சரி.. அதிலே தான் என்ன செய்ய முடியும்? ஏதோ செய்ய முடியும் போல இருக்கிறதே..!'

'அவள் 'திடுக்'கிட்டு விழித்து எழுந்தாள். முக மெல்லாம் வியர்த்து விட்டது.

'இதென்ன.. இப்படியெல்லாம் தன் மனதில் தோன்று கிறது. என்ன சொல்கிறது இந்த மனது? அவரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்கிறதா?'



'ஏன்.. செய்து கொள்ளக் கூடாது? இதனால் பிரபா வதி போன்ற பெண்களுக்கு ஒரு படிப்பினை கிடைக்கு மல்லவா?'

'இரு.. இரு! பிரபாவதிக்குப் படிப்பினை கிடைப்பது இருக்கட்டும்! இரண்டாம் கல்யாணம் சட்டப்படி செல்லாது..! தெரியுமா?'

'இருக்கட்டுமே! இப்படிக் கழுத்தில் தாலி இல்லாமல் அனுதாபப் பார்வைகள் வாங்கிக் கொண்டு புழுங்கி விட அது மேலல்லவா? இந்தக் கயிறு ஒண்ணு இல்லாத தால்தானே அண்ணி என்னமோ பெரிய சாதனை செய்து விட்ட மாதிரியும் தன்னைத் தோற்றுப் போய் விட்டவள் போலவும் நடத்துகிறாள்.

தனக்கும் ஒரு ஆண் துணை, அது நெட்டையோ குட்டையோ இருந்தால் ஊர் வாயை மூடிக் கொள்ளுமே!'

மனம் இரண்டு, விதமாகவும் பேசியது. ஒரு விஷ யத்தில் மனம் பதிந்து விட்டால் தனக்கு ஆதரவான கருத்துக்களையே தேடும் என்பார்களே அது போல அவள் மனமும் தன் முடிவுக்கு ஆதரவான கருத்துக் களையே அவள் முன் அடுக்கியது'' ஆனால்.. எப்படி? தானாகப் போய் கருத்தைத் தெரிவிப்பது?

அப்போது அவளுக்கும் புரியவில்லை. அம்மையப்ப னுடைய வலை மெது மெதுவாக இறுகியது. என்ப தையும், 'நான் மட்டுமா காரணம்? நீயும்தானே முடிவில் பங்கு வகித்தாய்?' என்பது போன்ற கேள்வியைக் கேட்டு நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளவே அம்மையப்பன் திட்டம் போட்டுக் காய் நகர்த்துகிறான் என்பதும் தெரியவில்லை. சுத்தமாகப் புரியவில்லை.

தொடர்ந்து அவன் போய் அவனிடத்தில், ... உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன் ... வாய் விட்டுச் சொல்ல வேண்டிய அவசியமே ... லாமல் சூழ்நிலைகள் அமைந்தன அல்லது அமைக்கப் பட்டன.

கதையை விரித்துக் கொண்டே செல்வதற்... தேவையில்லாமல் ஒரு நாள் அவர்கள் வெளியூர் கோவில் ஒன்றில் வைத்து மாலை மாற்றிக் கொண் டார்கள். அம்மையப்பன் அவள் கழுத்தில் தாலியே கட்டி விட்டான்.

மாலையும் கழுத்துமாக அம்மையப்பனும், அவளும் வந்து நின்றபோது கதிர்காமன் அதிர்ந்து போனார்.

அவருக்கு ஓரளவு அம்மையப்பன் பற்றித் தெரியும். ஆனால் அவருக்குமே கூட முழுமையாகத் தெரிய வில்லை.

தங்கையின் முகத்தைப் பார்த்தால் அதில் தெரிந்த மகிழ்ச்சியைப் பார்த்தால் பெரியதொரு சாதனை செய்து விட்டவள் போல வந்து நிற்கிற அவளைப் பார்த்து அவருக்குள் பரிதாபமே தோன்றியது.

ஊருலகமும், தன் மனைவியுமாக எல்லாருமே சேர்ந்து ஏதோ ஒரு துணை கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தள்ளி விட்டார்கள் என்று தோன்றியது.

'சரி.. நாமாக எதுவும் சொல்ல வேண்டாம். ஒரு வேளை தன் தங்கையால் அம்மையப்பன் திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பும் உண்டல்லவா?' என்று எண்ணிக் கொண்டு அடுத்த தெருவில் இருக்கிற இன்னொரு பங்களாவில் குடி வைத்தார்.



கழிந்தன மாதங்கள்.

மெது மெதுவாக அம்மையப்பனின் குணாதிசயங்கள் வெளியே வர வர பிரபாவதி மட்டுமல்ல தானுமே வஞ்சிக்கப்பட்டோம் என்பதை உணர்ந்தார் மனோ ரஞ்சிதம்.

நடந்ததையெல்லாம் சொல்லி விட்டுக் குலுங்கக் குலுங்க அழுகிற அத்தையை ஆழமான வேதனை யுடனும் மௌனக் கோபத்துடனும் பார்த்துக் கொண் டிருந்தாள் சாருலதா.

# 7



பங்குனி உத்திர நாள்!

கண்ணபுரமே களை கட்டியிருந்தது! அந்த ஊர்க் கோவில் சிவனுக்கும், அந்த ஊர் அம்மன் வண்டார் குழலிக்கும் திருமணவிழா!

பத்து நாட்கள் திருவிழா! ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு நடத்துகிற விழா!

கதிர்காமரும் ஆளவந்தாரும் கூட தங்கள் பகைமை உணர்வைக் காட்டாமல் அந்த ஊர்க் கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். சொல்லப் போனால் கதிர்காமன் பக்கத்து ஊர்க்காரர் மாதிரித்தான். ஆனாலும் இந்த விழா

என்று வரும்போது இரண்டு மூன்று கட்ட...
வர்களும் சேர்ந்து கொள்வார்கள்.

அது என்னமோ தெரியவில்லை! அம்மைய...
இந்தத் திருவிழா விவகாரத்துக்கே வரமாட்...
வந்தாலும் பெரிதாகக் கண்டு கொள்ள மாட்டா...
'ஹி... ஹி..' என்பது போல ஒரு அசட்டுச் சிரிப்பே...
தலையாட்டி விட்டுப் போய் விடுவார்கள் அந்த ...
பெரியவர்கள்.

இப்படி ஒரு மரியாதை தேவையா என்று நினைத்தே...
என்னவோ.. அல்லது அந்த மாதிரிப் புன்னகைகளி...
இருந்த கேலித் தன்மை புரிந்தோ என்னவே...
அம்மையப்பன் கூட்டம் இல்லாத வேளைகளில் வந்...
கும்பிட்டு விட்டுப் போய் விடுகிறார்.

பெரும்பாலும் ஆளவந்தாரின் கட்டளை நாளும் கதிர்காமன் கட்டளை நாளும் அடுத்தடுத்து வராமல் பார்த்துக் கொள்வார்கள் மற்ற பெரியவர்கள். அது மட்டுமல்ல. யாருமே ஆளவந்தாரிடமாகட்டும், கதிர்காமரிடமாகட்டும் அம்மையப்பன் பற்றிய விவகாரத்தைப் பேச மாட்டார்கள்!

மனோரஞ்சிதமும், பிரபாவதியும் வருவார்கள் அவரவர்களின் சகோதரர்களின் கட்டளை நாளில் வருவார்கள். அமைதியாகக் கலந்து கொண்டு போய் விடுவார்கள்.

அம்மையப்பனுக்கும், தனக்கும் நடந்த திருமணத்தைப் பற்றி சாருலதாவிடம் விவரமாகச் சொன்ன கணத்தில் சாருலதாவுக்கு அத்தையின் வேதனை புரிந்தது. தன் தாயின் குணத்தையும் அவள் அறிவாள்.



இப்போது சாருலதாவும் அவள் சகோதரனும் அம்மாவை மிரட்டி விடுகிறார்கள் என்றாலும் அடிப்படையில் தாயிடம் இப்போதும் சில குணக்கேடுகள் இருப்பதை அவள் அறிவாள்.

இப்போதே இப்படியிருந்தால் அந்தக் காலகட்டத்தில் அத்தையை அம்மா எப்படி பந்தாடியிருப்பாள் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த இடைப்பட்ட காலத்தில் இன்னொன்றும் நடந்திருந்தது.

அம்மையப்பனின் குணம் முழுமையாகப் புரிபட்ட காலத்தில் தன் சகோதரனிடம் தனிமையில் அழுதார் மனோரஞ்சிதம்.

''அண்ணா! என் வூட்டுக்காரரும் கச்சேரிக்குப் போறாருங்கற மாதிரி நானும் ஒரு கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு வேண்ணாச் சொல்லலாமே தவிர நான் ஏமாந்தது உண்மைதான்'' என்று.

''அம்மா! இப்பவும் ஒண்ணும் பிரச்சினையில்லே! அம்மையப்பனைக் கையைக் காலை முடக்கி வீட்ல இருக்கிற மாதிரிப் பண்ணிடறேன். முதல் கல்யாணத்துல இருந்து டைவர்ஸ் வாங்கிடலாம்! உன்னோட கல்யாணத்தை சட்ட ரீதியாகப் பண்ணிடலாம்'' என்றார் கதிர்காமன்.

மனோரஞ்சிதம் ஆழ்ந்த வருத்தத்துடன் சகோதரனைப் பார்த்தார்!

''வேண்டாண்ணா! அவங்க பாவம்! நான் சிக்கின மாதிரித்தான் அவங்களும் சிக்கியிருப்பாங்க! அதுவும்

இல்லாம ஒரு மகன் வேற.. இருக்காங்க! அவர்க... டைவர்ஸ் வாங்கி வைக்கறதுல நமக்கென்ன லாப... என்றார்.

கதிர்காமன் நீண்ட பெருமூச்செறிந்தார். "எ... உனக்கும் ஏகப்பட்ட சொத்திருக்கு. உனக்கும் வாரிசு... ஒண்ணு.. வந்து.." என்று அவர் மேலே தொ... முன்னே மனோரஞ்சிதம் குறுக்கிட்டார்.

"இனி.. அந்தக் கண்றாவி.. வேற வேணு... அண்ணா? பிரசவமே ரிஸ்க்குன்னு டாக்டர்ஸ் சொல்... யிருக்காங்கன்னு எனக்குத் தெரியும்! அது மட்டுமல்ல... அப்படியொன்று பிறந்தாலும் நான் சட்டப்படியா... வைஃப் ஆக முடியாது. எல்லாத்துக்கும் மேலே இப்ப... ஒருத்தருக்கு இனிமேலும் ஒரு வாரிசு உருவாக்கி... குடுக்கிற ஐடியாவே எனக்கு இல்லை. நான் ஃபாமிலி பிளானிங் ஆபரேஷன் பண்ணிக்கலாம்னு இருக்கேன்" என்றாள்.

கதிர்காமன் அதிர்ந்து போய் பார்த்தார். மனோ ரஞ்சிதம் சகோதரனை அழுத்தமாகப் பார்த்தாள். "ஆமாண்ணா! ஒரு தப்பான ஸ்டெப் போதும். நான் எல்லாத்தையும் ஆழமா யோசிச்சுத்தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்" என்றாள்.

ஒரு நிமிடம் கனத்த மௌனம் நிலவியது. பிறகு கதிர்காமன் மெல்லிய குரலில் சொன்னார்.

"சரிம்மா! இனிமே நான் என்ன செய்யணு...னு நீ சொல்லு.. நான் செய்யறேன்" என்...ர்.

"தப்போ.. ரைட்டோ நாம ஒரு குடும்பத்தைக் கெடுத்துட்டோம். ஆனா இவராலே அவங்க ஒன்றும்



பெருசா சந்தோஷமா இருந்திருக்க மாட்டாங்கன்னுதான் தோணுது. இருந்தாலும் பரவால்லே..! இனிமேலாவது மேலே மேலே தப்புக்கள் செய்யாமே இருப்போம். எங்க வீட்டுக்காரருக்கு மாசம் ஒரு அலவன்ஸ் குடுத்துடு வோம்! வீட்ல ஒரு ரூம் குடுத்துடுவோம் இருந்துக் கட்டும்! ஆனா.. எல்லா சொத்தும் என் பேர்லயே இருக் கட்டும்" என்றார்.

கதிர்காமன் தங்கை இவ்வளவு தெளிவாகப் பேசுவதை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

"அது மட்டும் இல்ல அண்ணா! நான் ஒரு குழந் தையை வளர்க்கப் போறேன்" என்றாள்.

"செய்ம்மா..!" என்றார்.

"ஆனா... அதுக்கு நீங்க ஒத்துக்கணும்!" என்றாள்.

கதிர்காமன் "உன் பிரியம் எதற்கும் நான் தடை சொன்னதே இல்லையேம்மா..!" என்றார்.

'ஆமா! இப்படியொரு கல்யாணத்தை நான் செஞ் சுட்டு வந்து நின்னபோதும் கூட என்னைக் கண்டிக்காம மத்தவங்களுக்கு விட்டுக் குடுக்காம நடந்தவராச்சே!' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

"ஆமாண்ணா..! அதான் தைரியமா உங்ககிட்டே கேக்கறேன். சாருலதாவை என்கிட்டே விட்டுடுங்க" என்றாள்.

கதிர்காமன் பெரியதாக எந்த மகிழ்ச்சியையும் காட்டவில்லை.

"எதுக்கும்மா! உன்னோட சொத்தையும் நாங்களே கபளீகரம் செய்துட்டோம்னு ஊர் நினைக்கறதுக்காகவா?"

''ஊர் என்னவோ நினைச்சுட்டுப் போகட்டுன் இந்த ஊரா நம்மோட பிரச்சினைகளுக்குத் தீ சொல்லப் போகுது. எனக்கு ஆதரவா உங்க குழந்தையை விட்டுக் கொடுக்கற மனசு இருந்தா உத செய்ங்க! இல்லே.. அண்ணி ஏதாவது மறுப்பு செ வாங்களா'' என்றாள்.

கதிர்காமன் கசப்புடன் சிரித்தார்.

''உங்கண்ணியா! அவ சந்தோஷம்தான்.. படு ஏன்னா.. உன்னோட சொத்தும் சேத்தில்ல அவ மகளு வருது..! அந்தக் கவலையை என்கிட்டே விடும்மா! ச உன்னோட இருந்தா சந்தோஷம்னு நினைச்சா.. தாரா இருக்கட்டும்! அவ உன்கிட்டயே வளரட்டும். பின் நீ நல்லா வளர்ப்பே'' என்றார்.

அப்போது தன்னலமற்ற அண்ணன் தனக்கும் ஒ குழந்தை பிறக்கக்கூடும் என்று நினைக்கிறார் என் புரிந்தது. கசப்புடன் சிரித்துக் கொண்டாள் மனோர சிதம்!

அது போலவே சாருலதாவை தானே வளர்த்தார்.

சாருலதா தன்னோடு இருந்த காரணத்தால் ஓர தன் மனதில் இருந்த வெறுமையை ஜெயித்து வி டார் என்றுதான் சொல்ல வேண்டும். கதிர்காமரின் இன்னொரு மகளான விஜயராகவ் கதிர்காமரின் வீ டிலும் சாருலதா மனோரஞ்சிதத்தின் வீட்டிலும் வளர் தார்கள்.

அடுத்தடுத்த பங்களாக்கள் என்பதால் கதிர்காமருக்கு குழந்தையைப் பிரிந்திருந்த உணர்வு ஏற்படவில்லை.



சொத்துக் கிடைக்கிறது என்பதால் தாயம்மாவுக்கும் இந்த ஏற்பாட்டில் மகிழ்ச்சியே! மொத்தமாக இந்த ஏற்பாட்டில் அடிபட்டுப் போனது அம்மையப்பன் தான்! ஆனால் மாதத்திற்கு ஒரு அமௌன்ட் கிடைக்கிறதே அந்த அளவில் வைத்துக் கொண்டு பிழைப்பை ஓட்ட வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டார். ஆனால் அவரது பழக்கங்களுக்கு அது போதுமானதாக இல்லை.

மெல்ல மெல்ல பிரபாவதியின் வீட்டில் எப்படிப் பொருட்களின் மீது கை வைப்பாரோ அதே போல இங்கேயும் கை வைத்தார். மனோரஞ்சிதம் கேட்டால்.

''ஏன்.. புள்ளையில்லாத சொத்துத்தானே! யாருக்கோ காப்பாத்திக் கொடுக்கணுமா?'' என்று பேசுவார். அண்ணனை விட்டு· மிரட்டி விட்டார் மனோரஞ்சிதம். ஆனாலும் அவ்வப்போது திருட்டுக்கள் நடந்து கொண்டு தான் இருக்கும். மனோரஞ்சிதமும் சிலதைக் கண்டும், காணாமலும் விட்டு விடுவார்.

ஒன்றில் மட்டும் மனோரஞ்சிதம் கடுமையான கண்டிப்புடன் இருந்தார். அது சாருலதாவுக்கு அந்த வீட்டில் எந்தக் குறையும் இருக்கக் கூடாது என்பதுதான் அது. சாருலதாவும் சூட்டிகையாகவும் நல்ல குணமுள்ளவளாகவுமே வளர்ந்தாள். கதிர்காமருக்கு அதில் மிகவும் திருப்தி. தன் மனைவியிடம் வளர்ந்திருந்தால் கூட பெண் இவ்வளவு அருமையாக வளர்ந்திருக்க மாட்டாள் என்று.

எல்லா நினைவுகளும் ஓட அமர்ந்திருந்த மனோரஞ்சிதத்தை சாருலதாவின் குரல் மீட்டது.

''அத்தை! கோயிலுக்குப் போலாம் வா!'' என்று மனோரஞ்சிதம் பெரும்பாலும் கூட்டத்தி போவதைத் தவிர்த்து விடுவார். தேவையற்ற விமர்ச பார்வையைத் தவிர்ப்பது அது. அதைப் புரிந் கொண்டோ என்னவோ சாருலதா அவரை அடிக் வெளியே அழைத்துச் செல்வாள்.

''அத்தை! கொஞ்ச நாள் விமர்சனப் பார்வை பா பாங்க! அப்புறம் மறந்துடுவாங்க'' என்பாள்.

அதனால் மனோரஞ்சிதமும் மெல்ல மெல் வெளியே தலை காட்ட ஆரம்பித்தார். தன்னை மதித் அழைப்பவர்கள் வீட்டுக்குப் போவார். ஆனால் இ றைக்கு என்னவோ அவருக்கு எங்கேயும் போகு எண்ணம் எழவில்லை.

''சாருக்குட்டி! நான் வர்லே! நீ வேண்ணா.. உன் பிரண்ட்ஸ் யாரையாவது கூட்டிட்டுப் போ!'' என்றார். எவ்வளவு பேசினாலும் அத்தை இனிமேல் வரமாட்டார் என்பது புரிய கோயிலுக்குக் கிளம்பினாள் சாருலதா!

அன்றைக்கு ஆளவந்தார் வீட்டுக் கட்டளை என்பது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. கோவில் பிர காரத்தைச் சுற்றி முடிந்து விட்டு கர்ப்பக்கிரகத்தில் சுவாமியைத் தரிசிக்கலாம் என்று போனாள்.

எதிரே வந்த அய்யர் ஒருவர் ''வாங்கம்மா!'' என்று வரவேற்று அழைத்துப் போய்ப் பெண்கள் பகுதியில் நிறுத்தினார். சாமியைக் கும்பிட்டு விட்டு நிமிர்ந்தவளின் பார்வை எதேச்சையாக எதிர்ப்பக்கம் பாய்ந்தது!

எதிரே இனியன் நின்றிருந்தான். பக்கத்தில் அவன் மாமாவும், அத்தையும்! அவர்கள் பக்கத்தில் இன்னொரு



இளம் பெண் நின்றிருந்தாள். பார்த்தாலே ஆளவந்தாரின் ஜாடை தெரிந்தது.

'ஓஹோ! அத்தை மகள் போலும்!' என்று எண்ணிக் கொண்டாள் இனியன் தன் பார்வையை வெடுக்கென்று திருப்பிக் கொள்வதைக் கவனித்தாள்.

பூஜையை முடித்து விட்டு வந்த பெரிய அய்யர் ''வாங்கோ! இன்னும் அரை மணி நேரத்துல திருக் கல்யாணம் முடிஞ்சுடும்'' என்று அவர்களை அழைத் தார். அவர்கள் நகர்ந்தார்கள்!

அதே அய்யர் திரும்பி ''சாருலதா அம்மா நீங்களும் வாங்கோ..!'' என்றார்.

''இல்லே.. நான் போகணும்!'' என்றாள் தயக்கமாக.

''திருக்கல்யாண உற்சவம்! பார்க்க குடுத்து வச் சிருக்கணும். வாங்கோ..'' என்று மறுபடியும் வற்புறுத்த அவள் வேறு வழியின்றி கோவில் மண்டபத்தை நோக்கி நகர்ந்தாள்.

நல்ல வேளையாக தோழிகள் இரண்டு பேர் உடன் இருந்தார்கள்! அவர்களிடம் பேசிக் கொண்டு இனி யனையும் அவன் குடும்பத்தையும் பார்ப்பதையே முற் றிலும் தவிர்த்தாள்.

தன்னையறியாமல் அவள் பார்வை அந்த இளை ஞனின் மேல் பாய்ந்தது. அத்தை சொத்து வெளியே போகக்கூடாது என்பதற்காகத் தன்னைத் தத்தெடுத்தது போல இந்த இனியனும் தனது அத்தை பெண்ணையே கல்யாணம் செய்து கொள்வாராயிருக்கும் என்று கிண்ட லாக எண்ணிக் கொண்டாள்.

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" என்று
குரல் கொடுக்க அவள் திடுக்கிட்டு உற்சவமூர்த்தி
பார்த்தாள். திருக்கல்யாண உற்சவம் இனிதாக நிறை
முடிந்தது.

பிரசாதத்தை வாங்கிக் கொண்டு விட்டால் போது
என்று அவள் வெளியே வர முயன்றாள். ஆனா
கூட்டத்தில் சிக்கிக் கொண்டாள். தள்ளிக் கொண்டு
வேண்டாம் என்று ஒதுங்கி நின்றாள்.

அதே போல ஒதுங்கிய இனியனும் அவள் அரு
நின்றதை அப்போதுதான் கவனித்தான். இரண்டு பே
ஒரே சமயத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்
தவிர்க்க முடியாமல் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"ஹாய்!" என்றான் இனியன்.

"ஹாய்!" என்றாள் சாருலதா மெல்லிய குரலில்.

"நல்லாயிருக்கீங்களா?" என்றான் இனியன்.

"ம்..!" என்றாள்.

அதே சமயம் மாமா ஆளவந்தார் "என்னப்பா
இனியா.. போலாமா? இந்தப் பிரபா வந்திருக்கலா
இன்னைக்குத் திருக்கல்யாண உற்சவம் நல்லா நடந்
துச்சு.." என்று வந்தவர் அருகில் நின்ற பெண்ணை
பார்த்து அவளைக் கேள்விக் குறியாகப் பார்த்தார்.

இனியன் அன்றைக்கே சாருலதா வந்து விட்டு
போன விவரத்தைச் சொல்லியிருந்தான். அதனா
இப்போது "மாமா! நான் சொல்லலே.. அந்த சாருலதா.."
என்று கொஞ்சம் தர்ம சங்கடத்துடன் அறிமுகம் செய்து
வைத்தான்.



அவரது தர்மசங்கடத்துக்கு எள்ளளவும் குறையாத
அதே தர்மசங்கடத்துடன் "வணக்கம்!" என்று கைகுவித்
தாள் சாருலதா.

"வணக்கம்மா! நல்லா இருக்கியா?" என்று கம்பீரம்
குறையாமல் கேட்டுவிட்டு அவர் தலையசைப்பை
பதிலாகப் பெற்றுக் கொண்டு "போலாம்ப்பா!" என்று
இனியனை நகர்த்தினார் மாமா.

இனியனும் அவளைப் பார்த்துத் தலையசைத்து
விட்டு நகர்ந்தான். சாருலதா இதை எதிர்பார்க்கவில்லை.
அநேகமாகத் தன்னைக் கண்டவுடன் முகத்தைத்
திருப்பிக் கொண்டு போவான் என்றுதான் நினைத்தாள்.
ஆனால் ஒரு சம்பிரதாயத்துக்காக என்பார்களே அது
போல் அவளை நலம் விசாரித்தது மட்டுமல்லாமல்
மாமாவுக்கும் அறிமுகப்படுத்தி அதே சமயம் நாசூக்காகக்
கழன்று கொண்ட விதம் அவளை ஆச்சரியப்படுத்தியது.

அதே வியப்பு உள்ளத்தில் நிறைந்திருக்க அவர்
நகர்ந்தாள். சிந்தனையுடனே காரை எடுத்தாள்.

இரண்டு கார்களில் வந்திருந்தார்கள் இனியனும்
மாமாவின் குடும்பத்தாரும்!

மாமாவின் காரை இனியன்தான் ஓட்டினான். ஏனோ
மௌனமாகவே காரை ஓட்டுகிற இனியனை மாமா
ஆழ்ந்து கவனித்தார். ஆனால் ஒன்றும் சொல்ல
வில்லை.

இனியனும், சாருலதாவும் எதிர்பாராத விஷயம்
என்னவென்றால் இரவு உறக்கத்தின்போது கூட ஒருவர்
மற்றவர் முகத்தைக் கனவில் கண்டதுதான்.

இனியன் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தான்! முகத்தில் முத்து முத்தாக வியர்வை!

'இது எதற்கு? தன் மனம் ஏன் இப்படிப் பதறுகிறது?' என்று கவலையில் ஆழ்ந்தான்!



# 8

கல்லூரியில் ஆண்டு விழா!

இனியனுக்கு மிக முக்கியமான மேடைப் பொறுப்பு கொடுத்திருந்தார்கள். முக்கிய விருந்தினர்களை முறையாகக் கவனிப்பது அவர்கள் புறப்பட்டுச் செல்லும் வரை கவனிப்பது என்று அவனுக்கு நிறையப் பொறுப்புக்கள்.

மாணவர்கள் குழு ஒன்றை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தான். ஆண்டு விழா தொடர்பாக நிறையப் போட்டிகள் நடத்தியிருந்தார்கள். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் விழாவிற்கு ஏற்பாடு செய்ய என்று ஒரு குழு என்று பலவிதமான குழுக்கள் எல்லாருமே இனியனிடம் ஆலோசனை கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கல்லூரி மாணவியான ஒரு பெண்ணின் விருந்தினராக அன்றைக்கு சாருலதாவும் வந்திருந்தாள். அந்தப்



பெரிய ஹாலின் ஒரு பகுதியில் அவளும் அமர்ந்திருந்தாள்.

வரவேற்புரையே இனியன்தான் கொடுத்தான். அவன் பேசிய விதத்திலேயே தேர்ந்த பேச்சாளன் என்பதும் நிறையப் புத்தகங்களை வாசிக்கிறவன் என்றும் தெரிந்தது. ஆனால் வரவேற்புரை முடிந்துவிட்டு வந்ததோடு சரி, மேடைப் பகுதியில் தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளாமல் அக்கம் பக்கத்திலேயிருந்து கண்ணசைவுகளிலேயே அவன் மாணவர்களை இயக்கிக் கொண்டிருந்தான்.

கல்லூரி முதல்வர் கூட ஏதேனும் தேவைகள் என்றால் கண்ணாலேயே அவனிடம் பேசுவதும் அவரது தேவை என்ன என்பதைப் புரிந்து அவன் மாணவர்களைக் கொண்டு அதை நிறைவேற்றுவதும் பார்க்க சுவாரசியமாக இருந்தது. இது கூட சாருலதா தொடர்ந்து அவனையே கவனித்துக் கொண்டிருந்ததால் புரிந்தது. மற்ற பார்வையாளர்களின் கவனிப்பு வட்டத்திற்குள் கூட அவன் வராமல் காரியங்கள் செய்து கொண்டிருந்த விதம் அவளை ஈர்த்தது.

முடிந்த வரை தானும் பெரிய அளவில் அவன் கண்களில் படாத வண்ணம் அமர்ந்து கொண்டாள். எனினும் விழா முடிந்த பின் மாலை சிற்றுண்டிக்காக அவள் அந்தப் பெரிய பந்தலுக்குத் தன் தோழியோடு போகையில் அவனும் வந்தான்.

அவளை எதிர்பார்க்கவில்லை கண்களில் கண நேரத் தடுமாற்றம் நிகழ்ந்தது. சட்டென்று சமாளித்துக் கொண்டான். அவளுக்குள்ளேயும் புன்னகைக்கலாமா, வேண்டாமா என்ற குழப்பம் இருந்தது போலும்.

இனியன் சட்டென்று புன்னகைத்தான். "வாங்க!... கல்லூரிக்கு வந்ததற்கு ரொம்ப நன்றி" என்றான்.

அவள் இப்போது இயல்பானாள் முகம் ம... சிரித்தாள்.

"விழா நல்லா இருந்துச்சு" என்றாள்.

"தேங்க்ஸ்!" என்றான்.

மாணவன் ஒருவனை அழைத்து "மேடம் ந... முக்கியமான கெஸ்ட். கவனிப்பா!" என்று சொ... விட்டு சம்பிரதாயமாக ஒன்றிரண்டு வார்த்தை... பேசிவிட்டு "சரிங்க, நீங்க டிபன் சாப்பிட்டுட்டுத்... போகணும். கொஞ்சம் டிபார்ட்மென்டில் வேலை... யிருக்கு.. வரட்டுமா?" என்று தலையாட்டிவிட்டு... போனான்.

சாருலதாவின் தோழி அவன் போன பாதையையே... சற்று நேரம் பார்த்து விட்டு "சாரை உனக்குத் தெ... யுமா?" என்றாள்.

"ஆமா! உறவினர்!" என்றாள்.

"ஓ.. அப்படியா..!" என்று உற்சாகமாக அந்தப் பெண் "சார் இங்க ரொம்பப் பாப்புலர் தெரியுமா?" என்றாள்.

"ஆமா! ரொம்பத் திறமையானவர். கெமிஸ்ட்ரி டிபார்ட்மெண்ட் அவர் ஒரு குறிப்பிட்ட சப்ஜெக்ட்டுக்கு வந்தாருன்னா.. பசங்களுக்கு அந்தப் படம் ரொம்பப் பிரியமான பாடமாயிரும்" என்றாள்.

"ஓ! அவ்வளவு நல்லா நடத்துவாரா?" என்றாள்.

"ஆமா! சிரிக்கச் சிரிக்க கெமிஸ்ட்ரி நடத்தறதைக் கேள்விப்பட்டிருக்கியா? இவரு நடத்துவாரு" என்றாள்.



"ம்ஹூம்!" என்று ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள் சாருலதா.

மனதில் அவன் மேல் மதிப்பு உயர்ந்தது. உள்ளத்துக்கு இயன்ற வரை கடிவாளம் போட்டு வைத்திருந்தாள். எது நடக்காதோ அதை நினைக்காமல் இருப்பது நல்லது.

பங்காளிகள் குடும்பம் என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் தனது அத்தைக்கும், பிரபாவதி அம்மாவுக்கும் இருக்கக் கூடிய தர்ம சங்கடமான உறவு மற்றும் துரோகியான கணவர் என்று தங்கள் உறவில் இத்தனை சிக்கல்கள் இருக்கையில் தங்களுக்கிடையே எப்படி உறவு மலர முடியும்? நட்புக்கும் கூட சாத்தியம் இருக்கிறாற் போலத் தெரியவில்லை என்பதை உணர்ந்திருந்தாள். அதனால் தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இனியனும் கூட அதே மனநிலையில் இருந்தான். ஒரு சினிமா நமக்குப் பிடித்திருந்தால் அதில் கதாநாயகனோ, கதாநாயகியோ மனசுக்குப் பிடித்து விட்டால் சில நாட்கள் அவர்களின் முகம் நம் நினைவில் மின்னி மறைவதில்லையா? அப்படியான பாதிப்புத்தான் இதுவும் என்று நினைத்துக் கொண்டான்.

மேற்கொண்டு இந்த நினைவையே வளர விடக் கூடாது. அதனால் இனிமேல் அந்தப் பெண்ணைச் சந்தித்தால் சம்பிரதாயத்திற்காக இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு நகர்ந்து விட வேண்டியதுதான் என்று ஏற்கனவே முடிவு செய்து வைத்திருந்தான். அதையும் கூடச் செய்யாமல் விட்டு விடலாம்.

முந்தைய தலைமுறையைப் போல மா இருவரும் முறைத்துக் கொள்வதைப் போல நா முறைத்துக் கொள்ளலாம். ஆனால் இந்தத் தலை கல்வியறிவு பெற்றிருக்கிறது. அப்படியெல் வெளிப்படையாக விரோதம் பாராட்டத் தேவையில் என்றும் யோசித்து வைத்திருந்தான். அதனால் கல்லூரி விழாவில் சாருலதாவைப் பார்த்தவுட முதலில் திணறினாலும் மீட்டுக் கொண்டு உபசார இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு நகர்ந்தான்.

இனியன் அப்படி நகர்ந்தபோது கூட அந் பெண்ணைப் பார்த்தவுடனே தன் உள் மனத்தி 'குப்'பென்று எழுந்த மகிழ்ச்சியை அவன் தன் மனத்து குள்ளாவது ஒத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

தலையை ஒருமுறை சிலுப்பிக் கொண்டு நகர்ந்தான். ஆனால் அவர்கள் இருவருமே எடுத்த முடிவுக்கு நே மாறாக விஷயங்கள் நடக்கப் போகிறது என்று அவ களுக்குப் புரியவில்லை.

* * *

என்.சி.சி. காம்ப் நிறைவு விழா!

இனியனின் ஊருக்குப் பக்கத்து கிராமத்தில் அவர்க கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்ட முகாம் அது.

கல்லூரியில் என்.சி.சி.க்குப் பொறுப்பாளராக இருந்த பேராசிரியர் அவனது நெருங்கிய நண்பர். ''ஏம்பா இனியா நீயும் கொஞ்சம் உதவிக்கு வாயேன்'' என்று அழைத்தார் தட்ட முடியாமல் அவனும் வந்திருந் தான்.



மாணவர்களில் மனநிலை இரண்டு விதமாகவும் இருந்தது. ஒரு பக்கம் பதினைந்து நாளாக வீட்டை விட்டு இருக்கிறோமே என்று வீட்டு நினைவு இன் னொரு பக்கத்தில் என்.சி.சி. முகாமில் கிடைத்த இனிய அனுபவங்கள்!

சோகமும், மகிழ்வும் கலந்த மனநிலையில் இருந் தார்கள். பக்கத்து ஊர் என்பது இனியனுக்குத் தெரியும். ஆனால் அந்த ஊரில்தான் சாருலதாவும் இருக்கிறாள் என்பது அவன் அறியாதது. விழாவில் அந்த ஊர் முக்கியஸ்தர் கலந்து கொள்கிறார் என்று மட்டும்தான் நண்பர் சொல்லியிருந்தார். ஆனால் அந்த முக்கியஸ்தர் யார் என்பதைச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் கண்டிப்பாக அவன் தன் வருகையைத் தவிர்த்திருப் பான்.

விழாவிற்கான மேடை தயாராகி விட்டது. பதினைந்து நாட்களும் வேறு வேறு கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருந்த காலை நிகழ்ச்சிகளில் நல்லனவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து இன்றைக்கு விழாவை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சரியாக மாலை ஐந்து மணிக்கு விழா முக்கியஸ்தர் நுழைந்தார்.

அவரைப் பார்த்ததுமே இனியன் கொஞ்சம் தர்ம சங்கடமாக உணர்ந்தான். உடனே புறப்பட்டு விடலாமா என்று யோசித்தான். ஆனால் உடனே 'என்ன இருந் தாலும் பண்பாடு அறிந்தவர். நாலு பேர் இருக்கிற இடத்துல ரசாபாசமாக நடந்து கொள்ள மாட்டார்' என்று எண்ணிக் கொண்டான்.

நண்பரான பேராசிரியரிடம் மட்டும் "சேகர், த நினைக்காதீங்க! நீங்க கூப்பிட்டிருக்கீங்களே வி.ஐ அவங்க குடும்பத்துக்கும், எங்க குடும்பத்துக் கொஞ்சம் பிரச்சினைகள் இருக்கு! அதனால ந கொஞ்சம் ஒதுங்கியே இருந்துக்கறேன்" என்று சொல் விட்டான். அவரும் புரிந்து கொண்டார் போ "சரிப்பா..!" என்று சொல்லி விட்டார்.

தங்கள் கல்லூரி முதல்வரும் வரக்கூடும் என்பதா சட்டென்று அவனால் புறப்பட்டுப் போகவும் முடி வில்லை. தன் முகம் தெரியாத வகையில் ஏதோ மா வர்களை ஒழுங்கு செய்பவன் போலப் பின் வரிசையில் அமர்ந்து கொண்டான்.

கல்லூரி முதல்வரும் வந்திருந்தார். விழா நிறை வுக்குப் பின் சிற்றுண்டி அருந்த மாணவர்கள் போனா கள். மறுநாள் காலையில் அவரவர் வீட்டுக்குச் செல்கி உற்சாகம் அவர்களுக்கு.

மற்றொரு புறத்தில் வி.ஐ.பி.க்களுக்கு விருந்து பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது.

அப்போதுதான் கல்லூரி முதல்வர் அந்த வேலை செய்தார். கதிர்காமரின் அருகில் அமர்ந்து சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தவர் திரும்பி இனியனை அழைத்து "இனியன்.. இங்கே வாங்க!" என்றார்.

இனியன் தவிர்க்க முடியாதவனாக அவரை நோக்கிச் சென்றான். கதிர்காமனிடம் அவனை அறிமுகப்படுத்தி "இனியன்! எங்க கல்லூரிக்கு ஒரு சொத்து மாதிரி..! டேலன்ட்" என்று அறிமுகப்படுத்தினார்.



"என்னப்பா.. இது! தர்மசங்கடம்!" என்று அவன் தவித்ததற்கு நேர் மாறாக கதிர்காமன் புன்னகைத்தார்.

"ஆமா! கேள்விப்பட்டிருக்கேன்! உங்களுக்கு ஒண்ணு தெரியுமா.. பிரின்சிபல் சார்! இனியன் எங்களுக்கு உறவுக்காரர். என்ன.. கிராமங்கள்ல இருக்குமே அந்த மாதிரி ஏதோ பிரச்சினையினாலே போன தலைமுறையில இருந்து போக்குவரத்து விட்டுப் போச்சு" என்றார். சிரித்தார்.

கதிர்காமரிடம் இப்படி ஒரு வெளிப்படையான பேச்சை அவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. 'சட்'டென்று இலகுவான மனத்துடன் அவனும் வாய்விட்டுச் சிரித்தான்.

முதல்வரும் கூட வாய்விட்டுச் சிரித்தார். அதற்குப் பிறகு பத்து நிமிடங்களுக்கு மேல் கல்லூரி பற்றிய விஷயங்களைப் பொதுப்படையாகப் பேசி மகிழ்ந்தார்கள்.

இனியன் வேலை செய்து வந்த கல்லூரி அரசு கல்லூரி பெரும்பாலான பேராசிரியர்கள் அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்து வந்தார்கள். கல்லூரி சிறப்பாகப் போய்க் கொண்டிருப்பதால் அரசாங்கம் பெரும்பாலும் அங்கே இருப்பவர்களை மாறுதல் செய்வதில்லை. ஆனால் முதல்வர்கள் மாறிக் கொண்டே இருப்பார்கள். புதியதாக வந்த முதல்வர் என்பதால் அவருக்கு ஊர் நிலவரம் தெரிந்திருக்கவில்லை. இருந்தாலும் கதிர்காமன் நிலைமையைச் சமாளித்த விதம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவன் மெதுவாகக் கழன்று கொண்டான். ஆனால் விஷயம் அத்தோடு முடியவில்லை.

குழுவாக புகைப்படம் எடுக்கும் போதெல்லாம் கதிர்காமன் இனியனைத் தன் அருகிலேயே இருத்திக் கொண்டார். இனியனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒட்டவும் முடியவில்லை. வெட்டவும் முடியவில்லை.

போதாக் குறைக்கு வேறொன்றும் நடந்தது. முதல்வர் கிளம்பிய பின் சேகர் அவனிடம் வந்து "சேகர்! உன் பைக்கைக் கொஞ்சம் விட்டுட்டுப் போப்பா..! நாளைக்கு உன் வீட்ல கொண்டு வந்து விடறேன்" என்றான்.

"அப்புறம்.. நான் எப்படி?" என்று அவன் விழிக்க அவன் சட்டென்று.

"ப்ளீஸ்! கதிர்காமன் உன்னை டிராப் பண்றேன்னு சொல்லியிருக்காரு!" என்றார்.

இனியன் முறைத்தான். "என்னப்பா... நீ!" என்று மேலே பேசுமுன்,

"ப்ளீஸ்ப்பா... கோபிச்சுக்காதப்பா! அட்ஜஸ்ட் பண்ணிக்கப்பா..! ஜஸ்ட் ஹாஃப் அன் அவர் அவரோ கம்பெனியை பேர் பண்ணிக்கோப்பா..." என்று கெஞ்சவும் வேறு வழியில்லாமல் சம்மதித்தான்.

"வாங்க தம்பி!" என்று கதிர்காமரே மலர்ந்த முகத்துடன் அழைக்கவும் அவனும் சிரித்த முகத்தோடு போய்க் காரில் ஏறிக் கொண்டான்.

கதிர்காமரே காரை ஓட்டவும் "டிரைவர்..!?" என்று இழுத்தான்.



"டிரைவருக்கு ஒரு வேலை குடுத்து அனுப்பியிருக்கேன்" என்றார்.

"இது என்னமோ.. நாடகம் மாதிரி நடக்கிறது. ஒண்ணும் சரியில்லை" என்று அவன் எண்ணிக் கொண்டான்.

"அப்புறம் தம்பி..! உன் காலேஜ்ல அட்மிஷன் எல்லாம் எப்படி?" என்று பேச்சுக் கொடுத்தார்.

"கிராமப்புறமா இருந்தாலும் நல்ல ரிசல்ட் குடுக்கறதுனாலே அட்மிஷன் பத்திக் கவலைப்பட வேண்டிய அவசியம் இதுவரைக்கும் வர்லை" என்றான்.

அதற்குப் பிறகு கனமான மௌனம் நிலவியது. பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு தான் கவனித்தான்.

கார் தங்கள் ஊர்ப்பாதை நோக்கிச் செல்லாது வேறு பாதையில் செல்கிறது என்பது புரிய அவரைக் கேள்விக் குறியாகப் பார்த்தான். இதுவரையிலும் உறவு முறை சொல்லியும் அழைக்காமல், சார் என்றும் அழைக்காமல் அவன் ஒரு வழியாகப் பேசிச் சமாளித்திருந்தான். ஆனால் இந்த மாதிரியான சூழ்நிலையில் அப்படியே தொடர முடியாது என்பது போல்.

"சார்! இது என்ன?" என்றான் ஒருவிதப் பரிதவிப்புடன்.

"தம்பி தப்பா... நினைக்காதீங்க! உங்ககிட்டே பேசணும்.." என்றார் கதிர்காமன்.

இனியனின் முகம் இறுகியது. ஓரிரு நிமிடங்கள் காருக்கு வெளியே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். பிறகு ஒரு பெருமூச்சுடன் திரும்பி,

''சார்! இப்ப இருக்கிற நிலைமை அப்படியே நீ... கறதுதான் நல்லது. இதுல எதுக்கு மாற்றங்... பண்ணிக்கிட்டு?'' என்றான்.

கதிர்காமன் அவனைத் திரும்பிப் பார்த்தார்.

''தம்பி! இன்னைக்கு ஒரு நாள் மட்டும் நாம ம... விட்டுப் பேசலாம்னு நினைக்கிறேன். ரொம்ப நா... மனசுல இருக்கிற பாரத்தை இறக்கி வைக்கறதுக்கு ஒ... தோள் கொடுக்கக் கூடாதா?'' என்றார். அவர் குர... தெரிந்த ஆழமான வேதனை அவனை ஒரு க... உருக்கியது.

இந்த மாதிரி மாற்றம் தன் மனநிலைமையில் ஏ... ஏற்படுகிறது என்று புரியாமலே அவன் மௌனம... அமர்ந்து கொண்டான்.

கார் கதிர்காமரின் கெஸ்ட் ஹவுஸ் நோக்கிச் சென்ற... இனியன் மௌனமாக இறங்கிப் பின் தொடர்ந்தான்.

கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேனிடம் கண்ணசைக்க அ... உள்ளே வந்து கதிர்காமருக்கு மது அருந்துவதற்கா... ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான். இனியனுக்... அந்தச் சூழ்நிலை இரசிக்கவில்லை.

கதிர்காமர் அவனைப் பார்த்துப் புன்னகைத்தா... ''உங்களுக்கு இந்தப் பழக்கம் இருக்கா? எனக்கும் பெ... அளவிலே இல்லை. எப்பவாவது மனசு சங்கடப்பட்ட... ஆனா.. அதுக்கும் சாருலதா.. தடை போட்டுட்டாப்ப... ஆனா.. இப்ப..'' என்று அவர் மதுக் கிண்ணத்தை... எடுக்கும்போது அவன் தடுத்தான்.

''மன்னிக்கணும் நீங்க உங்க மகளுக்குக் கொடுத்... சத்தியத்தை மீறதை நான் எப்படி அனுமதிக்க... முடியும்?'' வேண்டாம்..!'' என்றான்.



அவன் குரலில் தெரிந்த ஆதங்கத்தைப் பார்த்தார். அவர் வாட்ச்மேனை அழைத்து எல்லாவற்றையும் அப்புறப்படுத்தச் சொல்லி விட்டார்.

''நீ முன்னாடி இரு!'' நான் கூப்பிடறப்ப வா'' என்று ஆணையிட்டார்.

இனியனின் மனத்தில் கொஞ்சம் பரிதாப உணர்வு தோன்றியது. இவர் மனத்தில் ஏதோ பெரிய பாரம் இருக்கிறது. இறக்கி வைக்கட்டும்'' என்று கேட்கத் தயாரானான்.

இவர் சட்டென்று அவனிடம் ஆவேசமாகக் கேட்டார்.

''ஏன் தம்பி! இந்த பங்காளிச் சண்டை ஈகோ போராட்டம் இதையெல்லாம் எந்த மடையன் தம்பி ஆரம்பிச்சு வைச்சான்'' என்று கேட்டார்.

அவன் பதிலொன்றும் சொல்லவில்லை. ஆனால் அதற்கு மேலாக அவர் சொன்ன வார்த்தைகள் அவனைப் புரட்டிப் போட்டன.

அதிர்ந்து போய்ப் பார்த்தான். அவர் மேலும் பேசப் பேச அவன் மனத்தில் பெரிய பாரம் வந்து அமர்ந்து கொண்டது.

# 9



''ஏன் உன்னைக் கூப்பிட்டு உட்கார வச்சுட்டு கேட்கறேன்னு நினைக்கறீங்களா இந்த பாழாப் போன

பங்காளிச் சண்டை உங்க வாழ்க்கையை மட்டு... என்னோட தங்கச்சி, பூவாட்டம் நடமாடிக்கிட்டிரு... அவளோட வாழ்க்கையையுமல்லோ கெடு... போடுச்சு?'' என்று ஆரம்பித்தவர் குலுங்கிக் குலு... அழ ஆரம்பித்தார்.

அவ்வளவு பெரிய மனிதர் தன் முன் இப்படி குலு... அழுவதைப் பார்த்தவுடனே அவனுக்கு என்... செய்வதென்றே தெரியவில்லை. கையாலாகாத... மௌனத்துடனும் சங்கடத்துடனும் பார்த்துக் கொ... டிருந்தான்.

''ரெண்டு தலைமுறைக்கு முன்னால நடந்த சண்... தம்பி அது! உங்க பாட்டன் பூட்டனும் எங்க பாட்... பூட்டனும் யாருன்னு நெனச்சே? சொந்த இரத்... தம்பி! நூற்றுக் கணக்குல ஆயிரக் கணக்கில எக்... ஏக்கரா நிலம் இருந்துருக்கு! உட்கார்ந்து பேசி ப... போட்டிருக்கலாம். இல்லே? பேசினாங்களாம்... தப்பான வார்த்தையை வச்சார்ன்னு தெரியலே! ஆ... ளுக்கு மீசையை முறுக்கிகிட்டு வெட்டு, குத்துன்... கிளம்பிட்டாங்க! என்ன ஆச்சு? அதனால, மூ... தலைமுறையா ஒட்டும் இல்லாம உறவும் இல்ல... நல்லது கெட்டதுக்கு சேராம முறுக்கிட்டுத் திரியறோ... என்றார்.

இனியன் ஆழ்ந்த வருத்தத்துடன் கேட்டுக் கொ... டிருந்தான். தன்னையும் அறியாமல் பாரதியார் பா... ஒன்றை வாய்விட்டுச் சொன்னான்.

'ஐந்துதலைப் பாம்பென்பான் அப்பன்

ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்



நெஞ்சு பிரிந்திடுவார் பின்பு

நெடுநா ளிருவரும் பகைத்திருப்பார்' என்று.

அவர் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு ''யாரு பாட்டு தம்பி?'' என்றார்.

''பாரதியார் பாட்டு'' என்றான் இனியன்.

''கரெக்டாத்தான் பாடியிருக்கார்!'' என்றார் கதிர்காமன்.. இனியன் புன்னகைத்தான்.

''எங்கப்பாவும் சரி, உங்க தாத்தாவும் சரி தங்கள் வாழ்நாள் முழுக்கச் சண்டை கட்டியே காலத்தை ஓட்டிட்டாங்க! போட்டி போட்டுட்டு சொத்துக்களை சேத்தாங்க. ஆனா.. நிம்மதியைத் தொலைச்சுட்டாங்க!'' என்றார்.

தான் குறுக்கிட்டுச் சொல்வதற்கு எதுவும் இல்லை என்ற உணர்வுடன் அவன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''மூணு தலைமுறைக்கு முன்னாலே சண்டை எப்படி ஆரம்பிச்சுதுங்கறே? சும்மா.. சாதாரண வரப்புச் சண்டை! இரண்டு அடி இடம் விடறதுலதான் விவகாரம் ஆரம்பிச்சிருக்கு. ஆஹா..! நீ எப்படி இப்படிச் செய்யலாம்? நீ எப்படிச் சொல்லலாம்னு பேச்சு வளர்ந்து ''உன்னைத் தெரியாதா?'' என்று பேசி கைகலப்பாய்.. சே..!'' என்றார்.

இனியன் மிக அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தான். எந்த நேரமும் அவர் மதுவை நாடக் கூடும் என்று காத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவர் அதற்கு முயற்சிக்கவில்லை.

இந்த எழவு சனியனையெல்லாம் தொட
லேன்னு எப்பவோ முடிவு பண்ணிட்டேன். அப்ப
நான் தொடர்ந்து குடிக்கறவன் இல்லே! எப்பவா
மனசு சங்கடம் ஆச்சுன்னா.. மட்டும்தான். அதுவும் இ
சாருலதாப் புள்ளே சத்தியம் வாங்கினதுல இ
தொடறதில்லே..! இப்பக் கூடப் பாரு.. மனசு என்ன
சொன்னாலும் தைரியம் வர மாட்டேங்குது..'' என்
புலம்பினார்.

அவன் மௌனம் காத்தான். மேலும் என்ன சொ
விழைகிறார் என்று தெரியவில்லையே என்று காத்
கொண்டிருந்தான். அவர் அதைப் புரிந்து கொ
டிருந்தவர் போலே மேலே தொடர்ந்தார்.

''உங்க மாமனும், நானும் அப்பன் மாருக்குத் தப்
இந்தக் கசப்புணர்ச்சியை வளர்த்துக்கிட்டே இருந்தோ
நல்ல வேளையாக நாங்க தனிப்பட்ட முறை
அடிதடியில இறங்கலே! ஏதோ ஊர்க்கூட்டத்து
எதிர்த்துகிட்டு நிக்கறதோட சரி! கொஞ்சம் படிப்பறி
பொது அறிவும் வந்துருச்சு இல்லே.. அதான்'' என்ற

..........!

''ஆனா.. இந்த அம்மையப்பன் எங்க ரெண்டு பே
முகத்திலயும் கரியைப் பூசிட்டான். உங்கம்மா வாழ்
கையைக் கெடுத்ததுமில்லாம என்னோட தங்க
வாழ்க்கையும் சேத்துக் கெடுத்தான்..'' என்றவர் மீண்டு
குலுங்கி அழுதார்.

இனியன் முகத்திலும் ஆழ்ந்த வருத்தம் தோன்றிய
''எப்படி முடிஞ்சுது? எங்களோட பகை எங்க கண்ண



மறைச்சிருந்தது. அவன் சந்துல சிந்து பாடிட்டுப் போயிட்டான்'' என்றார்.

அவன் கரகரத்த குரலில் சொன்னான். ''சார்! நாம வேற ஏதாவது பேசுவமா?'' என்று.

''இல்ல தம்பி..! பேச வேண்டிய விஷயமே இதுதான். இப்படி வேற எதை எதையோ பேசிகிட்டுப் பேச வேண்டிய.. விஷயத்தைப் பேசாததனால்தான் ரெண்டு குடும்பத்துலயும் ரெண்டு பொண்களோட வாழ்க்கையும் கெட்டுப் போச்சு! என் தங்கச்சியாவது ஏதோ கல்யாண வாழ்க்கைன்னு பேருக்காவது வாழ்ந்தாக! ஆனா.. உங்கம்மா..!''

அவன் பெருமூச்சு விட்டான். ''விடுங்க சார்! அவர் எங்களோட வாழ்ந்திருந்தா.. மட்டும் அம்மா நிம்மதியா இருந்திருப்பாங்களா என்ன? நித்திய கண்டம் பூரண ஆயுசுதான்! இப்போ அப்பான்னு ஒருத்தர் கூட இல்லைங்கற ஒரு குறைதான். மற்றபடி எங்க வாழ்க்கை நிம்மதியாத்தான் போச்சு..'' என்றான்.

''ஆமா..! பின்னே.. வேற எப்படிச் சொல்லிக்கறது? அப்படித்தான் சொல்லிக்கணும். என்னோட வருத்தம் என்னன்னா.. நம்ம பகையுணர்ச்சி.. ஒரு குணக்கேடனுக்கு வாய்ப்புக் குடுத்திருச்சு.. அது மட்டுமில்லே! வாழற குடும்பத்தைக் கெடுத்தோம்னு ஒரு குற்ற உணர்ச்சி.. என் மனசுல இருந்துகிட்டேயிருக்கு..! என்னை அரிச்சுகிட்டேயிருக்கு..! இப்ப நான் எதுக்கு.. உன்கிட்டே பேசணும்னு நினைச்சேன்னா மன்னிப்புக் கேட்கத்தான்!''

இப்படியொரு திருப்பத்தை எதிர்பார்க்காத இனிய... திணறிப் போனான்.

"ஐயோ.. சார்!" என்ன இது?" என்று திணற அவ... அவன் கையைப் பிடித்துக் கொண்டார்.

"சார்.. இல்லே! முறைக்கு.. நானும் உனக்... மாமன்தான்.. பெரிய மாமன்..! உங்கம்மாவே எனக்... தங்கச்சியாயிருந்திருந்தா.. எம் மனசு என்ன பாடு... டிருக்கும்? உன் கையைக் காலா நினைச்சுப் புடிச்... கேட்கறேன். என்னை மன்னிச்சுடுப்பா...!" என்று அவ... கைகள் இரண்டையும் தன் கைகளில் கோத்து... கொண்டு கதறினார்.

இனியனின் கண்களும் கலங்கின. உதடுகள் துடிக்க... அமர்ந்து கொண்டிருந்தான்.

"ஆமாப்பா..! உங்கம்மாகிட்டேயிருந்து எனக்கு மன்னிப்பு வாங்கிக் குடு! உங்க மாமன்கிட்டே நான் பழைய தலைமுறைக்காரன் இல்லேன்னு புரிய வை" என்றார்.

"சங்கடப்படாதீங்க மாமா! நான் பேசறேன்" என்றான்.

"மாமா" என்று அவன் அழைத்தவுடனே அவர் முகம் பிரகாசமாய் மாறுவதை ஆதங்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அப்படி வாக்குக் கொடுப்பதன் மூலமாக மிகப் பெரிய பொறுப்பைத் தன் தலையிலே கட்டிக் கொள்கிறோம் என்பது அப்போது அவனுக்குப் புரியவில்லை.

* * *



பிரபாவதி தவிப்புடன் காத்துக் கொண்டிருந்தார். ...லில் இருந்த கடிகாரம் பதினொன்றடித்து ஓய்ந்தது. எப்போதுமே தகவல் கொடுக்காமல் இருக்க மாட்...னே என்று கவிப்பாக இருந்தார்.

அம்மா தவிப்பார் என்பதனாலேயே எங்கே இருந்...தாலும் தகவல் கொடுத்து விடுவான் இனியன். ஆனால் இன்றைக்கு எதிர்பாராத விதமாக கதிர்காமருடன் போக நேர்ந்ததல்லாமல் அவருடன் பேசிய பேச்சுக்கள் வேறு அவனை சுய நினைவுக்கே கொண்டு வராமல் வைத்து விட்டன.

கடைசியாக அவர் சொன்ன வார்த்தைகள் அவன் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன.

"ஏம்ப்பா! இன்னைக்கு சாவோமா நாளைக்குச் சாவோமா.. தெரியலை. அதுக்குள்ளே மனிதன் என்னென்ன ஆட்டமெல்லாம் ஆடிடறான். நம்ம வாழ்க்கையே சூதாட்டம் மாதிரி இருக்கும் போது. நாம ஏம்ப்பா பகையும், வெறுப்பும் வளர்த்துக்கணும். போதும்ப்பா.. இந்தப் பகையுணர்வு, மூச்சு முட்டுதுப்பா.." என்று கிட்டத்தட்ட கதறலாகச் சொன்ன வார்த்தைகள் நெகிழச் செய்தன.

அவனும் கல்லூரி வேலைக்குச் சென்றதற்குப் பிறகு வெளியுலகம் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறான்.

வாழ்வதற்காகக் கொடுக்கப்பட்ட வாழ்க்கை. மரணம் எந்த நேரமும் நேரலாம் என்றிருக்கும்போதே மனிதன் இப்படி அடித்துக் கொண்டு சாகிறானே. இன்னும் வாழ்க்கையில் சாகாவரம் என்றிருந்தால் என்ன ஆட்டம்

ஆடுவான் என்று அவ்வப்போது அவனும் நினை...
கொண்டதுண்டு.

யாரோ சொன்னார்களே "உலகத்தையே நேசி... ரொம்ப ஈஸி. ஏன்னா, அதுக்குப் பெருசா வி... கொடுக்க வேண்டியது எதுவுமில்லே. ஆனா பக்... வீட்டுக்காரனை நேசிக்கறதுதான் ரொம்பக் கஷ்... என்று." அது போலத்தான் இரத்த பந்தங்கள் கூட இ... அகங்கார உணர்வினால் எப்படி எப்படியெல்லா... பகையைப் பெருக்கிக் கொள்கிறார்கள் என்று அவ... யோசிப்பதுண்டு.

"மாமா.. ப்ளீஸ்! இந்தத் தெருமுனையிலேயே இறக்... விடுங்க" என்று இறங்கிக் கொண்டான். இறங்கியவ... புன்னகையுடன் "மாமா! நாம தனியா சந்திக்க நேர... போது தான் மாமான்னு கூப்பிடுவேன். மத்தவங்... முன்னால "சார்" தான் என்றான்.

கதிர்காமன் புன்னகைத்தார். "எப்படின்னாலு... சரிப்பா! மாமன்தான்னு ஏத்துகிட்டா சரி.." என்றார்.

விசிலடித்தபடி நடந்து வந்து கேட்டைத் திறக்... மகனைக் கொஞ்சம் ஆச்சரியமாகவே பார்த்தபடி சி... அவுட்டில் அமர்ந்திருந்தார் பிரபாவதி.

"அம்மா..! நீ தூங்கலையா?" என்றபடி உள்ளே நுழைந்தான் மகன்.

"என்னப்பா... உங்ககிட்டேயிருந்து ஒரு தகவலு... வராம நான் எப்படிப்பா தூங்குவேன்?" என்றா... பிரபாவதி.

'அப்போதுதான் அது அவனுக்கு உறைத்தது.' அம்மா... வுக்கு நாம் சரியாகத் தகவல் கொடுக்கவில்லை என்று...



"சரிம்மா..! ஃபங்ஷன் முடிஞ்ச வேறொரு இடத்...க்குப் போக வேண்டியதாப் போச்சு" என்றான்.

"நீ சாப்பிட்டியா?" என்றான்.

"சாப்பிட்டுட்டேன்ம்ப்பா.." நீதான் ஃபங்ஷன்லயே சாப்பிடுவன்னு சொன்னியே அதனால சாப்பிட்டேன்" என்றார்.

"தட்ஸ் குட்மா? அதுக்கெதுக்கு எக்ஸ்பிளனேஷன் குடுக்கற?" என்றான்.

அம்மா சிரித்தார். "சரி.. போய்த் தூங்கு.." என்று எழுந்தார்.

மகன் இரண்டு கைகளையும் மேலே தூக்கி சோம்பல் முறித்துவிட்டு "அம்மா.. கொஞ்சம் பேசலாம்மா..?" என்றான்.

அம்மா முகம் மலர "பேசலாமே?" என்றார். அமர்ந்தார் அப்போதுதான் நினைவு வந்தவரைப் போல "அது சரி.. உன் பைக் எங்கே?" என்றார்.

"அதை ஏம்மா.. கேக்கற?" சேகர் இல்லே..! அவரு என் பைக்கை வாங்கிட்டாரு எங்க காலேஜ் பிரின்சிபல் வேற வந்திருந்தாரு..! அவரு என்ன செய்தாருன்னா.. வேற கார்ல போப்பானு அவரே ஏற்பாடு பண்ணினாரு..! யாரு காருங்கறே! கதிர்காமன் இல்லே.. அவரோட காரு!" என்றான்.

"அப்புறம் என்னம்மா.. பண்றது! அவரோட கார்ல தான் வந்தேன். பிரின்சிபாலுக்கு நம்ம வீட்டு விவகாரம் தெரியாது இல்லே..! அதனால இப்படிப் பண்ணிட்டாரு.

சொல்லவும் முடியலே. மெல்லவும் முடியலே..'' என்றான்.

அம்மாவின் முகம் வாடுவதைப் பார்த்தான். ஆனால் பேச்சை நிறுத்தவில்லை. சொல்லத்தான் வேண்டும். யாரோ சொல்லித் தெரிவதைவிடத் தானே சொல்லித் தெரிவது நல்லது.

''அம்மா.. எதுக்கு அப்செட்டாகறீங்க! நான் ஒண்ணும் சின்னப் பையனில்லை. எப்படி நடந்துக்கணும்னு எனக்குத் தெரியும்'' என்றான்.

அம்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். அவருக்கும் அந்த உண்மைகள் தெரிந்துதான் இருந்தது. ஆனால் சமீப காலமாக அந்தக் குடும்பத்தினர் யாராவது ஒருவருடன் தொடர்பு ஏற்படுவது ஏனோ அவருக்கு சரியாகத் தோன்றவில்லை.

இனியன் செயற்கையான உற்சாகத்துடன் தொடர்ந்தான்.

''அம்மா..! அவரோட ஒரே வேடிக்கைம்மா..! நேரா ஊருக்குக் கூட்டிட்டு வராம கெஸ்ட் ஹவுஸ் கூட்டிட்டுப் போனாரு..'' என்றான்.

''நான் ஒண்ணும் சின்னப் பையனில்லை'' என்ற வார்த்தைகளை அவன் முதலிலேயே போட்டு வைத்ததனாலோ என்னவோ அவரும் எதையும் சொல்வதைத் தவிர்த்தார். அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இனியன் அவர் தன்னிடம் பேசியதையெல்லாம் சொன்னான். பிரபாவதி அமைதியாகக் கேட்டுக் கொண்டார்.



அவரது அழுத்தம் அவன் பேச்சைத் தடை செய்கிற மாதிரித்தான் இருந்தது. ஆனாலும் அவன் விடாமல் தான் சொல்ல வேண்டியதைச் சொன்னான்.

கடைசியாகப் பெருமூச்சு விட்டபடி எழுந்த அம்மா.. ''சரிப்பா.. தூங்கு'' என்றார்.

அம்மா போவதை அவன் கொஞ்சம் வருத்தத்துடன் பார்த்தான். அப்படி உடனடியாக ஏற்றுக் கொள்ள மாட்டார் என்று தெரியும். அடி மேல் தான் அடி வைக்க வேண்டும்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள்தான் பேசியிருப்பான். அறைக்குப் போனான். அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள்ளாக அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. திறந்தான்.

''என்னம்மா?'' என்றான்.

அம்மா சரசரவென்று அவன் அறைக்குள் நுழைந்து அவன் படுக்கையின் ஓரத்தில் அமர்ந்தார்.

''என்னம்மா?'' என்றான் மறுபடியும்.

''தம்பி எனக்கு பயமாயிருக்கு'' என்றார் பிரபாவதி குரல் தழுதழுக்க.

''என்ன பயம்?'' என்றான் புரியாமல்.

''தம்பி எனக்குன்னு இருக்கறது நீதான். உன்னையும் உன்னையும் இழுத்துருவாங்களோன்னு..'' என்று. அவர் கலங்க அவன் சட்டென்று அம்மாவைத் தன்னோடு சேர்த்துக் கொண்டான்.

''சேச்சே..! என்னம்மா.. நீ? உன்னையும் என்னையும் பிரிக்க எந்தக் கொம்பனாலயும் முடியாது..!'' என்று தாயின் கண்களைத் துடைத்து விட்டான்.

எல்லையில்லாத நிம்மதி அந்தத் தாயின் முகத்தி தெரிவதை வாஞ்சையுடன் பார்த்தான். சற்று நே வேடிக்கை பேசி அம்மாவை சிரிக்கச் செய்தான்.

அம்மாவின் அறைக்குப் போய் சற்று நேரம் அம் வின் அருகில் அமர்ந்து அவரை உறங்கச் செய்துவிட் தான் நகர்ந்தான். தன் வலக்கையை தாய் தனது இட கையோடு கோர்த்துக் கொண்டு உறங்க, அவர் நன் உறங்கிய பின்தான் பிரித்து எடுத்துக்கொண்டு வந்தா

இப்படிக் கோணத்தில் அம்மா யோசிக்க நேரு என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

அந்த நேரம் டெலிபோன் மணி அடித்தது. அம்மா விழித்துக் கொள்ளக் கூடாதே என்று வேகமாகப் போய் எடுத்தான்.

“என்னடா..! யாரோட கார்லயோ வந்து ஊருக்குள்ளயே வந்து இறங்கினியாம்'' என்று கர்ஜித்தது ஆளவந்தாரின் குரல்!

இனியன் சற்று நேரம் திகைத்து நின்று விட்டான்.

## 10



இப்போது என்ன அவசியம் வந்தது? சாருலதாவிற்குத் தன் மனத்தையே புரிந்து கொள்ள முடியவில்லை.

அதே கல்லூரிக்குப் போய் அந்தத் தோழியைச் சந்திக்க வேண்டுமா என்ன? உண்மையில் அந்தத்



தோழியைச் சந்திக்கவா போய்க் கொண்டிருக்கிறோம்? காரணம் வேறு ஏதோ போல இருந்தது. அதை ஏற்றுக் கொள்ளவும் வெளிப்படையாக ஒத்துக் கொள்ளவும் மனம் மறுத்தது. ஆனாலும் கார் என்னவோ அந்தக் கல்லூரியை நோக்கித்தான் போனது.

என்ன காரணத்தை வைத்துக் கொண்டு போவது? காரணமா கிடைக்காமல் போய் விடும்? கிடைத்தது யாரோ ஒரு தோழி பி.எச்டி. செய்து கொண்டிருந்தாளாம் அதற்காக அவள் வினாத்தாட்கள் அனுப்பியிருந்தாளாம். அதைக் கொண்டு போய் அந்தத் தோழியிடம் கொடுத்து ஒரு ஐம்பது பேரிடம் கொடுத்து விவரங்கள் சேகரித்துக் கொடு என்று சொல்ல வேண்டுமாம்.

உண்மையில் போன மாதம் அந்தப் பெண் கேட்ட போது அப்படியெல்லாம் கிராமத்தில் படித்த பெண் களைப் பிடிப்பது கஷ்டம் என்று அந்த வேலையையே தவிர்ப்பது போல் பதில் சொல்லியிருந்தாள். இப்போது அவளே போன் செய்து நீ அனுப்பி.. வை! பாவம் நீ கேட்டு நான் முடியாது என்பதுபோல் சொல்லி விட் டேனே என்று வருத்தமாகப் போய் விட்டது. முடிஞ்ச வரை ட்ரை பண்றேன்'' என்று சொல்லியிருந்தாள்.

தன் செய்கை குறித்து வெட்கமாகவும் இருந்தது. ஆனால் காரியங்கள் பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தது.

இத்தனை குழப்பமும் எதனாலென்றால் அந்தக் கல்லூரி இனியன் வேலை செய்யும் கல்லூரி. இனிய னோடு தொடர்ந்து நட்பு கொள்வதோ தொடர்பு வைத்துக் கொள்வதோ சாத்தியமே இல்லை என்று அறிவு சொன்னது.

தங்கள் இருவர் குடும்பத்துக்கும் நடுவே எ...
சிக்கல்கள் இருக்கின்றன என்றும் அந்த அறிவு க...
காட்டியது. ஆனால் பாழும் மனம். இது எதை...
புரிந்து கொள்கிற நிலையில் இல்லை. அதிலும் நே...
அரசல் புரசலாக வேலையாட்களிடம் இருந்து ...
மாமா அவனைக் காரில் அழைத்துச் சென்று ...
செய்தார் என்று கேள்விப்பட்டதில் இருந்து ம...
இறக்கை கட்டிக் கொண்டு பறந்து கொண்டிருந்தது.

மாமாவின் அந்தச் செயல் வெறும் மரியா...
நிமித்தமான செயலாகக் கூட இருக்கலாம். அன்றை...
ஆளவந்தான் அய்யா கூட நின்று இரண்டு வார்த்...
பேசி விட்டுப் போகவில்லையா? உடனே இர...
குடும்பத்துக்கும் நட்பு வந்து விட்டதாக எண்ணி...
விடுவதா? அதிலும் அன்றைக்கு இன்னொரு இ...
பெண் கூட அவர்களோடு வந்திருந்தாள். அவள் என்...
உறவோ முறையோ..?"

இந்த மாதிரி வாதப் பிரதிவாதங்கள் மனதுக்கு...
போய்க் கொண்டிருந்தாலும் சாருலதாவின் கா...
இனியனின் கல்லூரிக்குப் போய் சேர்ந்தே விட்டது.
அங்கே தன் கல்லூரித் தோழி பிரேமா எம்.ஃபில் செய்து
கொண்டிருந்தாள். அவளிடம் தான் உதவி கேட்டிருந்
தாள் அவள்தான்.

"இன்றைக்கு ஆஃப்டர்நூன் ஃப்ரீயாக இருப்பேன்"
என்றாள்.

"அதற்காகத்தான் போய்க் கொண்டிருந்தாள்.
உள்ளூர ஒரு நப்பாசை!



எங்காவது இனியன் கண்ணில் படக்கூடும். அவரிடம் இரண்டு வார்த்தை பேச முடியுமா என்று ஒரு எண்ணம்.

தோழி பிரேமா வரும் வரை ஒரு.. மரத்தடியில் காத்துக் கொண்டிருந்தாள். முதல்வரிடம் ஏற்கனவே போனில் அனுமதி கேட்டிருந்தாள். இப்போதும் நேரடியாகப் போய்ப் பேசி அனுமதி வாங்கிக் கொண்டாள். கதிர்காமர் வீட்டுப் பெண் என்றவுடனே அனுமதி கிடைத்தது.

பெரிய திடல்! அதன் ஓரங்கள் முழுவதிலும் வேப்ப மரங்கள் நிறைய இருந்தன. பெரிய பெரிய மேஃபிளவர் மரங்களும் இருந்தன. அப்படிப்பட்ட மரம் ஒன்றின் கீழே நின்றிருந்தாள். பிரேமா உற்சாகமாக வந்தாள்.

"ஹாய் பிரேமா..!" என்று இவளும் உற்சாகமாக வரவேற்றாள்.

"என்னடி.. சோஷியல் சர்வீஸா?" என்றாள் பிரேமா.

"ஆமா.. பாவம்! ஸ்டெல்லா ரொம்ப தூரம் ரிக்வெஸ்ட் பண்ணிக் கேட்டா அதான் பாரேன். ஐம்பது ஃபார்ம் அனுப்புடின்னு சொல்லியிருந்தேன். ஆனா.. நூறு ஃபார்ம் அனுப்பியிருக்கா.." என்று புன்னகைத்தாள்.

"யார்கிட்டே டேட்டா வாங்கணும்?" என்றாள் பிரேமா.

"ஐம்பது பேர் ஹவுஸ் வைஃப்ஸ்கிட்டே.. ஐம்பது பேர் வேலை பாக்கறவங்களாம்?" என்றாள் சாருலதா.

"சரி.. குடு..! ஹவுஸ் வைஃப்ஸை பிடிக்கறதுதான் கஷ்டம்" என்றாள்.

"முடிஞ்சவரை.. பாரு! மீதியை நான் பாக்கறேன்.." என்றாள் சாருலதா.

"ஏண்டி.. நீயும் மேல படிச்சிருக்கலாம்" என... தோழி.

"போதும் பி.ஜி. முடிச்சேன் இல்ல.. அதுவே ... அண்ணாவுக்கும், மாமாவுக்கும் நிர்வாகத்துல ... செஞ்சா.. அதுவே போதும். நான் எங்கே வெளி... வேலைக்குப் போகப் போறேன்" என்றாள்.

"அதானே! அத்தை சொத்து வேற வரும்..." என்... பிரேமா.

"இத பார்றி! அத்தையோட சொத்தை நான் பெ... விஷயமா நினைக்கலே. அத்தையைத்தான் நான் பெ... சொத்தா மதிக்கிறேன். இப்ப இந்த நிமிஷம் அத்... அந்த சொத்தை முழுவதையும் ஏதாவது சே... நிறுவனத்துக்கு எழுதிக் குடுத்தா கூட நான் வருத்தப்... மாட்டேன். அவங்க மனசு நிறைவா இருந்தா போது..." என்றாள்.

தோழியிடம் பேசிக் கொண்டிருந்த அந்த இடை வெளியில் தன் முதுகுக்குப் பின்னால் தன் வார்த்தை களைக் கேட்கும் தொலைவில் இனியன் வந்து கொண் டிருந்ததை அவள் பார்க்கவில்லை. அவனும் முதலி... அவளைக் கவனிக்கவில்லை. பிரேமாவிடம் தான் ஏதோ கேட்க வேண்டும் என்று நினைத்தான் போலும்.

"மிஸ்.. பிரேமா.." என்று ஆரம்பித்தவன் சாருலதா திரும்பி முகம் காட்டவும் ஒரு நிமிடம் திகைத்துப் போனான். ஆனால் அடுத்த நிமிடம் அவளைத் தெரிந்து கொள்ளாதவன் போல.

"பிரேமா..! சேகர் உங்களைத் தேடிக்கிட்டிருந்தாரு.." என்று சொல்ல அவள் புன்னகையுடன் "போய்ப்



பார்க்கிறேன் சார்.." என்றாள். "சார் சாருலதா.." என்றாள் உற்சாகமாக.

அப்போதுதான் கவனித்தவன் போல "ஓ..! சாருலதா மேடம்..! எப்ப வந்தீங்க..!" என்றான்.

"இப்பத்தான்.. சார்! என் பிரண்ட் ஒருத்தர் தீஸிஸ் பண்றாங்க! அதுக்காக கொஞ்சம் ஹெல்ப்" என்றாள்.

அவன் அதை மனதில் வாங்காதவன் போல. "ஓ.கே. மேடம்! எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கு.." என்று வேகமாக நகர்ந்தான்.

சாருலதாவின் முகம் வாடிப் போவதைக் கூர்ந்து கவனித்தாள் பிரேமா. அவள் முகத்தில் "ஓஹோ.. இப்படிப் போகிறதா.. கதை!" என்ற எண்ணம் தோன்றியது.

இரண்டு பேர் குடும்பங்களுக்குள்ளேயும் இருக்கிற பிரச்சினைகளைப் பற்றி ஓரளவு பிரேமா அறிவாள். பட்டப் படிப்பின் போதும், மேற் பட்டப் படிப்பின் போதும் இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். யாரிட மாவது கொஞ்சமாவது சாருலதா மனம் திறப்பாள் என்றாள் அது பிரேமாவிடம்தான்.

"என்னடி.. இது! மனுஷன் போன முறை என்னமோ ரொம்ப உற்சாகமாகப் பேசினாரு! இந்தத் தடவை இப்படி வெட்டிக்கிட்டுப் போறாரு.." என்றாள் முணு முணுப்பாக.

"தெரியலை!" என்று உதட்டைப் பிதுக்கினாள் சாருலதா.

"ஏய்..! வா.. நான் உன்கிட்டே பேசணும்!" என்றாள் பிரேமா.

"இல்லை..! உன்னை சேகர் சார் கூப்பிட்டாரு..."
என்று சாருலதா சொல்ல.

"இரு.. இப்ப.. ஒரு வேலை செய்யறேன்" என்று...
செல்போனை எடுத்து,

"சார்! அவசரமா.. வரணுமா சார்? ஒரு பிரண்ட்...
வந்திருக்காங்க.. சார்! ஆஃப்டர்நூன் ஃப்ரீங்கறதா...
சொன்னேன். ஒரு மணி நேரம் டைம் குடுங்க.. ...
வந்தர்றேன்.." என்றாள்.

அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ தெ...
வில்லை. "சரிங்க.. சார்! ஓகே.. சார்.." என்றாள்...
வாக.

"இல்ல.. நான் கிளம்பறேன்" என்று சாருலதா...
பட முயற்சிக்க..

"அதெல்லாம்.. முடியாது.. நீ வா..! நான் உன்கிட்...
பேசணும்" என்றாள் பிரேமா.

சாருலதா வேறு வழியில்லாமல் அவளுடன் செ...
றாள். கல்லூரியிலேயே இருந்த தோட்டத்தில் சிமெ...
பெஞ்சுகள் மாதிரிப் போட்டு வைத்திருந்தார்கள். அ...
ஒன்றில் போய் அமர்ந்தார்கள்.

"ஏய்..! சாருலதா.. உண்மையிலேயே சொல்...
உனக்கு இனியன் சார் மேல் இன்ட்ரஸ்ட் இருக்...
தானே?"

சாருலதா இந்த நேரடியான கேள்வியை எதிர்பார்க்...
வில்லை. ஒரு கணம் திகைத்துப் போனாள். மறுகண...
ஒரு பெருமூச்சு விட்டாள்.

"தெரியலை..! எனக்கே தெரியலை..!" என்றாள்.



"ஏய்.. சாரு..! உங்க ரெண்டு பேர் ஃபேமிலி ரிலேஷன்ஷிப் பத்தித் தெரியுமில்ல. இதுல இது வேற புது சிக்கலா.. நடக்கற காரியமாத் தெரியல?" என்றாள்.

"தெரியலே! எனக்கே தெரியலை.." என்றாள். பிரேமா மறுபடியும் மறுகணம் விக்கி விக்கி அழுதாள். பிரேமா திடுக்கிட்டுப் போனாள்.

"ஏய்.. சாரு..! ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ஃப். யாராவது பாக்கப் போறாங்க..!" என்றாள். அவசரமாக பேசிக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தாள். நல்ல வேளையாக சுற்று வட்டாரத்தில் யாரும் இருக்கவில்லை.

சாருலதாவும் சட்டென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். "ஐ ம் சாரி!" என்றாள். மெல்லத் தேறிக் கொண்டாள்.

"எனக்கும் தெரியுது ஆனா.. அவரும். அவரும்.. ஏதோ இன்ட்ரஸ்ட் காட்டற மாதிரித் தெரியுது.." என்றவள் உடனே "இல்லையே" இப்ப இந்த நிமிஷம் முகத்தைத் திருப்பிக்கிட்டுப் போனாரே..." என்றாள்.

பிரேமா பெருமூச்சு விட்டாள். "ஆமா..! போன தடவை உன்கிட்டே நல்லாப் பேசினா மாதிரி இருந்து. இப்ப என்னவோ.. முகத்தை திருப்பிக்கிட்டுப் போன மாதிரித்தான் இருந்துச்சு.." என்றாள்.

சாருலதா ஒன்றும் பேசவில்லை. பிரேமா சிந்தனையுடன் "ஒருவேளை.. அவருக்குள்ளயும் இதே மாதிரிப் போராட்டமா.. என்னவோ.." என்றாள்.

சாருலதா பெருமூச்செறிந்தாள். "பிரேமா.. நான் இன்னொரு விதமா யோசிச்சேன். ஒரு வேளை இது

நடந்தா ரெண்டு குடும்பங்களும் இணையறதுக்... சான்ஸ் இருக்குமேன்னு...''

''ஆமா.. அப்படியும் நடக்கலாம். இதையே பெ... பிரச்சினையா எடுத்துக்கிட்டு இன்னும் பிரச்சி... வளர்த்துக்கவும் செய்யலாம்'' என்றாள் பிரேமா.

சாருலதா திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள்.

''ஆமா..! அப்படியும் நடக்கலாம்கறதுக்காக... சொன்னேன்! நல்லா யோசிச்சுக்க..! பிரச்சினை... வளர்த்துக்கிட்டுப் போறதை விட இந்த ஸ்டேஜ்... மனசை மாத்திக்கறதுதான் நல்லது'' என்றாள் பிரே...

சாருவின் முகம் வாடியது. ''ஆமா..! எத்தனை... பேருக்கு வாழ்க்கையில் ஏமாற்றங்கள் ஏற்பட... லையா அது மாதிரித்தான் இதையும் நினைச்சுக்கணு... என்றாள்.

''சரி சாரு! புறப்படு! மனசைத் தேத்திக்கோ... என்றாள். ஆனால் பிரேமாவும் ஒரு விஷயத்தை... கவனிக்கவில்லை.

இனியன் ஒரு தூணுக்குப் பின்னால் நின்று இவ... யெல்லாம் கேட்டு விட்டான் என்பதுதான் அது.

இனியன் சாருலதாவிடம் முகம் கொடுத்துப் பேசாம... போய் விட்டாலும் உள்ளுக்குள்ளே கொஞ்சம் வருத்... தப்பட்டு விட்டான். பாவம்.. அந்தப் பெண்! நமக்கு... தான் சகுனம். அவள் மனதிலும் அதே போல இருக்க... வேண்டும் என்று என்ன இருக்கிறது என்றுதான் மறு... படியும் பேசலாம் என்று வந்தான்.

இரண்டு பெண்களும் தோட்டத்தை நோக்கிப் போகி... றார்கள் என்றவுடன் பின் தொடரலாமே என்றுதான்



வந்தான். ஆனால் தன் பெயர் அடிபடவும் அங்கேயிருந்த தூண் ஒன்றிற்குப் பின்புறமாக மறைந்து நின்றான். அவன் நின்ற இடம் அவர்களுக்குப் பின்புறமாகவும் இருந்ததால் அவர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் எழுந்ததைப் பார்த்தவுடன் அவன் வேறொரு பெஞ்சில் முதுகைக் காட்டிக் கொண்டு அமர்ந்தான்.

மனம் வாடிவிட்டது!

அவனுக்குள்ளும் இரண்டு மூன்று நாட்களாகப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே இளம் வயதில் ஈர்ப்பு ஏற்படுவது சகஜம்தான். ஆனால் அது வெறும் ஈர்ப்புத்தானா அல்லது அதற்கும் மேலேயா என்று தெளிவான முடிவுகள் எடுத்தால்தான் வாழ்க்கை பிரச்சினை இல்லாமல் இருக்கும் என்று அவனுக்கும் புரிந்திருந்தது. ஆனால் நமது கலாசாரத்தில் வேறு சில விஷயங்களையும் அலசி ஆராய வேண்டிய அவசியம் வந்து விடுகிறதே!

அம்மையப்பன் என்கிற தன் பிறப்புக்குக காரணமான பிரகிருதி இரண்டு குடும்பங்களும் சேரவே முடியாத அளவுக்கு சிக்கல்களை விளைவித்து விட்ட நிலையில் இரண்டு குடும்பங்களுக்கும் நட்பு என்பதே சாத்திய மில்லை என்கிற போது உறவு எப்படி சாத்தியமாகக் கூடும்? எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விட்டு இரண்டு பக்கமும் வருத்தம் ஏற்படுவதைக் காட்டிலும் விஷயங்களை இந்த அளவில் விட்டு விடுவதே மேல் என்று தோன்றியது. அதனால்தான் சாருலதாவைப் பார்த்தவுடன் மனமெல்லாம் துள்ளியபோது கூட அவன்

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அந்த இட...
விட்டு விலகிப் போய் விட்டான். ஆனால் சற்று மு...
சாருலதா தன் தோழியிடம் தன் மேல் ஈர்ப்பு இரு...
கறதாற் போலச் சொன்னதைக் கேட்டவுடன் அவ...
மனத்தில் அதிர்ச்சியும், மகிழ்ச்சியும் ஒரு சேரக் கி...
பியது.

மகிழ்ச்சி எதனால் என்றால் தன் மனம் செ...
இடத்தில் இருந்து தனக்கு சரியான பிரதிபலி...
கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சி. இன்னொரு பக்...
யாரால் அவள் வளர்க்கப்படுகிறாள் அவருக்கு...
தன்னைப் பெற்ற தாய்க்கும் இடையே இருக்கி...
சிக்கலான உறவு நிலைமை இரண்டு பெண்களுமே...
ஒன்றும் பெரிய மகிழ்ச்சிகரமான வாழ்வை வாழ்ந்...
விடவில்லை என்றாலும் இரண்டு பேரும் நேருக்கு நே...
நின்று பேசித்தான் இந்தத் திருமணத்தை நடத்திய...
வேண்டும். அது சுத்தமாக நடக்கக் கூடிய சாத்தி...
மாகவே தெரியவில்லை.

இனியன் அந்தக் கட்டத்தில் ஒரு முடிவெடுத்து...
கொண்டான். 'வேண்டாம்! தாயை வேதனைப்படுத்...
தித்தான் தன் வாழ்க்கை அமைய வேண்டுமென்றால்...
அந்த வாழ்க்கை தனக்குத் தேவையேயில்லை!
சாருலதாவுக்கும் தனக்கும் அந்த வேதனை கொஞ்ச...
நாளைக்கு இருக்கும். பிறகு விருப்பம் இருந்தாலும்
இல்லாவிட்டாலும் அவரவருக்கு வேறு வாழ்க்கை
அமைந்து விடும். காலப் போக்கில் இதையெல்லாம்
மறந்து விடுவோம்' என்று தனக்குத் தானே தேற்றிக்
கொண்டான்.



அப்படியே அமர்ந்து விட்டான். அரை மணி நேரம் போயிருக்கும்.

திடமாக எழுந்தான்! இத்தனை நாள் தன் தாய் தன் வாழ்க்கை பற்றிய வேதனைகளை எப்படி மகனின் வாழ்க்கைக்காக மறைத்து வாழ்ந்தாரோ அதே போல தானும் இந்த விஷயம் பற்றிய வருத்தத்தையே தன் இதயத்தில் இருந்து கழற்றி வைத்து விட வேண்டியதுதான்.

சாருலதா என்ற பெண்ணின் மேல் தனக்கு நாட்டம் ஏற்பட்டது என்பதையே மறைத்துவிட வேண்டியதுதான்.

நாட்டில் எத்தனை திருமணப் பேச்சு வார்த்தைகள் கிட்டத்தட்ட முடிவாகிற நிலையில்கூட நின்று போயிருக்கின்றன. அப்படி எண்ணிக் கொள்ள வேண்டியதுதான். ஏன்.. அம்மாவே கணவர் சரியில்லையென்ற உடனே பிரிந்திருக்கவில்லையா? அந்தத் தாயின் வைராக்கிய மனம் தனக்கு இருக்காதா என்ன? தெளிவான முடிவுடன் நடந்தான்!

# 11



கண்ணயர்ந்து அமர்ந்திருந்தார் மனோரஞ்சிதம்.

கோபமாக வந்தாள் சாருலதா.

"அத்தை! அதான் நர்ஸ்ங்க ரெண்டு பேரைப் போட்டிருக்கே! அப்புறமும் நீ எதுக்குத் தூக்கம் கெடறே?" என்றாள் கோபமாக.

மனோரஞ்சிதம் உச்சுக் கொட்டினார்.

"இருக்கட்டும்.. பரவால்லே!" என்றார்.

"என்ன.. இருக்கட்டும் பரவால்லே!" என்ற
திரும்பிப் பார்த்தாள். அம்மையப்பன் அயர்ந்து உறங்
கொண்டிருந்தார். மேலும் தொடர்ந்தாள்.

"என்ன.. இருக்கட்டும் பரவால்லே! உன்னோ
ஹஸ்பென்ட்ங்கற பேர்ல இந்த ஆள் இத்தனை நா
குடுத்த டார்ச்சர் போதாதா? இப்ப.. உடம்பு சரியி
லேன்னு வேறு படுத்துகிட்டாரு..! பாரு.. அத்தே! ஒ
கலாம். அதுக்காக நீ உன் உடம்பைக் கெடுத்துக்கா
என்றாள் கோபமாக.

களைப்பாக இருந்த அத்தையின் முகத்தை
பார்த்தவுடன் அவள் மனம் இளகியது.

"அத்தை... நீ முதல்ல சாப்பிடு" என்றாள்.

கொண்டு வந்திருந்த டிபன் காரியரைத் திறந்தா
மனோரஞ்சிதம் போய் முகம் கழுவிக் கொண்டு வந்து
சாப்பிட அமர்ந்தார். சாதாரணமாக வீட்டில் என்றால்
குளிக்காமல் சாப்பிட மாட்டார் ஆனால் இப்போது
பசித்தது.

இட்லிகளை எடுத்து வைத்த மருமகளின் முகத்தை
நேரடியாகப் பார்க்காமல் மௌனமாகச் சாப்பிட்டு
முடித்தார்.

முதல் நாள் அம்மையப்பனுக்கு காய்ச்சல் கண்டது.
டெம்பரேச்சர் அதிகமாகப் போனவுடன் ஆஸ்பத்திரி
யிலே அட்மிட் செய்வதுதான் நல்லது என்று தோன்றத்
தங்கள் குடும்ப டாக்டரிடம் ஆலோசனை செய்து விட்டு
ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்தார்.





சமீப காலமாக சாருலதாவுக்கு அம்மையப்பன் மேல் கடும் கோபம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. தன் வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய ஒரு பொக்கிஷம் கை நழுவிப் போகிறது என்றால் அதற்குக் காரணம் இவ ராகத்தான் இருக்க முடியும் என்ற ஆற்றாமை அவளுக் குள் நிறைந்திருந்தது.

மனோரஞ்சிதமும் சமீப காலத்தில் மருமகளுக்கு ஏற்படுகிற அதீத கோபத்தைக் கவனித்துக் கொண்டு தான் இருந்தார். ஏனென்று அவருக்குப் புரியவில்லை. எப்போதுமே அவளுக்கு அம்மையப்பனைப் பிடிக்காது. விலகியே இருப்பாள். அத்தையின் வாழ்க்கையைக் கெடுத்தவர் என்று அவள் எண்ணம். ஆனால் மனோ ரஞ்சிதத்துக்கு "என்ன பெரிய வாழ்க்கை நமக்குக் காத்துக் கொண்டிருந்தது. அதை வந்து இவர் கெடுத்துவிட்டார்" என்ற விரக்தி.

ஏதோ வாழ்க்கைப் பட்டாகிவிட்டது நம் கடமையை நாம் செய்யத்தான் வேண்டும் என்று தேற்றிக் கொண்டார். நேற்று வீட்டுக்குப் போயிருக்கலாம்தான். ஆனால் அனத்திக் கொண்டிருந்த அம்மையப்பன் மேல் ஏற்பட்ட இரக்கம் அவரைப் போகவிடவில்லை. இரவு தங்கி விட்டார்.

இரண்டு மூன்று முறை டாக்டர்களும் நர்ஸும் வந்து பார்த்து விட்டுப் போனதில் அவரும் தூங்கவில்லை. இப்போதுதான் கொஞ்சம் அயர்ந்து தூங்குகிறார்.

சாருலதா அத்தை சாப்பிட்டு முடிக்கும் வரை ஒன்றும் பேசவில்லை.

"அத்தை உனக்கு என்ன தலையெழுத்தா? பேசா... இந்த ஆளை அவங்க வீட்டுக்கு அனுப்பு" என்... சாருலதா.

மனோரஞ்சிதம் மேலும் பேசவில்லை.

"என்ன அத்தை நான் பேசிக்கிட்டே இருக்கே... என்றாள் சாருலதா.

"இந்த பாரு.. சாரு! இவரு மேல எனக்கொன்... பெரிய பாசம் இல்லை! என் நிலைமை தெரிஞ்சு திட்ட... போட்டு ஏமாத்தினவர் மேலே எனக்கு என்ன பெரி... பாசம் இருக்க முடியும்? எப்படியும் என்னை எக்... பிளாய்ட் பண்ணினவர்தானே..! ஆனா ஒரு மனுஷ... கஷ்டப்படும்போது சக மனுஷியா நம்மனா... முடிஞ்சதை நாம செய்யணுமில்லே... அதான்" என்... சற்றே குரலை உயர்த்தி.

"ஆமா..! எதையாவது பேசி.. என் வாயை அடை... சுடு.." என்றாள் சாருலதா முனகலாக.. ஆனா... மேற்கொண்டு பேசவில்லை.

அம்மையப்பன் அப்போது உறக்கத்தில் இருக்கிற... என்றுதான் இருவரும் நினைத்தார்கள். ஆனால் அம்மை... யப்பன் அப்போது விழித்துக் கொண்டுதான் இருந்தா...

சில நாட்களாகவே அம்மையப்பன் சுய ஆராய்ச்சியி... இருந்தார். அதிலும் தான் செயினைத் திருடியபோது... கம்ப்ளெயின்ட் கொடுக்க மகனும் வந்தான் என்... கேள்விப்பட்டதில் இருந்து ஒரு விதமான ஏக்க... மனதிலே இருந்து கொண்டே இருந்தது.

என்னதான் பண்பில் குறைவானவராக இருந்தாலு... அவருக்கும் ஒன்றிரண்டு நண்பர்கள் இருப்பார்கள்... அல்லவா? இருந்தார்கள் அவர்கள் இனியவனை அவ்...



பார்த்தேன். இங்கே பார்த்தேன் என்று சொல்லும் போதும் "என்னதான் அம்மா ஜாடையாக இருந்தாலும் பின்னால இருந்து பாத்தா அசப்பில அந்தக் காலத்துல உன்னைப் பாத்த மாதிரியே இருக்கு" என்பார்கள். அப்படி அடிக்கடி கேட்க நேரும்போது தான் வாழ்க்கையில் பெரிய தவறு செய்து விட்டோமோ என்று தோன்றும்.

"புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை"

என்ற திருக்குறள் தான் மனதில் தோன்றும். ஆனாலும் மனதும்.. என்னே உள்ளூர மனோரஞ்சிதம் தன் மேல் அன்புடன்தான் இருக்கிறார். அவளுக்காவது மணவாழ்க்கை என்று ஒன்று அளித்ததன் மூலமாக திருப்தி அளித்திருக்கிறோம் என்று தேற்றிக் கொள்வார்.

சமீப காலமாக அதிலும் சந்தேகம் விழுந்திருந்தது. ஏனென்றால் ஒன்றிரண்டு முறை அவர் தன் சகோதரனிடம் பேசும் போதெல்லாம் மனோரஞ்சிதம் மௌனமாக இருப்பார். அதிலும் சமீபகாலமாக "அண்ணா..! அது என் தலையெழுத்து..! வேலியில போற ஓணானை எடுத்து மேல விட்டுகிட்டு இப்ப குத்துது, குடையுதேன்னு சொல்லி என்னத்துக்கு ஆகப் போகுது?" என்று பதில் சொன்னபோது அம்மையப்பனுக்கு 'சுருக்'கென்று பட்டது.

நெருங்கிய நண்பனான கந்தசாமியிடம் பகிர்ந்து கொண்ட போது அவர் "ஆமா..! பின்னே அந்தக் குடும்பத்துலயாகட்டும், இந்தக் குடும்பத்துலயாகட்டும். நீ சம்பாதிச்சப் போட்டு அவங்க சாப்பிட்டதுண்டா! நீதானே.. ஹஸ்பெண்ட்ங்கற பதவிக்காக அலவன்ஸ் வாங்கித் தின்னுகிட்டிருக்கே" என்று "சுருக்"கென்று

கேட்டார். தனக்கிருக்கிற நண்பர் வட்டாரமெல்
வாங்கித் தின்பவர்கள் என்றாலும் இந்தக் கந்த
மட்டும்தான் தன்னிடம் எதையும் வாங்கிக் கொ
ளாதவர் என்பதுடன் மனதில் பட்டதையெல்ல
வெளிப்படையாகச் சொல்லக் கூடியவர். அது மட்
அல்லாமல் அந்தரங்கமாகப் பகிர்ந்து கொள்ளக்
விஷயங்களை மற்றவர்களிடம் தெரிவிப்பதோ அ
வைத்துக் கொண்டு அவர்களை கேவலப் படுத்த
செய்ய மாட்டார் என்பதால் தைரியமாக அவரி
மட்டும் பேசுவார்.

கந்தசாமி ஆரம்ப காலத்தில் இருந்தே அம்மைய
பனின் செயல்களைக் கண்டித்துதான் வந்திருக்கிற
ஆனால் நட்பைக் கைவிட்டதில்லை. பொது வி
காரங்கள் பேசுவதில் அம்மையப்பன் கெட்டிக்கார
என்பதோடு சுவாரசியமாகவும் பேசுவார் என்பதால் சற்
நேரம் பொழுது போக்காக அவரிடம் பேசுவதை விரும்
வார். அப்படிச் சமயங்களில் நடு நடுவே அம்மைய
பனின் நடத்தையில் உள்ள குறைகளையும் சுட்டிக்
காட்டுவார்.

மனோரஞ்சிதமே வேறு வழியில்லாமல்தான் தன்
னோடு வாழ்க்கை நடத்துகிறாற்போலப் பேசியதனா
உள்ளூர நொந்து போனார் அம்மையப்பன். ''திட்ட
போட்டு ஏமாற்றினார்'' என்ற கருத்தைத்தான் மனோ
ரஞ்சிதம் தன்னைப் பற்றி மனதில் வைத்திருக்கிறா
என்பது அவருக்குப் பெரிய அடி.

ஆஸ்பத்திரியில் தன்னைப் பார்க்க வந்த கந்தசாமி
யிடம் பகிர்ந்து கொண்டார்.



''ஆமா..! ஒழுக்கமா வாழ்ந்து சொத்து பத்து சேர்த்து வச்சவங்களையே இன்னைக்குப் புள்ளைங்க என்ன விலை சேதின்னு கேட்குதுங்க! நீ ரெண்டு வீட்லயுமே உழைச்சு சம்பாதிச்சு ஒத்தப் பைசா குடுக்கலை. அவுங்க தான் என்னமோ உனக்குப் படியளக்கறாங்க. உனக்கு சோறும் அலவன்சும் ஒட்டறதுக்குக் காரும் குடுத்தும் பேருக்கு வீட்ல வச்சிருக்காங்க. அதுக்கு மேல எதுவும் எதிர்பார்க்காதே! யோசிக்காதே! யோசிக்கற அளவுக்கு உன் கடந்த கால வாழ்க்கை நடக்கலை!'' என்று இரக்கமில்லாமல் உண்மைகளை கந்தசாமி புட்டுப் புட்டு உரைத்த போது அம்மையப்பன் கொஞ்சம் நொந்துதான் போனார்.

''இரத்தம் நன்றாக இருக்கும் வரை இருக்கும் தெம்பும் துணிவும் இரத்தம் செத்துப் போனதற்குப் பிறகு இருக்காது'' என்பார்களே அப்படியொரு நிலைமையில் இருந்தார் அம்மையப்பன். அவரும் ஜாடை மாடையாக மகனை தொலைவில் இருந்து பார்த்துக் கொள்வார். ஆனால் அருகில் சென்று பேசத் துணிவிருக்காது. ஆனால் ஊருக்குள்ளே மிக நல்ல பெயர். கல்லூரியில் நல்ல பெயர் என்று கேள்விப்படும் போது பெருமையாக இருக்கும்.

மனோரஞ்சிதத்தின் வீட்டில் அவரை யாரும் பெரிதாக மதிக்க மாட்டார்கள் என்றாலும் பெரிதாக அவமதிக்கவும் மாட்டார்கள். எப்போதாவது ஒரு முறை அவருக்கே சாருலதாவிடம் பேசலாம் என்று தோன்றும். ஆனால் அவள் நின்று ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டாள். இப்போதுதான் தனது வாழ்க்கையைப் பற்றி சிந்தித்துப் பார்க்கிற கட்டத்தில்தான் தான் எப்படிப்பட்ட

ஒரு வெறுமையான வாழ்க்கை வாழ்ந்திருக்... என்று புரிந்தது. இன்னும் வாழ்க்கையை அ... புரிய வைக்கிற விதத்தில் விஷயங்களும் நடந்...

* * *

"சார்!" என்று தயங்கி நின்றாள் பிரேமா.

"என்னம்மா...! அந்த புக்ஸ் எல்லாம் படிச்... அதுல உன் தீஸிஸ்க்குத் தேவையான விஷய... நிறைய இருக்கே!" என்றார் சேகர்.

அதே சமயத்தில் இனியன் உள்ளே வந்தான். "சே... என்று அழைத்தபடி பிரேமா அங்கே நிற்ப... பார்த்தவுடன் "ஓ! ஏதோ முக்கியமான டிஸ்கஷன் போ... இருக்கு! ஆம் ஐ டிஸ்டர்பிங் யூ" என்று புன்னகை... தான்.

"நெவர்! உட்காருப்பா..!" என்றார் சேகர்.

"இல்ல! நீங்க பேசி முடிங்க! நான் லைப்ர... வரைக்கும் போயிட்டு வரேன்..." என்று நகர்ந்தா... சேகரும் பிரேமாவைப் பார்த்தவுடனே துணுக்குற்ற... போல ஒரு முக பாவத்தைக் காட்டியதைப் பார்த்தா... ஆனால் எதனால் என்று புரியவில்லை பிரேமாவுக்... நன்றாகவே புரிந்தது. தான் சாருலதாவின் தோ... என்பதுதான் அந்த மாதிரி ஒரு பின்னடைவுக்கு காரண... என்று புரிந்தது.

சேகரிடம் தன் ஆய்வு தொடர்பான விஷயங்களை... பேசினாள். ஒரு இருபது நிமிடம் போயிருக்கும் பிற... மெதுவாக.

"சார்!" என்றாள்.



"என்னம்மா?" என்றார் சேகர்.

"சார்! பர்ஸனலா ஒரு விஷயம் பேசணும்" என்றாள்.

சேகரின் முகத்தில் ஆச்சர்யம் தெரிந்தது. எத்தனையோ மாணவர்களும், மாணவிகளும் அவரிடம் தங்கள் சொந்த விஷயம் குறித்து ஆலோசிப்பது உண்டு. இனியனிடம் கூட அப்படிப் பேசுவார்கள். இத்தனைக்கும் இருவருமே இளைஞர்கள்தான். அதிலும் சேகராவது திருமணமானவர். ஆனால் இனியன் திருமணமாகாதவன் என்றாலும் மாணவர்கள் மத்தியில் இருவரும் நம்பிக்கைக்குரியவர்கள் என்ற கருத்து ஆழப் பதிந்திருந்தது. ஆனால் சேகரைப் பொறுத்தவரை பிரேமாவே கொஞ்சம் பக்குவமான பெண் என்றுதான் எண்ணம். இந்தப் பெண் தன்னிடத்திலே எதற்கு ஆலோசனை கேட்கப் போகிறாள் என்றுதான் ஆச்சரியம்.

"சொல்லும்மா...!" என்றார்.

"சார்! பர்ஸனல்ன்னா.. இது என்னோட பர்ஸனல் மட்டுமில்லே... உங்களுக்கும் தொடர்புள்ள விஷயம் தான்" என்றாள்.

"எனக்குத் தொடர்பா? ஏம்மா.. இன்னைக்கு ஏப்ரல் ஒண்ணு. அந்த மாதிரி எதுவும் இல்லையே!" என்று சிரித்தார் சேகர்.

பிரேமா நகர்ந்து அந்தக் காரிடாரின் கடைசியில் இருந்த டிபார்ட்மென்டில் ஒரு வேளை இனியன் வந்தால் தெரிகிற மாதிரி நின்று கொண்டாள்.

"ஆமாங்க சார்! உங்க பிரண்டும், என் பிரண்டும் சம்பந்தப்பட்டிருக்காங்கன்னு சொன்னா... நம்ம ரெண்டு பேருக்கும் சம்மந்தம்னுதானே அர்த்தம்..." என்றாள்.

"ம்...!" என்றார் சேகர் ஒற்றைப் பருவத்தை...

"ஆமா.. சார்! உங்க பிரண்டு இனியன் சாருக்கு... பிரண்டு சாருலதாவும் சம்பந்தப்பட்ட விஷயம்..." என்றாள்.

"அது யாரு.. சாருலதா?" என்றார் சேகர்.

"சார்! சாருலதா.. யாருன்னா.. நீங்க கல்... வீங்களே.. அந்த ஊர்ப் பெரிய மனிதரோட... கதிர்காமரோட பொண்ணு...! ஆனா... அவங்க... அவரோட சிஸ்டர்தான் வளர்க்கிறாங்க...."

"அப்படீன்னா.. தத்து மகளா?"

"இல்லல்லே! வளர்ப்பு மகள், தத்து மகள் அப்... பெல்லாம் இல்லே! அவங்களுக்கு ஒரு ஆதர... இருக்கட்டும்னு வளர்க்கறாங்க" என்றாள்.

"ஓ..! நீங்க மனோரஞ்சிதம் மேடத்தைச் சொல்... களா? கண்டிப்பா.. அவங்களுக்கும் இனியனுக்... எந்த சம்பந்தமும் இருக்காதே...! இருக்கக் கூடாதே..." என்றார் சேகர் ஆழ்ந்த குரலில் சிந்தனையுடன்.

"இருக்காது... இருக்கக் கூடாதுங்கறது என்... ஹைப்போதஸிஸ்..! ஆனா இருக்கற மாதிரித் தெரியுது" என்றாள்.

சேகர் ஏதோ பேச வாயெடுக்க அவள் குறுக்கிட்டாள். "சார்! ஒருவேளை அப்படியிருந்தா அது அவங்க பர்ஸனல் மேட்டர்ன்னு நாம நினைக்கலாம். ஆனா பிரச்சினை என்னன்னா" என்று அவள் விளக்கும்போது சேகர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

சற்று நேரத்திற்குள் இனியன் வந்து சேர்ந்தான். பிரேமா நகராமல் அங்கேயே இருந்தாள். சேகர்



அப்போது ஒரு வேலை செய்தார். "எம்மா... பிரேமா..! அந்தச் சாருலதா அதான்ம்மா.. உன் பிரண்ட் ஏதோ ஃபார்ம்ஸ் குடுத்துவிட்டதுன்னு சொன்னியே..! அதுல ஒரு ரெண்டு ஃபார்ம் குடு! என் வைஃப்கிட்டே குடுத்து ஃபில் பண்ணித் தரச் சொல்றேன்" என்றார்.

பேசியது என்னமோ பிரேமாவிடம் என்றாலும் சாருலதாவின் பெயர் உச்சரிக்கப்பட்ட உடனே இனியனின் முகத்தில் தென்பட்ட உணர்ச்சிகளையும், அதை அவன் அடக்குவதற்காகப் பட்ட பாட்டையும் ஆழ்ந்து கவனித்துக் கொண்டார்.

இயல்பாக பேசுவது போல இனியனிடமும் திரும்பி "இனியா! இந்த பிரேமாவுக்கு அந்த கதிர்காமர் இல்லே.. அவரோட பொண்ணு ரொம்ப பிரண்டாம். அதோட பிரண்ட் ஏதோ தீஸிஸ் பண்றாங்களாம். அதுக்கு ஹெல்ப் பண்றதுக்குன்னு கொஞ்சம் ஃபார்ம்ஸ் கொண்டு வந்து குடுத்தாப்லயாம்" என்று சாருலதாவைப் பற்றியே பேச்சு வளர்த்தார்.

இனியன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு "ம்.. ம்..!" என்று கேட்டுக் கொண்டு மெதுவாகப் பேச்சை மாற்றினான். சேகரும், பிரேமாவும் பார்வை பரிமாறிக் கொண்டதை இனியன் அறியவில்லை! அவன் மௌனம் பேசிய சங்கதிகளை சேகர் புரிந்து கொள்ள சிந்தனையில் ஆழ்ந்தார்.

வீட்டுக்குப் போன இனியனுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது!

# 12



இனியன் விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தான். அதில் ஆழ்ந்து போயிருந்தான்.

ஹால் கடிகாரம் எட்டு முறை அடித்து ஓய்ந்தது. அந்தக் காலத்து கடிகாரம்! அம்மாவுக்கு அந்தக் கடிகாரம் மிகவும் பிடிக்கும் என்பதால் மாமா ''உன்கிட்டயே இருக்கட்டும் பிரபா!'' என்று கொடுத்துவிட்டார்.

அதைக் கொடுக்கும் போது ''உங்கம்மா... சின்ன வயசுல இதுல எத்தனை மணி அடிக்குதோ அத்தனை தரம் குதிப்பா...'' என்று சொல்லிச் சிரித்தார் ஆளவந்தார்.

அப்போது இனியனுக்குப் புரியவில்லை. ஆனால் இப்போது புரிந்தது. பொதுவாகவே மனிதர்கள் சில பொருட்களிடம் கூட அன்பைச் செலுத்துகிறார்கள் என்று. ''ஆன்டிக்ஸ்'' என்று ஒரு நூறு வருஷமான பொருட்களைக் கூட வெளிநாடுகளில் போற்றி வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் பழமை மிகுந்த பொருட்களைப் போற்றி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இன்னும் நம் மனங்களில் வளரவில்லை என்று அவ்வப்போது எண்ணிக் கொள்வான்.

விடைத்தாட்களைத் திருத்தி முடித்துவிட்டு நிமிர்ந்தான் இனியன். ஏதாவது புத்தகம் படித்தால் நன்றாக இருக்கும் போலத் தோன்றியது. அந்த மாதிரி எண்



ணங்கள் ஏற்படும் போது பெரும்பாலும் சரித்திர நாவல்களை விரும்பிப் படிப்பான். அப்படியொரு நாவலை எடுத்துக் கொண்டு அமர்ந்தான்.

போர்ட்டிகோவில் யாரோ வந்து நிற்கிறாற் போலத் தோன்றியது. கவனித்துப் பார்த்தான்! அதிர்ந்து போனான்.

அம்மையப்பன் நின்று கொண்டிருந்தார்.

இனியன் திடுக்கிட்டு எழுந்து நின்றான்.

''இவர் எங்கே இங்கே?'' என்று திகைத்தான் அவன்.

வார்த்தைகள் எழாமல் நின்ற போது அவர் சரசரவென்று உள்ளே நுழைந்தார். போதையில் இருக்கிறாரோ என்று பார்த்தான். இல்லை! மனிதர் தெளிவாகத்தான் இருந்தார்.

இனியனின் முகம் கடுமையாகியது! ''என்ன விஷயம்?'' என்றான்.

''எதிரியே வந்தாலும் வாங்கன்னு வாங்கன்னு கேக்கறது நம்ம ஊர்ப் பழக்கம்'' என்ற அம்மையப்பன் சிறிதும் வெட்கம் இல்லாதவர் போல உள்ளே நுழைந்தார்.

இனியன் சட்டென்று திரும்பிக் கொண்டு உள்ளே போக யத்தனித்தான். அதற்குள் பிரபாவதி வெளியே வந்தார். வந்தவர் அம்மையப்பன் உள்ளே வந்து சோபாவில் அமர்வதைப் பார்த்தவுடன் திகைத்துப் போனார்.

இனியன் திரும்பித் தன் தாயைப் பார்த்தான். ''அம்மா...! அந்த ஆளை முதல்ல வெளியே போகச் சொல்லுங்க..!'' என்றான்.

பிரபாவதி செய்வதறியாமல் திகைத்தவர் அவரும் திரும்பி அம்மையப்பனைக் கோபமாக இல்லாமல் அழுத்தமாகக் கேட்டார்.

"இப்ப எதுக்கு வந்தீங்க? என்னைத்தைத் திரு... போகலாம்னு வந்தீங்க?" என்றார்.

அம்மையப்பன் ஒன்றும் பேசவில்லை. சற்று நே... தரையைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார். பிறகு குலுங்கிக் குலுங்கி அழுதார்.

இனியன் எழுந்து உள்ளே போக யத்தனித்தான். "தம்பி... நில்லு!" என்று அம்மையப்பன் எழுந்து தடு... தருமல்லாமல் கிட்டத்தட்ட காலில் விழப் போனார்.

இனியன் திடுக்கிட்டுப் போய் பின்னால் நகர்ந்து கொண்டான்.

"இதென்ன அடுத்த டிராமாவா?" என்றான். அவர் முகத்தைப் பார்த்தான். இத்தனை நாள் அவர் முகத்தை அவன் அவ்வளவு அருகில் பார்த்ததில்லை. அந்த முகத்தில் உண்மையான ஏக்கத்தின் சாயல் தெரிந்தது. கோபமும் பொங்கிக் கொண்டு வந்தது. பரிதாபமும் பொங்கிக் கொண்டு வந்தது. உடனே உள்மனம் சிலிர்த்துக் கொண்டது.

'பரிதாபமா? இந்த ஆள் மேலா! தன் தாயின் இளமைக்காலத்தையெல்லாம் தனிமையில் தவிக்க விட்டு விட்டு தனது சுயநலமே பெரிதென்று போன இந்த மனிதன் மேல் பரிதாபமா?' என்று நினைத்தவுடனே மனம் மீண்டும் கல்லாய் இறுகிக் கொண்டது.

"ப்ளீஸ்! போயிடுங்க! எதுவும் ரசாபாசமாகறதுக்கு முன்னாடி போயிடுங்க?" என்றான் பற்களை இறுகக் கடித்துக் கொண்டு.

"நீ என்னை அடிச்சே கொன்னாலும் சரி... நான் இனிமே இந்த வீட்டை விட்டுப் போக மாட்டேன். நான்



...செஞ்ச தப்புக்கெல்லாம் பிராயச்சித்தமா இங்கயே ஒரு மூலைல கிடக்கேன். நீயும், பிரபாவும் என்னை வீட்டு ...ஆளுனா எத்துக்க வேண்டாம். ஏதோ ஒரு மூலைல இருந்துக்கறேன். நீங்க சொல்ற வேலையெல்லாம் செய்யறேன்" என்றார்.

"ஏன் அங்க துரத்தி விட்டுட்டாங்களா?" என்றான்.

அவர் முகத்தில் விரக்தியான ஒரு புன்னகை மலர்ந்தது. "அங்கயும் நான் வேண்டாத விருந்தாளிதான். இங்க மாதிரியே அங்கயும் பண்புள்ளவங்கதான். விரட்டி எல்லாம் அடிக்க மாட்டாங்க...!" என்றார்.

"இங்க பாருங்க! ஒரு விஷயம் புரிஞ்சுக்குங்க. முடிஞ்சு போனது முடிஞ்சு போனதுதான். இனிமே நீங்க எக்காரணத்தைக் கொண்டும் இங்க வர முடியாது" என்று இனியன் நக்கலாகச் சிரித்து விட்டு. "நீங்கதான் ரொம்ப இலக்கியம் எல்லாம் படிப்பீங்களாமே? தி ரோட் நாட் டேக்கன்னு ஒரு ஆங்கிலக் கவிதை கேள்விப்பட்டிருக்கீங்களா? அது மாதிரித்தான்... வாழ்க்கைல இந்தப் பாதையை விட்டு நீங்க வேற பாதைக்குப் போயிட்டீங்க ரொம்ப தூரம் போயிட்டீங்க! இனிமே திரும்பி வர முடியாது..." என்றான்.

அம்மையப்பன் தளர்ந்து போய் சோபாவில் அமர்ந்தார். பிறகு தளர்ந்த குரலில்.

"ஆமா...! உண்மைதான்! ஆனா, உன்னைப் பற்றி ஒவ்வொருத்தரும் பெருமையா வந்து சொல்லும்போது எனக்கு உன்கூட இருக்கணும் பேசணும்.. பழகணும்னு தவிப்பு வருதே..."

"ஓஹோ! உங்களுக்கு இப்பத் தவிப்பு வருதா? உடனே வாங்கப்பான்னு நான் உங்களை வரவேற்கணு

மாக்கும்! நானும் டீன் ஏஜ்ல இருந்தப்பத்தானே ... வெளியே போனீங்க? என்ன படிப்பு படிக்க... மேற்கொண்டு என்ன செய்யலாம்னு திட்டம்... வேண்டிய காலங்கள்ல, அப்பா கூட இருக்க வே... காலங்கள்ல நீங்க இருந்தீங்களா? தன்னோட ... கெட்டதுல பங்கெடுத்துக்கறதுக்கு ஒரு ஆண்... கூட இல்லையேனு அம்மா தவிச்ச தவிப்பு உங்களுக்கு... தெரியுமா? இங்க என்ன இல்லைன்னு அங்க போனீங்க... அப்புறம் அங்க என்ன இல்லைனு அங்கிருந்து இ... வர்றீங்க?'' என்றான் காட்டமாக.

பிரபாவதி மகன் கேட்கிற கேள்விகளைக் கண்டு ஒ... பக்கம் பெருமிதம் அடைந்தாலும் இப்படியெல்லாம்... மகன் தன் தந்தையைப் பார்த்துக் கேட்கிற நிலை... யிலே தன் வாழ்க்கை அமைந்துவிட்டதே என... ஆற்றவொண்ணாத வேதனை தொனிக்க மௌன... கண்ணீர் வடித்தபடி நின்றார்.

அம்மையப்பனால் பேச முடியவில்லை.

''கொஞ்சம் தண்ணியாவது குடுங்க!'' என்றார்.

இனியன் திரும்பி ''அம்மிணியம்மா!'' என்று குர... கொடுக்க அம்மணி ஓடி வந்தாள்.

''கொஞ்சம் தண்ணி கொண்டு வந்து குடுங்க'' என்றான்.

அம்மிணி சொம்பிலே தண்ணீர் கொண்டு வந்து டீப்பாயின் மேல் வைத்து விட்டு வேகமாக அந்தப்புற... போனாள்.

இனியன் திரும்பி அம்மாவிடம், ''அம்மா... உங்களுக்... கேதாவது இவர்கிட்டே பேசணுமா?'' என்றான்.





பிரபாவதி வாய் திறந்து பேசாமல் இல்லையென்று தலையாட்டிவிட்டு உள்ளே போய்விட்டார்.

இனியன் அழுத்தமாக எதிர் சோபாவில் அமர்ந்தான்.

''பாருங்க... மிஸ்டர் வாழ்க்கை ஒண்ணும் இரப்பர் இல்லை! உங்க இழுப்புக்கெல்லாம் அது வராது. நீங்க இழந்ததை இப்ப நினைச்சுப் பிரயோஜனம் இல்லை! என்னை.. எங்க இழப்பை எதாலும் ஈடுகட்ட முடியாது'' என்றான்.

அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். பிறகு சொம்பில் இருந்த தண்ணீரை எடுத்து மொடக் மொடக் கென்று குடித்தார். பிறகு,

''சரி... ஒரே ஒரு தரம்.. என்னை அப்பான்னு கூப்பிடு...'' என்று சொன்னார். சொல்லும்போதே குரல் கதறலாய் மாறியது.

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடுமல்லவா இனியனுக்கும் மனம் நெகிழ்ந்தது.

''கூப்பிடறேன். ஆனா.. எப்ப எனக்குத் தோணுதோ...! அப்ப...'' என்றான் தொடர்ந்து ''நான் அப்படிக் கூப்பிட ணும்னா.. நீங்க எனக்கு ஒரு கைம்மாறு செய்யணும்'' என்றான்.

''சொல்லு!'' என்றார் ஆர்வமாக.

''இப்பக் கிளம்புங்க! அது மட்டுமில்லை! இனிமே இங்க வராதீங்க!'' என்றான்.

அவருக்கும் கொஞ்சம் ரோஷம் வந்தது போலும் எழுந்தார். அவரும் ஒரு கண்டிஷன் போட்டார்.

''நான் இப்ப இங்க இருந்து போகணும்னா...'' அந்தக் கண்டிஷனைக் கேட்டு அவனும் வேண்டா வெறுப்பாக எழுந்தான்.

* * *

காரை ஓட்டிக் கொண்டிருந்தான் இனியன்.
முகம் இறுக்கமாக இருந்தது. பின் சீட்டில் ...
களிப்பு ஒரு நிமிடம் தெரிய மறு நிமிடம் வே...
தெரிய அம்மையப்பன் அமர்ந்து கொண்டிருந்தா...

அவர் போட்ட கண்டிஷன் இதுதான்!

''நான் போகணும்னா.. நீயே என்னைக் கூ...
கொண்டு போய் விடணும்'' என்பதுதான்.

அவன் லேசில் ஒத்துக் கொள்ளவில்லை. அம்மை
யப்பன் கிட்டத்தட்ட கெஞ்சினார்.

''இரண்டு மூன்று நாளைக்கு முன்னேதான் ஆஸ்பத்
திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆயி வந்திருக்கேன்டா..
வரும்போது பிரண்ட் ஒருத்தரோட கார்ல வந்தேன்.
உன் கார்ல போனா அந்தக் கொஞ்ச நேரமாவது உன்
கூட இருக்கிற பாக்கியம் கிடைக்குமே'' என்று விதவித
மாக அவர் கெஞ்சவும் அவன் உள்ளே போய் அம்மா
விடம் சொல்லிவிட்டு வந்தான். பிரபாவதியும் உடனே
ஒத்துக் கொள்ளவில்லை.

''இவரு.. எதுக்கு இப்ப வந்து தலையைக் காட்டறாரு!
எனக்கு நல்லதாத் தெரியலே. நீ ஒருத்தன்தான் எனக்
குன்னு இருக்கே! உனக்கும் எதுக்கு தொல்லை குடுக்க
றாங்க!'' என்று அவர் கலங்கவும் அவன் அம்மாவை
அன்போடு அணைத்துக் கொண்டான்.

''அந்த மாதிரிக் கவலையெல்லாம் உனக்கு எப்பவும்
வேண்டியதில்லை அம்மா...! எந்தக் கொம்பனாலயும்
உன்னை எனக்கிட்டேயிருந்து பிரிக்க முடியாது.
என்னையும் உங்ககிட்டேயிருந்து பிரிக்க முடியாது''
என்றான்.



அந்த ஒரு வார்த்தையில் நிம்மதி அடைந்த பிரபாவதி
''...ப்பா! உனக்கு எது கரெக்ட்ன்னு தோணுதோ அதைச்
செய்!'' என்றார்.

அதற்குப் பிறகு இனியன் காரை எடுக்கவும் அவர்
ஆவலாக ஓடி வந்து ஏறிக் கொண்டார். கொஞ்சம்
இயல்பாகப் பேசினாலும் கூட மனிதர் அதே சாக்கை
வைத்துக் கொண்டு ஒட்டிக் கொள்ளப் பார்ப்பார் என்ற
எண்ணத்தால் வாயை இறுக மூடிக் கொண்டு வந்தான்.
ஆனாலும் அவர் சும்மா இருக்கவில்லை.

''தம்பி..! நான் வாழ்க்கையில எவ்வளவு பெரிய தப்பு
செஞ்சுட்டேனு எனக்கு இப்பத்தான் புரியுது. என்னை
மட்டுமே நினைச்சேன். ஆனா.. இப்பத்தான் எவ்வளவு
விஷயங்களை இழந்திருக்கேன்னு புரியுது'' என்றார்.
குரலில் உண்மை தொனித்தது. ஆனாலும் அவன்
இளகவில்லை.

''இப்பவும் நீங்க எவ்வளவு இழந்திருக்கீங்கன்னுதான்
பேசறீங்களே ஒழிய உங்களால எவ்வளவு பேர் எத்
தனையோ இழந்திருக்காங்கன்னு யோசிக்கத் தோணலை
இல்லே'' என்றான்.

அவர் அவன் சாடியதை வாங்கிக் கொண்டார். ''ஆமா!
பிறவிக்குணம்'' என்று தன்னைத் தானே சாடிக் கொண்டார்.

''இனிமே கொண்டு எங்க வீட்டுக்கு வராதீங்க! நானும்,
அம்மாவும் ஏதோ எங்க அளவுக்கு நிம்மதியா இருக்கோம்.
இப்படியே இருக்க விடுங்க. இப்பவாவது அம்மாவுக்கு
ஏதாவது செய்யணும்னு நினைச்சீங்கன்னா.. இதைச்
செய்ங்க. ஏன்னா... இப்ப மறுபடியும் நீங்கள்ளாம் வந்து
ஒட்டி எங்கே என்னையும் பிரிச்சுருவீங்களோன்னு
அம்மா பயப்படுறாங்க'' என்றான் காட்டமாக.

அம்மையப்பன் பெருமூச்சு விட்டார். பெரு... னார் "ஆமா! பிரபாவதிக்கு நான் எந்த வித... நியாயம் செய்யலே..." என்றார்.

காரை ஓட்டிக் கொண்டிருக்கும்போதே இனி... மனதுக்குள்ளாக இன்னொரு எண்ணமும் தோன்... 'நாம் எதற்காக இந்த மனிதரைக் காரில் ஏற்றிக் கொ... டிராப் செய்யச் சம்மதித்தோம்! ஆள் நம் வீட்டில் இரு... நகர்ந்தால் போதும் என்ற எண்ணம் மட்டும்தா... இல்லை... சாருலதாவை அந்த வீட்டில் பார்க்க மு... என்று எண்ணமா?' அந்தக் கேள்விக்கு பதிலைக் கண்... கொள்ள அவன் ஆழ்மனமே முயற்சிக்கவில்லை. ஏனெ... றால் அதற்கு விடை தெரிந்திருந்தது.

மகன் "வெடுக்" 'வெடுக்'கென்று பதில் சொல்வ... பார்த்த அம்மையப்பன் மேற்கொண்டு பேச்சை வளர்க்கவில்லை. மாறாக அவனோடு செலவழிக்க கிடைத்த அரைமணி நேரத்தை அனுபவிப்போம் என்பது போல அமைதியாக அமர்ந்து கொண்டார்.

காரை அமைதியாக ஓட்டிய இனியன் மனபாரத்தை குறைத்துக் கொள்வதற்காக சுற்றுப் புறச் சூழலை ரசிப்பதில் கவனம் செலுத்தினான். வழி நெடுகிலும் அம்மையப்பன் வழி சொன்னார்.

இனியன் அந்தப் பெரிய காம்பவுண்டுக்கு வெளியே காரை நிறுத்தினான். திரும்பிப் பார்க்காமல் "இறங் கிக்கங்க" என்றான்.

அம்மையப்பன் அசையாமல் அமர்ந்திருந்தார். "ப்ளீஸ்! நான் இங்க ரொம்ப நேரம் இருக்க முடியாது"



என்றான். கடுப்பாகி தான் இறங்கி வந்து அவர் அமர்ந்திருந்த பக்கமாகக் கார்க் கதவைத் திறந்து நின்றான்.

அம்மையப்பன் அடம் பிடிக்கிற குழந்தை போல முகத்தை வைத்துக் கொண்டு இறங்கினார். எல்லாருடைய வாழ்க்கையிலும் விளையாடி விட்டு செல்லம் கொஞ்சுகிற அந்த மனிதரை அன்பு இருந்தும் கோபம் பொங்க அடக்கிக் கொண்டு நின்றான்.

அம்மையப்பன் இறங்கி உள்ளே போக அவன் காரைச் சுற்றி வந்து கதவைத் திறந்தான்.

அதே நேரம்!

எந்த விஷயத்தை அவன் உள்மனம் எதிர்பார்த்ததனால் அம்மையப்பனை காரில் கொண்டு விட அவன் சம்மதித்து வந்தானோ அந்த நிகழ்வு நிகழ்ந்தது.

சாருலதா தனது சுடிதாரின் துப்பட்டாவை சரி செய்தபடியே பங்களாவின் போர்டிகோவுக்கு வந்தாள். அவன் பின்னாலேயே வந்த மனோரஞ்சிதம் இனியனைப் பார்த்தவுடனே சட்டென்று ஜன்னலுக்குப் பின்னாலே ஒதுங்கினார். அப்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டார்.

இனியனும் சாருலதாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பார்வைகள் அப்படியே கவ்வி நின்றன. ஓரிரு நிமிடங்கள்தான் என்றாலும் இருவரின் முகத்திலும் தோன்றிய பாவனைகள் எத்தனையோ கதையைச் சொல்லின.

அம்மையப்பன் தயக்கமான நடையில் உள்ளே வர இனியன் எங்கே தன்னை உள்ளே வரச் சொல்லி

அழைப்பார்களோ என்ற எண்ணத்தில் ... எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"எங்கே போறீங்க?" என்று கூட ... விசாரிக்காத மனோரஞ்சிதம் ஆழ்ந்த சிந்தனை... மூழ்கி விட்டார்.

# 13



"வணக்கம்..!" என்றது பெண் குரல்!

"வணக்கம்... சொல்லுங்க!" என்றான் இனியன். இதுவரை பழகிய குரலாக இல்லை. ஆனால் ஏதோ ஒரு முறை கேட்ட மாதிரியும் இருந்தது.

"தம்பி.. நான் மனோர...நசிதம்.. பேசறேன்.." என்றது குரல்.

"ஓ..!" இனியனின் குரலில் சுருதி இறங்கியது. சுரத்தே இல்லாமல் "சொல்லுங்க..." என்றவன் புதிதாக நினைவு வந்தவன் போல, "என்ன விஷயம்? அந்த கேஸ் விஷயங்களா? அதுதான் நாங்க வாபஸ் வாங்கிட்டமே..! இல்லேன்னா.. அவரைக் கொண்டு வந்து விட்டேனே அந்த விவகாரமா? அவர் எங்க வீட்ல வந்து உட்காந்துகிட்டு நகர மாட்டேன்னு தொல்லை பண்ணிட்டாரு..! அதான்.." என்று படபடவென்று கொட்டினான் இனியன்.



மனோரஞ்சிதம் அவனது படபடப்பு பார்த்து ...னிடம் பேசுவதில் அவனுக்கு விருப்பம் இல்லை ...பதை உணர்ந்தார். ஆனால் பேச வேண்டிய அவசியம் அவருக்கு இருந்தது.

முதல் நாள் இனியன் அம்மையப்பனைக் கொண்டு வந்து விட்டுப் போன அந்த நேரத்தில் எதேச்சை யாகத்தான் அவர் தன் மருமகளின் முகத்தைப் பார்த்தார். அதிர்ந்து போனார். அந்த முகம் இனியனின் தோற்றத்தை ஆழமாக உள்வாங்கிக் கொண்டிருந்தது.

இனியனை உள்ளே அழைக்கலாமா, வேண்டாமா என்று அவள் தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அந்த மாதிரி அவசியம் எதற்கும் இடம் வைக்காமல் அவன் கார்க் கதவை அறைந்து சாத்திக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டான். அப்படி அவன் புறப்பட்டுப் போனதும் சாருலதாவின் முகம் வாடிப் போனதையும் கவனித்தார்.

"சாருலதா..!" என்று மெல்லிய குரலில் அழைத்தார். சாருலதா அவசர அவசரமாக தன்னைச் சரிப்படுத்தி கொள்வதையும், தன் உணர்வுகளைச் சமன்படுத்திக் கொள்வதையும் பார்த்தார்.

"அந்தத் தம்பிதான்.." என்று அவர் இழுக்க சாருலதா.. அமர்த்தலாக "இனியன்..!" என்றாள்.

மனோரஞ்சிதம் அவ்வப்போது பார்த்திருக்கிறார். ஆனால் அருகில் பார்க்கிற அவசியம் இதுவரை ஏற்பட வில்லை.

"பெரிய ஆளு! உள்ளே வந்துட்டுப் போனா என்ன வாம்?" என்று மருமகள் முணுமுணுத்து விட்டுப் போவதை அவர் ஆழமாகப் பார்த்தார்.

சாருலதா தன் வீட்டு வாயிலுக்கே இனியன்
விட்டு சென்றதில் கொஞ்சம் நிலைகுலைந்து
போய் விட்டாள். அதே நேரம் மனோரஞ்சிதம்
போனீங்க?" என்று கணவனிடம் கேட்டுக் கொண்டு
இருந்தாள்.

"அந்த வீட்டுக்கு?" என்று கொஞ்சம் கம்பீரமாகவே
பதிலளித்தார். உடனே சாருலதா தன் அறையை விட்டு
வெளியே வந்து.

"என்ன மாமாவை ஆரத்தி எடுத்து வரவேற்று
குடுத்தாங்களாக்கும்?" என்றாள் கோபமாக.

மகனோடு வந்து இறங்கிய பெருமிதத்தில் இருந்தார்
அம்மையப்பன். கொஞ்சம் கம்பீரமாகவே சாரு
லதாவைப் பார்த்தார். "அவங்க வரவேற்றா என்ன,
வரவேற்கலேன்னா என்ன? எனக்கும் சொந்தமான
பொருள் என் பையன் அங்க இருக்கான்.." என்றார்.

சாருலதா கிண்டலாகச் சிரித்தாள். "எது? இப்ப வந்து
நீயும் வேண்டாம். உன் சங்காத்தமும் வேண்டாம்னு
வாசலோடு வந்து கடாசிட்டுப் போச்சே அந்தப்
பொருளா?" என்றாள் கிண்டலாக.

அம்மையப்பன் மனோரஞ்சிதத்தைப் பார்த்து ஏதோ
சொல்லு முன்பாக மனோரஞ்சிதமே மருமகளிடம்
"சாரு... உனக்கு உருப்படியான வேலை ஒண்ணும்
இல்லையா? எதுக்காக நீ இப்படி வாயைக் குடுத்து
கிட்டிருக்கிறே?" என்றார் கடிந்து கொள்ளும் விதமாக.

"ஆமாத்தை! நீ வேற சப்போர்ட்!" என்று முணு
முணுத்துக் கொண்டே உள்ளே போனாள் சாருலதா.



மனோரஞ்சிதம் அன்று முழுவதும் சிந்தனையி
லேயே இருந்தார். அம்மையப்பன் அந்த வீட்டுக்குப்
போய்விட்டு வந்ததைக் கூட அவர் பெரிதாக எடுத்துக்
கொள்ளவில்லை. இருந்தால் என்ன, போனால் என்ன
என்கிற மனப்பான்மையில்தான் இருந்தார். சொல்லப்
போனால் இந்த மனிதர் எங்கே போய் எதுவும் குழப்பம்
விளைவிக்கக் கூடாதே என்றுதான் நினைத்தார். ஆனால்
இப்போது அதைக் காட்டிலும் உறுத்துகிற விஷயம்
ஒன்று அவர் மனத்தில் நெருடியது.

சாருலதாவின் பின்னாலேயே போனார். சாருலதா
வின் அறைக்குள் நுழைந்தார்.

சாருலதா திரும்பி முறைத்தாள். "அதான் ஒண்ணும்
பேச வேண்டாம்னு சொல்லிட்டியே நான்தான் வந்துட்
டேனே..!" என்றாள் காட்டமாக.

மனோரஞ்சிதம் மென்மையாகப் புன்னகைத்தார்.
"நான் அதைப் பேச வர்லைடி!" என்றார்.

"வேறு என்ன?" என்பது போல் பார்த்தாள்.

"இல்லே! இப்ப வந்துட்டுப் போனாரே.. அந்தத்
தம்பிதான் இனியனா?" என்றார்.

சாருலதாவின் முகம் மென்மையாக மாறியது.

"ம்..!" என்றாள் சொல்லும் போதே முகத்தில் செம்மை
ஏறியது.

மனோரஞ்சிதத்துக்குப் பழைய எண்ணங்கள்
பொங்கிக் கொண்டு வந்தது. இப்படித்தான் அம்மை
யப்பன் தன்னை ஒரு காலத்தில் ஈர்த்தார். திட்டமிட்ட
நாடகம் ஆடியவரல்லவா.. அவர்? அந்த ரத்தம் அந்தப்

பையன் உடம்பிலும் ஓடுகிறதல்லவா? இருந்தாலு(ம்) பொறுமையாக் கையாள வேண்டிய விஷயம் இது!

''உனக்கும் பழக்கமா?'' என்றார்.

''ரொம்பப் பழக்கம் இல்லே! பிரேமாவை அ(ங்க) காலேஜ்ல பார்க்கப் போனப்ப.. பேசியிருக்கேன் கோவில்ல வச்சு அவங்க மாமா கூடப் பேசினாரு'' என்றாள்.

''ம்..'' என்று உள்வாங்கிக் கொண்டார் மனோரஞ்சிதம்.

அத்தையின் முகத்தில் தோன்றிய உணர்வுகளைப் பார்த்த சாருலதா அவசர அவசரமாகச் சொன்னாள்.

''அத்தே.. நீ எதுவும் தப்பா நினைக்காதே! எங்க பாவே கொண்டு போய் அவரை டிராப் பண்ணலையா? ஆளவந்தார் சாராகட்டும், நம்ம அப்பாவாகட்டும் வெளியில இப்ப எதிர்ப்புணர்வையும் காட்டிக்கிற தில்லே...!'' என்றாள்.

''ம்..! அப்படித்தான் தெரியுது. இருந்தாலும்'' என்றார்.

சாருலதா தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ''நான் கேர்ஃபுல்லா இருந்துக்குவேன் அத்தை'' என்றாள்.

அந்த நேரம் அவள் முகம் எதிரிலே இருந்த கண்ணாடியில் பிரதிபலித்தது அந்த முகத்தில் தெரிந்த ஏக்கமும், சோகமும் மனோரஞ்சிதத்தின் இதயத்தைப் பிசைந்தது.

சாருலதாவின் மனத்தில் இருக்கிற விஷயம் பெண்ணுக்குப் பெண்ணாக அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. தன்னைப் போலவே தன் மருமகளும் அந்தக் குடும்பத்தோடு தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்கிறாளே.. என்று கவலையும் தோன்றியது.



இது சம்பந்தமாகக் குறிப்பிட்ட ஒருவரிடம் பேச வேண்டும் என்று எண்ணியிருந்தார். அந்தக் குறிப்பிட்ட ஒருவரே அன்றிரவு அவரிடம் தொடர்பு கொண்ட போது கொஞ்சம் திகைத்துப் போனார்.

* * *

''போட்டோஸ் எல்லாம் நல்லா வந்துருக்குங்க உங்களுக்குக் காண்பிச்சுட்டு... வரச் சொன்னாரு! அது மட்டுமில்ல.. உங்களுக்கு எந்த போட்டோ தேவையோ எடுத்துக்கச் சொன்னாரு... எங்க பிரின்சிபால்'' என்றார் சேகர்.

கதிர்காமர் அந்தப் புகைப்படங்களையெல்லாம் திரும்பத் திரும்பப் பார்த்தார். இருபத்தைந்து புகைப்படங்களுக்கு மேல் இருந்தது.

''அப்புறம் உங்களுக்கு?'' என்றார் கதிகாமர்.

''ஒண்ணும் பிராப்ளமேயில்லை. போட்டோவுக்கு முன்னால இருக்கிற.. நம்பரை மட்டும் நோட் பண்ணிட்டா.. நாங்க மறுபடி ஆர்டர் பண்ணிப்போம்'' என்றார் சேகர்.

''நல்லது..'' என்று எல்லா போட்டோக்களையும் பார்த்த கதிர்காமர் நான்கு படங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டார். அதில் மூன்று படத்தில் இனியன் இருந்ததைக் கவனித்த சேகர் உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டார். அந்த நேரம் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல கதிர்காமரே ''ஏன் தம்பி! இந்த இனியன் எப்படி?'' என்று விசாரித்தார்.

''தங்கம் சார்! பத்தரை மாத்துத் தங்கம்! காலேஜ்ல கேட்டுப் பாருங்க! எல்லார்கிட்டயும் நல்ல பேரு...!

இனியனைப் பிடிக்காதவங்க யாருமே இருக்க மா
டாங்க!" என்றார்.

"அப்படியா?" என்று கேட்டுக் கொண்டார். பிற
மனம் விட்டு ஒன்றைச் சொன்னார். "ஆக்சுவலா.. நம்
எங்க குடும்பத்துக்கும், அந்தக் குடும்பத்துக்கு
பகைன்னு பேரு..! ஆனா... இந்தப் பையனை எனக்கு
ரொம்பப் பிடிச்சுப் போச்சு" என்றார்.

"அதான்.. அவன்கிட்டே இருக்கிற வசீகரமே" என்று
சிரித்தார் சேகர்.

சற்று யோசிப்பவர் போல் யோசித்து விட்டு, "அய்யா
நான் ஒரு விஷயம் சொல்றேன். அதைப் பத்தி
கொஞ்சம் யோசிங்க" என்றார்.

"சொல்லுங்க.. தம்பி..." என்று சாதாரணமாகத்தா
கேட்க ஆரம்பித்தார் கதிர்காமர். ஆனால் சேகர் சொல்லி
முடித்த பின் பெரிய குழப்பத்தில் ஆழ்ந்தார்.

சேகர் அந்தப் பெரிய வெடியைப் போட்டுவிட்டு
வெகு நல்ல பிள்ளையாக விடை பெற்றுப் போனார்.

கதிர்காமர் முதலில் குழப்பத்திலும் பிறகு அதிர்ச்
சியிலும் ஆழ்ந்தார். "விதி வலியது"என்று சொல்கிற
களே.. இது இப்படித்தான் விஷயங்களை நடத்து
போலும் என்று எண்ணிக் கொண்டார்.

அன்றிரவு!

தாயம்மாவிடம் "தாயம்மா.." நான் தங்கச்சியை
பாத்துட்டு வரேன்" என்று கிளம்பினார்.

பக்கத்து பங்களாதானே! அடிக்கடி நடக்கும் விஷ
யம்தானே என்று தாயம்மாவும் பெரிதாக எடுத்து
கொள்ளவில்லை.



இருவருமாக பங்களாவின் பின்னாலே இருந்த தோட்டத்து நடைபாதையில் நடந்தார்கள். இன்னும் ஓரிரண்டு நாட்களில் பௌர்ணமி என்பதால் நிலவொளி இதமாக வீசிக் கொண்டிருந்தது.

"அம்மா.. மனோ! இன்னைக்கு நான் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கு...!" என்றார்.

"அண்ணா.. அதுக்கு முன்னாலே நான் சொல்ல வேண்டியது ஒண்ணு இருக்கு!" என்று ஆரம்பித்தார் மனோரஞ்சிதம்.

இனியன் வீட்டுக்கு அம்மையப்பன் போய் வந்ததையும் இனியனே கொண்டு வந்து இறக்கிவிட்டு விட்டுப் போனதையும் சொன்னவர் சாருலதாவின் முக பாவத்தில் இருந்து தான் தெரிந்து கொண்ட விஷயத்தைச் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்தார்.

அந்த இடைவெளியில் கதிர்காமர் சேகர் வந்து தன்னைச் சந்தித்த விஷயத்தையும் போட்டோக் களையும் பற்றிச் சொல்லிவிட்டு ஒரு கணம் தயங்கிய பிறகு சேகர் சொன்ன விஷயத்தையும் சொன்னார்.

மனோரஞ்சிதத்தின் மனத்தில் ஒரே சமயத்தில் மகிழ்ச்சியும், அயர்ச்சியும் தோன்றியது. ஆனால் தன் வாழ்க்கையில் நேர்ந்தது போல் நேர்ந்து விடக்கூடாது என்ற எண்ணத்துடன் கொஞ்சம் நிதானமாகவே இருந்தார். நிதானமாகவே விஷயங்களைக் கையாள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

"அண்ணா! நானும் கிட்டத்தட்ட அந்த மாதிரி ஒரு விஷயத்தைத்தான் உங்ககிட்டே பேசணும்னு இருக் கேன்" என்றவர் தன் தரப்பு விஷயத்தைச் சொன்னார்.

[illegible]

[illegible]

"எந்த முடிவும் எடுக்கறதுக்கு இது காலம் [illegible] இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து அப்புறம் முடிவெ[illegible]க்கலாம்'' என்றார்.

"ஆமா அது அப்படித்தான்! இது எளிய நட[illegible] போற விஷயமும் இல்லே! கையைக் கடக்கறதுக்கு முன்னாலேயே விலகிடறதுதான் நல்லது இப்போ தேவையான முன்னேற்பாடுகளைச் செஞ்சுக்கணும்'' என்றார்.

மனோரஞ்சிதம் அதற்கான யோசனை சொன்ன[illegible] அது நல்ல யோசனையாத் தோன்றியது. மனோரஞ்சிதத்தின் முன்னிலையிலேயே கதிர்காமர் செல்போனை எடுத்துப் பேசினார்.

"ஆமப்பா.. சேகர்! அது உன்னாலதான் முடியும்'' என்றார்.

சேகர் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு முகம் தெளிவடைய.

"சரி... நீங்க.. கவலையை விடுங்க.. நான் பார்த்துக்கறேன்'' என்றார்.

ஒரு வகையில் சேகருக்கு மகிழ்ச்சிதான் கதிர்காமர் வேறு "உன்னால முடியலைன்னா.. வேற யாராலயும் முடியாது'' என்று நன்றாக உசுப்பேற்றிவிட்டிருந்தார். அந்த மகிழ்ச்சியில் விஷயங்களை எளிமையாகக் கையாண்டு விடலாம் என்றே நம்பினார்.

உடனடியாக அவரும் போன் போட்டுப் பேசினார்.



"இனியா.. இப்ப எங்கே இருக்கே?'' என்றார். "நான்.. [illegible] வீட்லதான் இருக்கேன்!'' என்றான் இனியன்.

"உன்கிட்ட பேசணும்ப்பா...'' என்றார் சேகர்.

"வீட்டுக்கே வந்துடேம்பா.. அம்மா கூட சந்தோஷப்படுவாங்க'' என்றான் இனியன் அன்புடன்.

"இல்லப்பா.. இது வீட்ல பேச வேண்டிய விஷயமில்லே...! கோவிலுக்கு வா..! இல்லேன்னா... பார்க்குக்குப் போயிரலாம்...'' என்றார்.

"சரி வர்றேன்'' என்ற இனியன் அம்மாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

"இனியா! எப்ப மேரேஜ்?'' என்றார் சேகர் நேரடியாக.

ஒரு நிமிடம் விழித்த இனியன் கடகடவென்று சிரித்தான். "நல்லா ஆச்சு..! இன்னைக்கு ஏதோ பிராக்டிகல் ஜோக் பண்றதுன்னு முடிவு பண்ணிட்டே... போல இருக்கு?'' என்றான் இனியன்.

ஒன்றிரண்டு வயது கூடுதலாக இருந்தாலும் இனியன் உரிமையாகவே ஒருமையில்தான் பேசுவான். தானும் சிரித்த சேகர் கதிர்காமர் தன்னிடம் பேசியதைக் குறிப்பிடாமல் மென்மையாக சாருலதாவைப் பற்றி ஆரம்பித்தார்.

இனியன் முகத்தில் முதலில் மலர்ச்சி தோன்றினாலும் மறுகணமே இறுகியது.

"சேகர்...! நான் சொல்றதைக் கேளுங்க! இந்தப் பேச்சே இனிமே வேண்டாம். அம்மா ரொம்ப அப்செட் ஆயிடுவாங்க! என்னமோ.. ஈர்ப்பு ஆனா.. எல்லா சமயத்துலயும் நாம நினைக்கறது நடக்கப் போறது இல்லேனு

தேத்திக்க வேண்டியதுதான். அது மட்டும் இல்லே அந்தப் பொண்ணோட தோற்றம் பிடிச்சிருக்கு. ஆனா அவங்க குணம் தெரியாது. அதனால இதை இதோட விட்டர்லாம்'' என்றான் இனியன்.

சேகர் அமைதியாக வாங்கிக் கொண்டான்.

''ஒரு வேளை பெரியவங்க ஒத்துக்க மாட்டாங்கன்னு நினைக்கறியோ!''

''அதுவும் ஒரு காரணம்'' என்றான்.

''சரி.. பெரியவங்ககிட்டே நான் பேசறேன்'' என்றார் சேகர்.

''வீணா.. அவமானப்படாதீங்க! பங்காளிச் சண்டைன்னா... என்னன்னு உங்களுக்குத் தெரியாது. மூணு தலைமுறையா முறுக்கிட்டு இருக்காங்க! உங்களை அவமானப்படுத்திடுவாங்க'' என்றான்.

''இல்ல..!'' என்று சேகர் மேலும் ஏதோ பேச ஆரம்பிக்கையில் இனியன் கொஞ்சம் கடுமையாகவே சொன்னான்.

''என் மேல் உங்களுக்கு அக்கறை இருக்கிறது ரொம்ப சந்தோஷம்தான். ஆனா.. அம்மா முகத்துல ஒரு சின்ன வாட்டம் வந்தாக் கூட என்னால தாங்க முடியாது. அந்தப் பொண்ணுக்கும் வேற நல்ல மாப்பிள்ளை கிடைப்பாப்ல..! எனக்கும்..'' என்று ஒரு நிமிடம் தயங்கியவன் பெருமூச்சு விட்டு விட்டு ''ஏதோ ஒரு வாழ்க்கை அமையாமையா போகும்?'' என்று முடித்தான்.

சேகர் பேச்சை மாற்றிவிட்டார். ஆனால் மனதுக்குள்ளே மட்டும் ''ஏதோ ஒரு வாழ்க்கை அமைய



வேண்டிய ஆள் இல்லையப்பா நீ!'' என்று திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டேயிருந்தார்.

## 14



நிச்சயதார்த்தம் வெகு சிறப்பாக நடந்தேறியது!

கதிர்காமரும், ஆளவந்தாரும் முதலில் பேசுவதற்கே தயங்கினாலும் கொஞ்ச நேரத்தில் இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

''நல்ல வேளை! எனக்குப் பொண்ணில்லை அதனால நீ தப்பிச்சயாக்கும்!'' என்று ஆளவந்தார் கதிர்காமரிடம் கேலி கூடப் பேசினார்.

இனியனுக்கு ஆச்சர்யம்! ''என்ன கார்லயே வந்து இறங்கினியாம்!'' என்று தன்னை மிரட்டிய மாமாவா இவர்?'' என்று எண்ணிக் கொண்டான்.

மெல்ல திரும்பிச் சற்றுத் தொலைவில் தோழிகளுக்கு நடுவே இருந்த சாருலதாவைப் பார்த்துப் புன்னகைத்தான்!

இரண்டு பேருமே எதிர்பாராத வகையில் அல்லவா நிகழ்வுகள் நடந்தேறி உள்ளன.

இருவருமே ''இனி அவ்வளவு தான்! ஊமை கண்ட கனவு போல இதை மனதுக்குள்ளே வைத்துக் கொண்டே மறுக வேண்டியதுதான்'' என்று நினைத்துக் கொண்

டிருந்த வேளையில் எதிர்பாராத இடங்களில் இரு தெல்லாம் ஆதரவுக் கரங்கள் நீண்டன.

முதலில் முயற்சியெடுத்தவர்கள் சேகரும் பிரேமா... பிரேமா தன் தோழியின் மனம் பற்றிச் சொன்னவுடன் சேகர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

முதலில் அவர் பேசியது கதிர்காமரிடம் தா... ஏனென்றால் சேகரிடம் கதிர்காமருடனான தனது சந்தி... பற்றியும், பங்காளிச் சண்டை என்ற பெயரில் தலை... முறை, தலைமுறையாக அடித்துக் கொண்டது பற்றி... அவருக்கிருந்த வருத்தத்தையும் இனியன் சேகரிட... பகிர்ந்து கொண்டான்.

சேகரின் மனத்தில் முதன் முதலில் யாரைப் பார்ப்ப... என்ற கேள்வி எழுந்தவுடனே அவர் கதிர்காமரை சந்திக்கவே முடிவெடுத்தார். ஏனென்றால் இரு குடு பங்களுக்கிடையே நல்லுறவு வேண்டும் என்ற ஏக்கம் அவர் மனத்தில் இருந்தது என்று சேகருக்குப் புரிந்தது. ஆனால் இரண்டு குடும்பங்களுக்கும் பொதுவான கறுப்பாடாக இருந்த அம்மையப்பனை நினைக்கும் போதுதான் கொஞ்சம் பயமாக இருந்தது. ஆனால் கதிர்காமரிடம் முதன் முதலில் பேசிய போதே அவ ருக்குப் புரிந்தது. அம்மையப்பன் வெறும் செல்லாக் காசு என்று. ஏதோ மூலையில் இருந்து விட்டுப் போகட்டும் என்கிற மாதிரித்தான் அம்மையப்பனை வைத்திருந்தார்கள் என்று புரிந்தது. ஆனால் சேகர் எதிர்பாராதது என்னவென்றால் இனியனின் நிலைப் பாடு. ஆனால் பிறகு யோசித்தபோது சேகருக்கு ஒன்று புரிந்தது. எந்த இடத்திலும் இனியன் தனக்கு



சாருலதாவின் மேல் ஈர்ப்பு இருக்கிறது என்பதை மறுக்கவேயில்லை. தாயின் மனம் நோகக் கூடாது என்பதுதான் அவர் கவலை.

சேகர் மனத்தில் இன்னொன்றும் தோன்றியது. தாயின் மனம் நோகக் கூடாது என்று இனியன் எந்த அளவுக்கு நினைக்கிறானோ அதே அளவுக்கு மகனின் மனம் ஏங்கக் கூடாது என்ற எண்ணம் அந்தத் தாய்க்கும் இருக்கு மல்லவா என்று இப்படித்தான் காய் நகர்த்த வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான். அடுத்த கட்ட நட வடிக்கையாக அவன் நேராக பிரபாவதியிடம் பேச லானான். அதுவும் இனியன் இல்லாத நேரம் பார்த்து.

“அம்மா...! உங்ககிட்டே பேசணும்!” என்றான்.

“சொல்லுப்பா...! இனியன் காலேஜ்லதான் இருந் தானே” என்றார் பிரபாவதி.

“தெரியும்..! அவன் இல்லாத நேரமா வரணும்னு தான்.. வந்தேன்” என்றான் சேகர்.

பிரபாவதி ஆச்சர்யமாகப் பார்த்தார். சேகர் தொடர்ந்து பேசப் பேச அவர் முகத்தில் முதல்ல கவலைதான் தோன்றியது. பிறகு சிந்தனையும் தோன்றியது. கூடவே மகனுக்காக மனம் பேசியது.

‘அம்மா... இதுல முக்கியமான விஷயம் என்னன்னா.. மனசுக்கென்ன சேகர்.. அது குரங்கு மாதிரி அது பாட்டுக்கு அலை பாயும். அது இஷ்டப்படி எல்லாம் ஆடும். நாம அது போக்கில் போக முடியுமா! ‘அம்மாவை தர்மசங்கடப்படுத்தித்தான் எனக்கு ஒரு வாழ்க்கைன்னா அது வேண்டாம்’ அப்படீங்கறான். நான் அவன்கிட்டே

பேசினப்போ எந்த இடத்திலும் அவன் சாருதா... பொண்ணை தனக்குப் பிடிச்சிருக்கற விஷயத்... மறுக்கவேயில்லை'' என்றான்.

பிரபாவதியின் கண்கள் பனித்தன. விதி தன் வாழ்க்கையில்தான் விளையாடியது என்றால் மகள் வாழ்க்கையிலுமா விளையாட வேண்டும் என்று உருகி போனார்.

சற்று நேர கனமான மௌனம் நிலவியது. அதற்குப் பிறகு மெதுவாக வாய் திறந்தார்.

''தம்பி! அன்புங்கறது இரண்டு மனம் சம்பந்தப் பட்டது. ஆனா.. நம்ம ஊர்ல கல்யாணம்ங்கறது இரண்டு குடும்பம் சம்பந்தப்பட்டது. நல்லா யோசிச்சுப் பாரு..! இந்தப் பக்கம் நான் என் மகனோட மனம் நோகக் கூடாதுன்னு சம்மதிச்சாலும் ஆளவந்தார் அண்ணன் சம்மதிப்பாங்களா? அதே மாதிரி அந்தப் பக்கம் கதிர்காமர் சம்மதிப்பாரா? நான் கேள்விப்பட்ட வரைக்கும் இரண்டு பேரும் சாதாரண ஊர்க் கூட்டங்கள்ல கூட எதிரெதிரா நிற்கறாங்க..! அப்படியிருக்கறப்ப..'' என்றவர் கோபம் கொப்பளிக்கிற குரலில் ''எல்லாத்துக்கும் காரணம் அந்த மனுஷன்தான்'' என்று சொல்லிக் கொண்டார்.

எந்த முடிவும் இல்லாமலேதான் சேகர் அங்கிருந்து கிளம்பினான். அம்மாவைக் கூட சமாளித்து விடலாம் போல இருக்கிறதே. ஆனால் பிரபாவதி அம்மா சொன்ன மாதிரி ஆளவந்தார் சாரையும் கதிர்காமர் சாரையும் யார் சமாளிப்பது? அம்மா சொன்னது மாதிரி இரண்டு பேருக்கும் இடையே அம்மையப்பன் சார் தான் பெரிய



பள்ளம் தோண்டி வைத்திருக்கிறாரோ என்ற யோசனை தான் அவரையும் அலைக்கழித்தது அப்போதுதான் அந்த யோசனை தோன்றியது. ஆஹா... இதுதான்... சரியா வழி இப்படியொரு வெடியைப் போட்டாத்தான் வேலை யாகும்'' என்று முடிவு செய்து கொண்டான்.

பிரேமாவிடம் கலந்தாலோசித்தபோது பிரேமா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள்.

''ஆமா.. சார்! இதுதான் பாயிண்ட் விடாதீங்க'' என்று உற்சாகமானாள்.

இனியனுக்கும் இப்போதும் கூட ஆச்சரியம்தான் தங்கள் விஷயத்துக்காக சேகரும், பிரேமாவும் மிகவும் முயற்சியெடுத்தார்கள் என்பது தெரியும். ஆனால் என்ன சொல்லி ஆளவந்தாரையும், கதிர்காமரையும் சேகர் சமாளித்தான் என்பதுதான் அவனுக்குப் புதிராக இருந்தது. பலவிதமாகக் கேட்டுப் பார்த்தான். சேகர் சொன்ன பதில் ஒன்றே ஒன்றுதான்.

''கல்யாணம் முடியட்டும். தேனிலவு கிளம்புவீங் கள்ல. அப்ப சொல்றேன்'' என்பதுதான்.

ஒரு கட்டத்தில் ''போப்பா... சேகர்..'' என்று கோபித் துக் கூடப் பார்த்தான். ஆனால் விஷயம் ஒன்றும் பெயரவில்லை.

கண்ணைச் சுழற்றிப் பார்த்தான். எல்லாக் காட்சியுமே பார்ப்பதற்கு இனிமையாக இருந்தது. ஆளவந்தாரும், கதிர்காமரும் அன்னியோன்னியமாக பேசிக் கொண் டிருந்தார்கள். ஏன் அம்மாவும் மனோரஞ்சிதம்மாவும் கூட நன்றாக பேசிக் கொண்டார்கள். எல்லாமே

வியப்பாகத்தான் இருக்கிறது. அதற்காக கடந்த காலத்துக் காயங்களை மறக்க முடியுமா? அதை நினைக்கும் போது மனத்தின் ஓரத்தில் வலிக்கத்தான் செய்தது.

கண்ணைச் சுழற்றினான். அம்மையப்பன் சற்றுத் தள்ளி ஒரு சேரில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் கூட நண்பர்கள் அப்போதுதான் அந்த முடிவை எடுத்தான்.

நிச்சயதார்த்தம் முடித்து விருந்தினர்கள் எல்லாம் போன பின் நெருங்கிய உறவினர்கள் எல்லாரும் அமர்ந்திருந்தார்கள்.

“ஏம்ப்பா..! என்னப்பா இப்படிச் சொல்ற?” என்றார் ஆளவந்தார்.

“ஆமா.. மாமா..! மண்டபத்தில் கல்யாணம் எல்லாம் வேண்டாம். ரெஜிஸ்டர் மேரேஜ்தான். அப்புறம் சாயங்காலம் ரிசப்ஷன்” என்றான்.

“ஏம்ப்பா..! மண்டபத்தில் கல்யாணம் வேண்டாங்கறே?” என்றார் கதிர்காமர்.

“ஏன் மச்சான் அப்படிச் சொல்றீங்க” என்றார் விஜயசாரதி.

“ஆமா மச்சான்” என்று உறுதியாக என்றான் இனியன்.

“காரணம் சொல்லப்பா!” என்றார்கள்.

“ஆமா..! சடங்கு செஞ்சு தாலி கட்டிகிட்டவங்க எல்லாம் வாழ்ந்துட்டாங்களாக்கும்” என்று முணுமுணுத்துக் கொண்டான். ஆனால் வெளிப்படையாக சொல்லவில்லை.



விஜயசாரதிக்குக் கொஞ்சம் புரிகிறாற்போல இருந்தான். அவன் திரும்பி அந்தக் குறிப்பிட்ட மனிதரை ஆய்ந்து நோக்கினான். அவருக்கும் முகம் சுருங்கியது.

அன்று மாலை!

கதிர்காமர் தன்அலுவலக அறையில் அமர்ந்து ஏதோ கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அறை வாசலில் நிழலாடியது. கதிர்காமரிடம் அப்படி அம்மையப்பன் நேரடியாக வந்து பேசமாட்டார். அன்றைக்குப் பேசினார்.

“கல்யாண சமயத்துல நான் எங்காவது டூர் கிளம்பறேன்” என்றார்.

கதிர்காமர் புரியாமல் பார்க்க அம்மையப்பன் குரல் தழுதழுக்க,

“உங்களுக்குப் புரியலையா? எங்கே நான் தாரை வார்த்துக் கொடுக்கறப்ப கல்யாண மேடையில் ஏற்க வேண்டி வருமோன்னுதானே என் மகன் சடங்கே வேண்டாங்கறான்” என்றார்.

குலுங்கிக் குலுங்கி அழுதார். முதன் முறையாக கதிர்காமர் மனத்தில் அம்மையப்பன் மேல் கொஞ்சம் பரிதாபம் தோன்றியது.

* * *

சுற்றிலும் நின்றவர்களெல்லாம் சிரித்தார்கள்!

குடத்துக்குள்ளே மோதிரம் தேடும் நிகழ்வு!

சாருலதாவும், இனியனும் கைகளை குடத்துக்குள் விட்டு மோதிரத்தை தேடினார்கள்!

அவன் கைக்குக் கிடைத்தது! சாருலதாவின் கரத்தைப் பிடித்து அழுத்தி அதில் வைத்தான். ஆனால் அவளோ திரும்பவும் அவன் கரத்திலே அழுத்தினாள். அவன் மீண்டும் அவள் கரத்தில் வைப்பதற்கு முயற்சித்தான். அப்போதுதான் அவள் அந்த வேலையைச் செய்தாள். 'நறுக்'கென்று கிள்ளி வைத்து விட்டாள்.

''ஏய்!'' என்று அவன் சத்தமாகவே சொல்லி விட்டான். அவள் திடுக்கிட அவன் லேசாக அசடு வழிய சுற்றிலும் எல்லோரையும் பார்த்து 'கிள்ளறா' என்றான்.

அவன் நடிப்பதாக நினைத்து எல்லாரும் சிரிக்க அவனும் அப்படியே இருக்கட்டும் என்று விட்டு விட்டான் கடைசியில் அவன் கையில்தான் இருந்தது.

அதற்குப் பிறகு அவர்களை மணமக்கள் அறைக்கு அழைத்து சென்றார்கள். தனிமை கிடைத்தது. அவன் அங்கேயிருந்த கட்டிலில் மெல்லச் சாய்ந்து கொண்டான்.

''சடங்கு சடங்குனு படுத்தறாங்க இல்லே?'' என்றான். அவள் புன்னகைத்தாள்.

''பிரண்ட்ஸ் கிட்டே போய் வேண்ணா கொஞ்ச நேரம் பேசிட்டு வா'' என்று அனுப்பி வைத்தான்.

லேசாகக் கண்களை மூடிக் கொண்டான். மணவறையில் நிகழ்ந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது என்னதான் பதிவுத் திருமணம் என்று இனியன் பிடிவாதம் பிடித்தாலும் பெரியவர்கள் பேசி அவன் மனதைக் கரைத்து விட்டார்கள்.



இனியன் மனத்தில் என்ன இருக்கிறதென்று விஜய சாரதிதான் கண்டு பிடித்தான். மெதுவாகத் தன் தந்தையிடம் சொன்னான்.

''அப்பா.. ஏன் மச்சான் பிடிவாதம் பிடிக்கறாங்க தெரியுமா? அம்மையப்பன் மாமா மணவறையில் நின்னு தாரை வாங்குவார் இல்லே அது பிடிக்கலை'' என்றான்.

கதிர்காமருக்கும் அது இப்போது புரிந்தது. அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்ததை அம்மையப்பன் ஒரு புறம் நின்று கேட்டு விட்டார். அப்போது மட்டுமல்லாமல் அதற்குப் பிறகும் அவர் கேள்விப்பட்ட விஷயங்களில் ஒன்று பிரபாவதிக்கும் அவரோடு நின்று மணவறையில் தாரை வாங்கும் சடங்கு செய்ய விருப்பம் இல்லை என்பதுதான்.

''துரோகத்தை எப்படிச் சபையில நிறுத்திப் பெருமைப்படுத்தறது?'' என்று கேட்டார் என்று சாருலதா தன் அத்தையிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டார்.

முதன் முறையாகத் தன் வாழ்க்கையின் பொருளற்ற தன்மையை உணர்ந்தார். தனக்கு என்ன வேண்டும் தனக்கு என்ன கிடைக்கும் என்று யோசித்துக் கொண்டு பொறுப்புகளில் இருந்து கழன்றே தான் வாழ்ந்த வாழ்க்கையின் பலன் இப்போது புரிந்தது. தனக்காகப் பரிந்து பேச ஒருவர் கூட இல்லை என்பது புரிய மன மொடிந்து போனார். முதல் முறையாகத் தான் கடந்து வந்த பாதை குறித்து ஒரு வெளியாளாக நின்று யோசித்தார். அப்போதுதான் புரிந்தது. தன்னைச் சுற்றி

யிருக்கிறவர்கள் எல்லாம் பெருந்தன்மையாகத் தன்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதே பெரிய விஷயம் என்று தன்னையும் மனிதனாக மதிக்கிறார்களே என்று ஆறுதல் படுத்திக் கொள்ள வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டார்.

''நீ நிற்க வேண்டாம்'' என்று அவர்கள் சொல்லு முன்னே தானே தலையிட்டுத் தன் மரியாதையை காப்பாற்றிக் கொள்வோம் என்று முடிவு செய்துதான் கதிர்காமரிடம் போய் அழுதார்.

கதிர்காமர் அப்போதைக்கு ஏதோ பேசி அனுப்பி விட்டார். ஆனால் பாவமாகப் போய்விட்டது.

கதிர்காமரே ஆளவந்தாரிடமும் இனியனிடமும் பிரபாவதியிடமும் பேசிச் சமாதானப்படுத்தினார். ''ஊரு மெப்புதலை...'ன்னு ஒண்ணு இருக்கில்லே..'' பொறுத்துக்குங்க என்கிற ரீதியாகப் பேசினார். அவர்களும் அதை மனதார ஒத்துக் கொண்டார்கள். ஆனால் இன்று காலையில் மீண்டும் ஒரு திருப்பம் நேர்ந்தது.

தாரை வார்த்துக் கொடுப்பதற்காக கதிர்காமரும், தாயம்மாவும் சாருலதாவின் அருகில் நிற்க, வாங்கிக் கொள்வதற்காக வந்து நின்றார்கள் அம்மையப்பனும், பிரபாவதியும் ஒரு நிமிடம்தான் போயிருக்கும். அம்மையப்பன் சட்டென்று மேடையை விட்டு இறங்கி ஆளவந்தாரிடம் போய் நின்றார்.

''நான் இவனுக்குன்னு என்ன செய்திருக்கேன். ஒன்றுமேயில்லை நீங்களும், அக்காவுமே வந்து



நில்லுங்க'' என்று அவர்கள் இருவரையும் கொண்டு வந்து நிறுத்தி விட்டு முன் வரிசை நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டார்.

எந்த விதத்திலும் இனியனுக்குத் தான் தகுதியுள்ள தந்தை அல்ல என்பதை அவர் ஊரறிய ஒத்துக் கொண்டாற் போலத் தோன்றியது. பேருக்கு ஓரிருவர் ஏதோ பேசினார்களே தவிர பெரிதாக யாரும் எதிர்க்கவில்லை.

இப்போது நினைக்கையில் இனியன் முகத்தில் லேசான சலனம் தோன்றியது. அம்மையப்பன் என்கிற என் தந்தை தன் தவறு உணர்ந்ததை சபையறிய ஒத்துக் கொண்ட கணம் என்று தோன்றியது. ஆனால் அவன் மனதில் வெற்றிப் பெருமிதம் தோன்றவில்லை. ஒரு வெறுமைதான் தோன்றியது.

இப்போதைக்கு யார் எதை ஒத்துக் கொண்டாலும் மனோரஞ்சிதம் சித்தியும், அம்மாவும் ஏமாற்றப் பட்டார்கள் என்பது உண்மைதானே! அது மட்டுமில்லாமல், பிரிந்திருந்த இரண்டு குடும்பங்களுக்கிடையே இப்போதும் உறவில் சிக்கல்கள் இருக்கின்றன. அந்த உறவுச் சிக்கல்களை மிக லாவகமாகக் கையாண்டு தங்கள் குடும்ப வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டிய பொறுப்பு அவனுக்கும், சாருலதாவுக்கும் இருந்தது புரிந்தது.

சாருலதா திரும்பி வந்தாள்.

''போடி.. போய் மாப்பிள்ளைகிட்டே பேசுன்னு துரத்தறாங்க'' என்றாள்.

அவன் புன்னகைத்தான். ''உட்கார்!'' என்
கட்டிலைத் தட்டிக் காட்டினான்.

''அதான் ஆயுளுக்கும் அடிமையாயிட்டயே! இ
வாவது கொஞ்ச நேரம் ஃப்ரியா இருக்கலாம்னு
தேன்'' என்றான் குறும்பாக.

அவள் செல்லமாக முறைத்தாள்.

''இப்படியே பாத்தே... நான் பொறுப்பில்லே. கி
கிறுப்பா இருக்கு'' என்றான் அவன் மறுபடியும் மெ
அவள் கையைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டான்.

''ஏன்.. சாரு?'' என்றான்.

''ம்...''

''இல்லே..! இந்த சேகரும், பிரேமாவும் என்
அஸ்திரம் விட்டாங்கன்னு தெரியலே...! அதுக்கா
வாவது சீக்கிரம் தேனிலவு கிளம்பணும்'' என்றான்
சொல்லி விட்டு அவள் முகம் சிவப்பதை ஆர்வத்துடன்
பார்த்தான்.

# 15



தேனிலவில் இருந்தார்கள்!

இனியனும், சாருலதாவும் பொதுவாகவே இயற்
கையை ரசிப்பவர்களாக இருந்தார்கள். அதனால் அந்தப்



பண்ணை வீடு அவர்களுக்கு மிகவும் ஏற்றதாக
இருந்தது.

ஆளவந்தார் தன் தங்கைக்கு என்று வாங்கிக்
கொடுத்த இடம் இது. ஐந்து ஏக்கர் பரப்பளவில் தென்னந்
தோப்புக்கள் சூழ அது அமைந்திருந்தது. ஒரு வார
விடுமுறையில் அங்கே தங்கிக் கொள்ள முடிவெடுத்
தான் இனியன்.

இரண்டு மணி நேரப் பயணம் என்றால் இடை
யிடையே அம்மாவைப் போய்ப் பார்க்கலாம் என்றாலும்
வசதிதான். அல்லது அம்மாவும் கூட இடையிலே வந்து
பார்ப்பதற்கு வசதியான இடமாக அது இருந்தது.

இரண்டு மூன்று நாட்கள் இருந்தது. பேச்சும்
சிரிப்புமாகப் பொழுதுகள் கழிந்தன. என்றாலும் எதிர்கால
வாழ்க்கைக்கான திட்டமிடுதலும் நடந்தது. திருமணம்
விமரிசையாக நடந்த விதம் பற்றியும் பேசிக் களித்
தார்கள்.

இனியனுக்கு இப்போது புதிதாக ஆர்வம் கிளம்பி
இருந்தது. சித்தர்களின் மருந்து முறைகளைப் பற்றிய
ஆய்வுதான் இது. நிறைய சித்தர்களின் பாடல்களைப்
படிக்க ஆரம்பித்திருந்தான். மருந்துகள் தயாரிப்பது
பற்றியும் நிறையப் படிக்க ஆரம்பித்திருந்தான்.

சாருலதா கூட கேலி செய்ய ஆரம்பித்திருந்தாள்.
''ஆஹா! என்ன இது! அடிக்கடி சித்தர்களைப் பற்றியே
பேசறீங்க! சாமியாராயிடுவீங்க போல இருக்கு.''

அவன் சிரித்துக் கொள்வான். ''இல்ல சாரு நம்மோட
மாற்று மருந்துத் துறையில நிறைய விஷயங்கள்

இருக்கு. ஆனா சரியான நிருபணங்கள் இல்லே. ஆ... மட்டும் நடந்தா நம்ம சித்த மருத்துவம் கூட பெரி... அளவிலான இயற்கையின் கொடையா இருக்கும். ஆனா அது பெரிய முயற்சியா இருக்கும்...'' என்றான்.

இளமாலை நேரமாக இருந்தது. வீட்டைச் சுற்றி இருக்கிற செடிகளின் ஓரமாகப் போய் நின்றா... சட்டென்று சிரித்தான்.

''முதல்.. முறையா உங்களைப் பார்க்கறப்போ... தோட்டக்காரன்னு நினைச்சேனே...'' என்றாள்.

"அதானே!" என்ற இப்போது முறைத்தான். அவ... கலகலவென்று சிரித்தபடி தொடர்ந்தாள்.

"ஆமா..! அப்பவும் எனக்கும் சந்தேகத்தான் பத்த... தோட்டக்காரர் மாதிரித் தெரியலயேன்னு! ஆனா... நீங்கதான் முண்டாசு கட்டியிருந்தீங்களே'' என்றாள்.

''ஆமா! காஞ்ச இலைகள்.. தலைல விழுந்த... கட்டியிருந்தேன்'' என்றான். அவளின் முகத்தை ஆர்வ... மாகப் பார்த்தபடி சொன்னான்.

''ம்.. உன்கிட்டே சொல்ல மறந்துட்டேனே.. ஒரு வழியா சேகர்கிட்டேயிருந்து அவரு என்ன மந்திரம் போட்டு நம்ம கல்யாணம்கற மாங்காயைப் பறிச்சயென்னு கேட்டேன்'' என்றான்.

''ம் நானும் பிரேமாகிட்டே இருந்து கறந்துட்டேன்'' என்று அவளும் சிரித்தாள்.

சேகர் பிரபாவதியிடம் பேசிவிட்டு வந்த பிறகு கொஞ்சம் கவலையில் ஆழ்ந்தான். பிரபாவதி இந்தச் செய்தியை முழுமையாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்



கொள்ளவில்லை என்பது புரிந்தது. அப்படியான அவரின் பிரதிபலிப்பில் இருக்கிற நியாயமும் புரிந்தது. ஆனாலும் ஒரு அஸ்திரத்தைப் பிரயோகித்து விட்டுத் தான் வந்தான்.

''அம்மா! உங்க குடும்பத்துக்கும், அவங்க குடும்பத்துக்குமான பிரச்சினையை மட்டுமே நீங்க யோசிக்கறீங்க! உங்களுக்கு முன்னாலேயே இதைப் பத்தி யோசித்து அதனாலேயே தன்னோட விருப்பத்தைக் கூட மனசுக்குள்ளே ஒரு ஓரமாப் போட்டுப் புதைச்சுட்டானே உங்க மகன் அவன் தியாகத்தைப் பத்தி யோசிச்சீங்களா?'' என்றான்.

அஸ்திரத்தைப் பிரயோகித்தவன் மேற்கொண்டு எந்த விவாதமும் செய்யாமல் கிளம்பிவிட்டான். அந்தக் கேள்வி அந்தத் தாய் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது. 'உண்மைதானே! பெரியவர்களின் மோதலுக்காக இந்த சின்னஞ்சிறுசுகள் எதற்காகத் தங்கள் விருப்பங்களை தியாகம் செய்ய வேண்டும்?' என்ற கேள்வி உள்ளே எழும்பிக் கொண்டே இருந்தது.

சேகர் அதோடு சும்மாயிருக்கவில்லை. நேராகப் போய் ஆளவந்தாரைப் பார்த்தான். கதிர்காமருக்கு இந்தக் குடும்பத்தோடு நட்புக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், மூன்று தலைமுறைகளாக நடை பெறுகிற இந்தப் பங்காளிச் சண்டையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது என்று அவனுக்குத் தெரியும்.

ஆளவந்தாரைச் சமாளிப்பதுதான் கடினமாக இருந்தது.

''சின்னஞ்சிறுசுக...! வயசுக் கோளாறு. ஏதோ அட்ராக் ஆகறதுதான். அதுக்காக அவங்க இஷ்டத்துக்கு கல்யாணம் பண்ணி வச்சுட முடியுமா? இதெல்லாம் கதையில படிக்கறதுக்கு நல்லா இருக்கும். வாழ்க்கையில நடக்கற விஷயம் இல்லே புரியுதா'' என்றார் கொஞ்சம் கோபமாக.

உண்மையில் கோபமாகப் பேச வேண்டும் என்றுதான் நினைத்தார். ஆனால் என்ன இருந்தாலும் ஒரு பேராசிரியர் அதிலும் இனியனின் நண்பன் வேறு. அதனால் கொஞ்சம் அடக்கியே வாசித்தார். ஆனால் சேகர் விடாக்கண்டனாக இருந்தார்.

''மாமா! இனியனின் மாமா நீங்க. அதே உரிமையில் நானும் உங்களை மாமான்னுதான் இத்தனை நாளாக் கூப்பிடறேன். இப்ப நான் ஒரு கேள்வி கேட்கறேன். கோபிச்சுக்காதீங்க! உங்க வீட்ல நடந்த விஷயங்கள் மட்டும் சினிமாக் கதை மாதிரி இல்லையா? அம்மையப்பன் ஐயா திட்டம் போட்ட அம்மாவை ஏமாற்றினது. கரெக்டா உங்களைப் பழி வாங்கணும்கறதுக்காக கதிர்காமர் ஐயா வீட்ல மனோம்மா கூடத் தொடர்பு வச்சுகிட்டது. இதெல்லாம் கதைல வந்த மாதிரி இல்லையா அதைக் காட்டிலும் கொடுமை என்னன்னா ரெண்டு விட்டுக்கும் ஊருக்குள்ளே பெரிய வீடுனு பேரு. ஆனா.. ரொம்ப ஈஸியா ரெண்டு குடும்பத்துப் பெண்களையும் பயன்படுத்திகிட்டாரே.. இதுக்கெல்லாம் காரணம் தெரியுமா?''

ஆளவந்தார் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு ''அதையும் நீயே சொல்லு...!'' என்றார்.



''காரணம்.. என்ன தெரியுமா? மூணு தலை முறையா உங்க குடும்பத்துக்கு நடுவில இருந்த பகை. அந்தப் பகையை அவரு பயன்படுத்திக்கிட்டு சிந்து பாடிட்டாரு!'' என்றான்.

அவர் மோவாயைத் தடவிக் கொண்டார். ''ஆமா.. அது அப்படித்தான்'' என்றார் மெல்லிய குரலில்.

''ஏமாத்தறவங்க எந்த அளவுக்குத் தப்பு பண்றாங்களோ... அதே அளவுக்கு ஏமாந்து போறவங்களும் தப்பு செய்யறவங்கதான்.''

''இப்ப அதுக்கு என்னப்பா பண்ணச் சொல்றே?''

''உங்களால முடிஞ்ச ஒண்ணை பண்ணலாம். அம்மையப்பன் தான் இந்தப் பிரச்சினைக்கு இருக்கிற முட்டுக்கட்டை. அவரை ஒரு பொருட்டா மதிச்சு ரெண்டு குடும்பமும் ஒண்ணு சேர்ற அருமையான வாய்ப்பை இழந்துராதீங்க...'' என்றான் சேகர்.

''மறுபடியும் நடைமுறைக்கு ஒவ்வாத விஷயங்களத்தான் பேசறப்பா... நீ! நீ சொல்ற கதைக்கே நானும் வரேன். என் மருமகளை நான்தான் தாயும் தந்தையுமா இருந்து வளர்த்திருக்கேன். அவனுக்கு ஒரு பொண்ணைப் புடிச்சுப் போச்சுன்னா. அதுக்காக கூலிக்காரன் வீடா இருந்தாலும் படியேறிப் பொண்ணு கேட்க நான் தயார்தான். ஆனா.. மூணு தலை முறையா எதிரா இருக்கிற அந்த வீட்ல படியேறி நான் பொண்ணு கேட்க முடியுமா? வேணும்னா.. இனியனை அந்தப் பொண்ணைக் கூட்டிகிட்டுப் போய் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கச் சொல்லு. அப்புறம் நான் சப்போர்ட்

குடுக்கறேன். இதையே நான் சொல்லக் கூடாது. ஆனா
அவன் விருப்பப்படி நடக்கட்டும்கறதுக்காகச் சொ
றேன்'' என்றார்.

பாசத்தில் கிடந்து அல்லாடுகிற அவர் மனத்தை
புரிந்து கொண்டார் சேகர். சொல்லப்போனால் இவரு
தானே அவனும் எதிர்பார்த்தான்.

''ம்க்கும்! நீங்களும் நடக்காத கதையாத்தானே
சொல்றீங்க? அவன் ரெண்டு குடும்பத்துக்கும் பிர
சினை வரக்கூடாதுங்கறதுக்காக தன்னோட ஆசை
யையே விட்டுக் கொடுக்கறதுன்னு முடிவு பண்ணிட்
டான். அவனுக்கு உங்க கௌரவமும், அவங்கம்மா
கௌவரமும்தான் முக்கியமாம்'' என்றார் புகார் சொல்
லுவது போல.

ஆளவந்தார் முகத்திலும் நெகிழ்ச்சி தெரிந்தது.
மனமும் அசைந்து கொடுத்தது. இதுதான் சரியான சமயம்
என்று சேகர் மேலும் பேசினார்.

''சொல்லப் போனா.. சாருலதாவும் உங்களுக்கு மக
முறைதான் மாமா.. நான் சொல்றதைக் கேளுங்க! நீங்க
நேரடியாப் போய்க் கேக்க வேண்டாம். நான் மூவ்
பண்றேன். எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் கதிர்காமர்
அய்யாவும் இந்தத் தொடர்ச்சியான பகையுணர்ச்சியால
சடைஞ்சு போய்த்தான் கிடக்கறாராம். இந்தத் தலை
முறையோட இந்தப் பகை முடியட்டும்கிறார்'' என்
றார்.

ஆளவந்தாரிடம் இருந்து ஒப்புதலுக்குத் தலை
அசைவு கிடைத்ததுமே சேகரும், பிரேமாவும் சுழன்று



செயல்பட்டார்கள். மீண்டும் அதையெல்லாம் தங்
களுக்குள் பேசிப் பேசி மகிழ்ந்தார்கள் இனியனும்,
சாருலதாவும்.

''சேகரைப் போல ஒரு பிரண்ட் கிடைக்க நான்
குடுத்து வச்சிருக்கணும்'' என்று நெகிழ்ந்தான் இனியன்.

அவர்கள் இருவரும் இணைந்ததில் எல்லாருக்கும்
ஏன் அம்மையப்பன் உள்பட எல்லாருக்கும் மகிழ்ச்சி
தான் என்றாலும் அம்மையப்பருக்குள்ளே இன்னொரு
விஷயமும் நடந்து கொண்டிருந்தது. அதுதான் திரும்பிப்
பார்த்தல். தன் வாழ்க்கையில் சுயநலம் மட்டுமே
இருந்தது என்பதையும், தன்னை இப்போதும் உற
வினர்கள் வேண்டாத ஒரு பிரகிருதியாகத்தான்
நினைக்கிறார்கள் என்பதும் அவரால் ஜீரணிக்க முடியாத
விஷயமாகத்தான் இருந்தது. அது மட்டுமல்ல இனியன்
இப்போதும் அவரை வீட்டுக்கு அழைக்கவில்லை.
ஆனால் அதே சமயம் தானாக அவர் தங்கள் வீட்டுக்கு
வந்து செல்வதைத் தடுக்கவில்லை.

அவ்வப்போது வந்து சென்றார். பிரபாவதியிடம்
மன்னிப்புக் கேட்டார். சுமுகமாகப் பேசினார். ஆனால்
வீட்டுக்கு வருகிறேன் என்று அவரும் கேட்கவில்லை.
சாருலதாவிடம் அதற்கொரு விளக்கம் சொன்னான்.

''சாரு..! என்ன இருந்தாலும் மனோம்மா பாவம்
தனிமையில் இருப்பாங்க! உன்னப் பிரிஞ்ச ஏக்கம்
இருக்கும். அதனாலதான் இந்த அம்மையப்பன் இருக்
காரே எங்க அப்பா... அவரு அங்கயே இருக்கட்டும்னு
விட்டிருக்கேன். எல்லாருக்கும் உள்ளே உறுத்தல்கள்

இருந்தாலும் மேலோட்டமாகவாவது எல்லாம் சுமுகமாய் போறது நல்லதுதானே..'' என்றான்.

சாருலதா புன்னகைத்தாள் தொடர்ந்து சொன்னாள். ''நாம இணைஞ்சுதுல சில பேருக்கு நஷ்டம்'' என்று.

இனியன் புருவத்தை உயர்த்தினான்.

''இல்லே! ஊரு ரெண்டு பட்டா கூத்தாடிக்கு சந்தோஷம்ன்னு சில பேரு ரெண்டு பக்கமும் ஏத்தி விட்டுட்டு இடையில காசு, பணம் சலுகைனு என்ஜாய் பண்ணிட்டிருந்தாங்க..! அவங்களுக்கெல்லாம் பாவம் இப்ப வேட்டு..'' என்றான்.

இனியன் செல்லமாக முறைத்தான். ''ஏய்.. இது உனக்கே நியாயமா.. இருக்கா?'' என்றான்.

"எது?'' என்று அவள் விழித்தாள்.

"இப்படி... ஊரைப் பத்தியெல்லாம் பேசிகிட்டிருக்கியே! என்னைக் கவனிக்கிறியா?'' என்றான்.

இப்போது முறைப்பது அவள் முறையானது. ''நீங்க பேசறது மட்டும் நியாயமா?'' என்றாள்.

இப்போது விழிப்பது அவன் முறையானது அவன் தொடர்ந்தான்.

"இங்க வந்ததுல இருந்து உங்களைக் கவனிக்கிறது தவிர வேறென்ன நடக்குதாம்?''என்றாள்.

''ஓ.கே..! ஓ.கே,.!''என்று அவன் சரணடைந்தான். சுற்று முற்றும் பார்த்தான். யாருமில்லை என்றவுடன் வேறுவிதமாக சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தினான்.



சற்றுக் கழித்து மனைவியைத் தன் முன்னே நிறுத்தி ''ஏன்.. சாரு..! உனக்கு வேலைக்கு ஏதாவது போற ஐடியா இருக்கா?'' என்று.

அவள் இல்லையென்று தலையாட்டினாள். ''நம்ம வீட்டு சொத்து கணக்கு வழக்குகள்ல உதவி செய்யணுமாம். அத்தை அப்பவே சொல்லிட்டாங்க! அங்கயும்.. மனோ அத்தையும் நான் இல்லாம தவிச்சுப் போயிருவாங்க! அவங்களுக்கும் இந்தக் கணக்கு வழக்கு எல்லாத்தலயும் உதவி செய்யணும்'' என்றாள்.

அவன் சற்று யோசித்தான். ''ஏன்.. சாரு! இப்படிச் செய்யேன்! பேசாம மனோம்மா வீட்டுல ஒரு ஆபீஸ் போட்டு! அங்கே ஒரு ஹாஃப் எ டே போயிடு! அவங்களுக்கும் உன்னோட இருந்த மாதிரியும் இருக்கும்! எல்லாமே கட்டுக்குள்ளயும் இருக்கும்'' என்றான்.

அவள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். ''ஐய்யோ..! இது நல்ல ஐடியாவா இருக்கே?'' என்று.

''ஏங்க!'' என்று அவன் மார்பில் சாய்ந்தபடி செல்லம் கொஞ்சினாள்.

''ம்..!'' என்றாள் கிறக்கப் பார்வையுடன்.

"நீங்க வேற அரசுக் கல்லூரியில இருக்கீங்க.. மாறுதல்.. வந்தா'' என்றாள் கவலையுடன்.

அவன் அவள் கன்னம் கிள்ளினான்.

''கவலையேப்படாதே! கதிர்காமர் மாமாவும், ஆளவந்தார் மாமாவும் இணைந்தது மட்டுமல்லாம... கல்விச் சேவையில இறங்கப் போறாங்க! கிராமப்புறத்து மாணவர்களுக்கு எவ்வளவு குறைவான கட்டணத்துல

முடியுமோ அவ்வளவு குறைவான கட்டணத்துல கல்வி குடுக்கப் போறாங்க! கல்விக் குழுமம் ஒன்று ஆரம்பிக்கப் போறாங்க! கல்லூரி கூட ஆரம்பிக்கிறாங்க! ஐயாதான்.. முதல்வர் அதனால அரசுப் பணியில இருந்து வெளிய வர்றேன்'' என்றான்.

''ஐய்யோ! அப்ப வீட்ல அடிக்கடி பாக்கலாம்.''

''அதுதான் இல்லே! சொந்தமா ஒரு கல்வி நிறுவனம்கறப்போ நிறைய நேரம் கொடுக்கணும்! ஏன்னா.. பெரிய மாமா, சின்னமாமா ரெண்டு பேருமே லாப நோக்கம் இல்லாம செய்யணும்னு நினைக்கறாங்க! நல்ல காரியம்! கண்டிப்பா நம்ம பணி இருக்கணும்'' என்றான்.

''பெரிய மாமா.. சின்னமாமா..!'' என்று ஒருமுறை வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள் சாருலதா.

''ஆமா! என் மாமன் மகளே!'' என்று சிரித்தான்.

''சரிங்க..! அத்தை மகன் அத்தானே'' என்று அவளும் வாரினாள்.

இனியன் சாருலதாவைத் தன் தோளில் சேர்த்துக் கொண்டு அவள் கைகளை மெல்ல நீவியபடி சொன்னான். குரலில் ஆழமும், நெஞ்சத்தில் சிந்தனையும் நிறைந்திருந்தது.

''சாரு! இன்னமும் கிராமங்கள் மேம்படலை! குக்கிராமங்கள்ல இன்னமும் நிலைமை அப்படியேதான் இருக்கு! விஷியஸ் சக்கரம்னு சொல்லுவாங்க. பொருளாதாரத்துல சொல்லுவாங்க! ஒரு விஷச்சுழலுன்னு. அந்தச் சுழலை எங்க உடைக்கலாம்னா.. கல்வி அறிவு



கொடுக்கறதுனாலதான். எந்த நாடு இருக்கிற மனித வளத்தை நல்லாப் பயன்படுத்திக்கறதோ அந்த நாடுதான் முன்னேற முடியும். நம்மகிட்டே மனித வளம் நிறைய இருக்கு! ஆழ்ந்த அறிவும் இருக்கு! ஆனா.. மெத்தனமும் இருக்கு! பொறுப்பில்லாத் தன்மையும் கூடவே இருக்கு! அதைச் சரி செய்தா.. நாடே எழுந்து நிற்கும்'' என்றான்.

''போச்சுரா..''என்றாள் அவள் சோகமாக.

''ஏன்?'' என்றான்.

''ஊரைப் பற்றிப் பேசினதுக்கே சோகப்பட்டீங்களே..! நாட்டைப் பற்றி ஆரம்பிச்சுட்டீங்க'' என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான். ''சரி.. ஊரோட வளர்ச்சி பற்றியும் பேசுவோம். நாட்டோட வளர்ச்சி பற்றியும் பேசுவோம். நாட்டோட வளர்ச்சி பற்றியும் பேசணும்.. ஆனா.. இல்லே..! இப்போதைக்கு நம்மளைப் பற்றி மட்டுமே பேசுவோம் என் கனவில் வந்த கவிதையே'' என்றான்.

அவள் மௌனத்துடன் அவனைப் பார்க்க அவன் தொடர்ந்தான். ''ஆமா சாரு முதல் முதல்ல.. உன்னைப் பார்த்து ஈர்ப்பு ஏற்பட்டப்ப நான் நினைச்சுருக்கேன் இது நடக்கற காரியமாப் படலைன்னா சில சமயங்கள்ல கனவில் ஒரு கவிதை தோணும். ஆனா காலையில் மறந்துடும்! அந்த மாதிரின்னு நினைச்சேன்.''

அவள் குறுக்கிட்டாள்.

''அப்படியில்லீங்க... சார்! சில சமயம் கனவுல வந்த கவிதை எழுத்து மறையாம அப்படியே நினைவில்

இருக்கறதும் உண்டு. உங்களுக்குத் தெரியுமா கணி மேதை ராமானுஜத்துக்கு கனவிலதான் தீர்வு கிடைக்குமாம். ஒரு புகழ் பெற்ற எழுத்தாளருக்கு கனவில கிளைமேக்ஸ் கிடைக்குமாம். எத்தனையோ கவிஞர்களுக்குக் கனவில வரிகள் வருவது உண்டு" என்றாள் சாருலதா.

"ஆமா...!" என்று அவள் முகம் நோக்கிக் குனிந்தவன் பிறகு சொன்னான்.

"ஆமா..! நீ கனவில் வந்த கவிதைதான்! ஆனால் என் நெஞ்சில் நிலைத்து ஆத்மாவில் கலந்த கவிதை" என்றான்.

அவன் சொன்னதை அங்கேயிருந்த தென்னை மரங்களும், சலசலத்து ஓடும் ஆறும் கூட அங்கீகரித்தன. நிலவு குறும்பான புன்னகையுடன் மேகத்தில் கொஞ்சம் ஒளிந்தும் எட்டிப் பார்த்தும் ரசித்துக் கொண்டிருந்தது. அவர்களின் கலகலச் சிரிப்பில் கவிதை கலந்திருந்தது. காதல் கனிந்திருந்தது.